# ஐந்தாம்
# உலகத் தமிழ்
# மாநாடு



# ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு

## பத்திரிகைகளின் கண்ணோட்டம்

வெளியீடு :

இயக்குநர்,
செய்தி, மக்கள்-தொடர்பு,
செய்தி, சுற்றுலா (தமிழ்ப்) பண்பாட்டுத்துறை,
தமிழ்நாடு அரசு.

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

**நூலக நூல்கள்**

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

**பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை**

# முன்னுரை

மதுரை மூதூரில் 1981 ஜனவரி திங்களில் நிகழ்ந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு, என்றும் நின்றிலங்கும் வரலாற்றுப் புகழ் மண்டிய தகுதி படைத்தது. இம்மாநாடு குறித்துத் தமிழக ஏடுகளும் பிற மாநிலங்களி லிருந்து வெளியான பிறமொழி ஏடு களும் கருத்துத் தெரிவித்துள்ளன. மாநாட்டின் எழுச்சியையும் மாண்பையும் பலவாறு எடுத்தியம்பின இவ்வேடுகள். பத்திரிகைகளின் கண்ணோட்டத்தில் உலகத் தமிழ் மாநாடு எவ்வாறு இருந்த தென்பதைத் தமிழ்ப் பெருமக்களுக்குத் தெரிவித்து, நிலையான மேற்கோளுக்கு வழிவகுக்கும் விருப்பத்தில், இச்சிறு நூலை வழங்குகிறோம்.

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

# உலகத் தமிழ் மாநாட்டுக்கு அனைவரும் வாருங்கள்!

## முதலமைச்சர் அழைப்பு

சென்னை 4-1-1981

### தமிழர் சிறப்பு

பழந்தமிழ் நாட்டு மக்களே தொன்மையான இனம் என்பதும் உலகின் மூத்த மொழிகளில் தமிழ் மொழியே என்றும் நின்றிலங்கும் திறன் கொண்டு திகழ்வதென்பதும், தமிழர்கள் உலகின் எல்லாப் பகுதிகளிலும் பரவி வாழ்கின்ற சிறப்பிற்குரியவர் என்பதும் வரலாற்றுப் பேருண்மையாகும்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன் நெடுங்காலத்துக்கு முன்பே தமிழர்கள், தேக்கு, மயில்தோகை, யானை, அரிசி, சந்தனம் முத்து, அகில், மிளகு, பருத்தி ஆடை முதலிய பொருட்களை எகிப்து, சிரியா, பாபிலோனியா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கடல் வாணிபத்தில் சிறந்து நின்றனர். நீண்ட காலமாகத் தமிழர்கள் கிழக்கிந்தியத் தீவுகள் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மோரீஸ் தீவு, பிரிட்டன் முதலிய நாடுகளில், குடியேறி தங்கள் மொழி, நாகரீகம் பண்பாடு இவற்றைக் காத்து வரும் பெருமையுடன் வாழ்கின்றனர்.

### மொழி வளம்

மொழி வளத்திலும் கலைநயத்திலும் தமிழ் மொழியின் சிறப்பு இன்று உலகெங்கிலும் பரவும் வகை செய்யப்பட்டுள்ளது.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று அறுதியிட்டு உரைத்திட்டார் மகாகவி பாரதியார்.

''தமிழுண்டு தமிழ் மக்களுண்டு. இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு. தமிழ் என்று தோள் தட்டி ஆடு! நல்ல தமிழ் வெல்க என்றே தினம் பாடு.''

—என்று தமிழுக்கு நாம் ஆற்ற வேண்டிய தொண்டினை நினைவுபடுத்தினார், புரட்சிக் கவிஞர் பாரதி தாசனார்.

## வரலாற்றில் நிலைத்திடும் மாநாடு

1981-ஆம் ஆண்டு ஜனவரி 4-ம் நாள் முதல் 10-ம் நாள் வரையில் பழம்பதியான கூடல் மாநகரான மதுரையில் 5-வது உலகத் தமிழ் மாநாடு கோலாகலமாக வரலாற்றில் நிலைத்திடும் வண்ணம் பெருமையுடன் நடைபெற இருக்கிறது.

மாநாட்டு நிகழ்ச்சிகள் சிறப்புற நடந்திடவும் மாநாட்டையொட்டிய பல்வேறு செயல்கள் திறம்பட நிறைவேறிடவும் பல குழுக்களை அரசு அமைத்துள்ளது.

## சிறப்பு மலர்

மாநாட்டை ஒட்டி தமிழ் அறிஞர்கள் கலைமேதைகள் உலகத் தமிழ் ஆராய்ச்சியாளர்கள் தீட்டிய கட்டுரைகள் கலைப்படைப்புகள் அடங்கிய சிறப்பு மலர் ஒன்று வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## சிலைகள்

மதுரை மாநகரின் பல்வேறு பகுதிகளில் தமிழறிஞர்கள் மற்றும் தமிழ் வளர்த்த சான்றோர்கள் ஆகியோருக்கு சிலைகள் அமைக்கப்பட்டு உள்ளன.

என் அன்பிற்குரிய தமிழ்ப்பெருமக்களே! தமிழகம் எடுத்திடும் இந்த ஒப்புயர்வற்ற மாநாடு நோக்கி அணி திரண்டு வருவீர்!

கூடிடுவீர், கூடல் மாநகரில்!

எந்தக் காரணம் இருப்பினும் அவைகளை ஒதுக்கி வைத்துவிட்டுத் தமிழ் அன்னைக்குப் புகழ் சேர்க்க வாருங்கள்!

மாநாட்டில் பங்குபெறும் பேராளர்களை தமிழகத்தின் தலையாய நகரங்கள், பண்பாட்டு சிறப்புடைய பகுதிகள், கோயில்கள், சுற்றுலா மையங்கள் ஆகியவற்றுக்கு அழைத்துச் செல்ல சுற்றுலா ஒன்றை, அரசு ஏற்பாடு செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு பொதுமக்களின் சீரிய ஒத்துழைப்புடன் இம் மாநாடு சிறந்தோங்கிட எல்லா வகையாலும் முயற்சி மேற்கொண்டுள்ளது.

### நமது கடமை

தமிழுக்கு செய்யும் நமது கடமையை அஞ்சலியை காலத்தாலும் மறைக்க இயலாது.

வாருங்கள்! தமிழை வளமாக்க!

வாருங்கள்! தமிழர் தம் மாண்பைக் காக்க.

வாருங்கள்! தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்க!

உங்கள் வரவை நம்பிக்கையோடு எதிர்பார்க்கும் உங்களின் உடன் பிறந்தோன்.

## தினபதி மலேசியா 5-1-1981

### மதுரைத் தமிழ் மாநாடு

தமிழ் நாட்டிலே தமிழுக்கு உலகளாவிய முறையில் விழா.

அங்கயற்கண்ணி அம்மை அருளாட்சி செய்யும் மதுரை மாநகரில் ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நேற்று கோலாகலமாக ஆரம்பமாயிருக்கிறது.

முன்னர் சென்னையிலே இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை அறிஞர் அண்ணா நடத்தியபோது ஏற்பட்ட தமிழ் உணர்ச்சியும் எழுச்சியும் இன்று மதுரையிலே காணப்படுகின்றன.

வீதியெங்கும் தமிழ் மணக்கிறது. பார்த்த இடமெல்லாம் தமிழின் பொலிவும் தமிழ்க் கலாசாரத்தின் சிறப்பும்

பளிச்சிடுகின்றன. பல்வேறு நாட்டு அறிஞர் கூட்டத்தின் பேச்சொலி கேட்கிறது.

தமிழ் பழைமையானது; இனிமையானது. எவரையும் ஈர்த்திழுக்கும் சக்தி படைத்தது. அதன் தனிச் சிறப்பு அது.

அதனாலே தான் தமிழர் அல்லாதவர்களும் தமிழ் ஆய்வில் ஈடுபடுகிறார்கள். தங்கள் நாடுகளிலும் தமிழ் மாநாட்டை நடத்த விரும்புகிறார்கள்.

மூன்றாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸில் நடந்தது. தமிழுக்குக் கிடைக்கும் இந்தப் பெரு மதிப்பு வேறெந்த மொழிக்குக் கிடைக்கிறது ?

தமிழ்மொழி மற்றவர்களை ஈர்த்து இழுத்து ஒன்று படுத்துகிறது. ஆனால் தமிழ் மொழியைப் பேசுவோர் குறிப்பாகத் தமிழர் தமக்குள் முரண்டு பிடித்துக்கொண்டு பிரிந்து செல்வதையே தமது வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

மதுரைத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை அறிஞர் அண்ணாவின் அருமைத் தம்பிகளில் ஒருவரான புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் தமிழ்நாட்டு முதலமைச்சர் என்ற வகையில் ஏற்பாடு செய்திருக்கிறார்.

பொறுப்பிலே பிறந்தது தமிழ். தென்னன் புகழிலே கிடந்தது தமிழ். சங்கத் திருப்பிலே இருந்தது தமிழ். வைகை ஏட்டிலே தவழ்ந்தது தமிழ். அதை யாராலும் அமுக்கவும் முடியாது. அழிக்கவும் முடியாது. வரலாறு காட்டும் உண்மை இது. தமிழ், தெய்வத் தமிழ் என்று சும்மாவா சொல்லப்படுகிறது?

மதுரைத் தமிழ் விழா எதிர்வரும் 10ஆம் தேதிவரை நடைபெறப் போகிறது. இந்த மாநாடு தமிழை வளர்ப்பதற்கு மட்டுமின்றி. தமிழின் பேரிலாவது தமிழரை ஒன்று பட வைப்பதற்கும் உதவ வேண்டும்.

சங்க காலத்து நூல்களினின்றும் தமிழ் வளர்ந்து, புது வடிவம் பெற்று, புதுப் புது வகை இலக்கியம் படைக்கும் ஆற்றலையும் அடைந்தது. ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட'' தமிழ்நாடு வரலாற்றுச் சிறப்புடையதாகும். தெள்ளு தமிழ்ப் புலவர்கள் பல தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தனர்.

''நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்'' நமது செல்வம். அந்நாளில் தமிழர் தேசம் பலவும் புகழ் வீசி கலை ஞானம் படைத்தனர். அந்நாடுகளில் தமிழ் நாட்டு நாட்டிய மரபு புதுப்பொலிவு பெற்று இன்றைக்கும் உலகெங்கும் புகழ் மணம் பரப்பி, அனைத்துக்கும் தாயகம் ஆகவும் விளங்கி வருகிறது. இத்தகைய சிறப்புகள் பெற்ற தமிழ் மொழி இலக்கியம் இந்திய வரலாற்று ஆராய்ச்சிக்கும் ஆதாரமாக விளங்கி வந்துள்ளன. எந்தெந்த நாட்டின் பண்டைய வரலாற்றில் தமிழ் படிமங்கள் கூறியுள்ளன போன்ற தொல் பொருள் வரலாற்று சிறப்புள்ள ஆராய்ச்சிகள் வளர்ந்து வருகின்றன. இது போற்றத்தக்கது. பல்வேறு மொழிகளின் வளர்ச்சியுடன் ஒப்புநோக்கும் வண்ணம் மொழியியல் ஆராய்ச்சியும் முக்கியமானதே. மொழி உறவு மக்களின் நட்புறவை பலப்படுத்துவதுமாகும். இதைப் போன்று விஞ்ஞான மொழியாக தமிழை வளர்ப்பதற் கென்று தனித் துறையை உலகத் தமிழ் மாநாடு தோற்றுவித்து வளர்க்கு மானால் அதுவே மாநாட்டின் வெற்றிச்சின்னமாக விளங்கும். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்யும் விழாவேண்டற் பாலதே. அது உணர்வினைத் தோற்றுவித்து, ஊக்கத்தை வளர்க்கும். ஊக்கத்தை ஆக்கப் பணியாக மாற்றுவதில்தான் பெருமை நிறைவுறும். ''செந்திறந்த தமிழோசையாவது சொல்லாகி'' என்று போற்றும் தமிழ் மாநாட்டில் ''வானத்து அறிந்ததனைத்து அறிந்து வளர் மொழி வாழியவே'' என்று விண்ணியல் விஞ்ஞான வாழ்த்துக்கூறும் நன்நாள் மலரட்டும்.

## தினமணி சென்னை 4-1-1981

### உலகத் தமிழ் மகாநாடு

உலகில் எந்த மொழிக்கும் இல்லாத ஒரு தனிச் சிறப்பு தமிழ் மொழிக்குண்டு. தமிழ் பதத்தில் 'இலக்கு' என்றால் குறிக்கோள் என்ற பொருளாகும். உயர் வாழ்வு, பண்பு, கலாச்சாரம் இவைகளைக் குறிக்கோளாக்கி சீரிய சிந்தனை யில் பாய்ந்த கருத்துக்களை எழுத்து வடிவில் வடிப்பதே 'இலக்கியம்', இப்படி மேம்பாடு கொண்ட சிந்தனையின் வடிவங்களையே இலக்கியம் என்று அறுதியிட்டுக் கூறுவது தமிழுக்குச் சேர்ந்த ஒரு அரிய பெருமைதான். ஒரு நாட்டில் மக்கள் உயர் பண்புடன் வாழ்கிறார்கள் என்றால் அதற்கு அவர்கள் கையாளும் மொழியே அறிகுறியாகும். உதாரண மாகத் திருக்குறளை எடுத்துக் கொள்ளலாம். இதற்குப் பாயிரமாய்த் தோன்றிய திருவள்ளுவ மாலையில்,

மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியும்
மும்முரசு முத்தமிழ் முக்கொடியு மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல தாரன்
பாமுறைதேர் வள்ளுவர் முப்பால்—

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தாங்கள் ஆண்ட நாடுகளில் திருக்குறள் போதித்த நீதியை கடைப் பிடித்தார்கள். அது அவர்கள் முடிமேல் மாலைபோல் அணிசெய்து விளங்கியது—எனப் பகர்கின்றது. தமிழ் நாட்டின் சிந்தனையை அறிய, தமிழ் இலக்கிய ஆராய்ச்சி அவசியம். இதனை உணர்ந்தே உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் தமிழ் அறிஞர்களைக் கூவி அழைத்து, கூட்டம் நடத்தி, அவரவர் ஆராய்ச்சிக் கருத்துக்களை விளம்பச் செய்ய எடுத்த ஒரு நற்பணியே உலகத் தமிழ் மகாநாடு. இக்கருத்துக்கு வித்தூன்றியவர் யார்? பலர் உள்ளத்தில் தேங்கிக் கிடந்தாலும், செயல்படுத்தியது புரொபசர் ஸேவியர் தனி நாயகம் அவர்களே. அக்டோபர் மாதம் 28-ம் தேதி 1961 ஆண்டு அப்பெரியார் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளேட்டுக்கு அளித்த பேட்டியில் மற்ற கலைகளைப் போல், ஏனைய மேற்கத்திய மொழிகள்போல், தமிழ் மொழியும் புதுமைப்படுத்தப்பட வேண்டும். ஒரு தமிழக சர்வகலாசாலைதான் இம்முயற்சிக்கு அடிகோல வேண்டும். இம்மகாநாடு சென்னையே கேந்திரமாகக் கொள்ள வேண்டும் எனக் கூறி, அண்ணாமலை பல்கலைக் கழகத்தைச் சார்ந்த திரு. தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களின் உதவியையும் நாடினார். வாய் மொழியாகவும், கடிதங்கள் மூலமாகவும் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து திரு. சி. சுப்ரமணியம் அவர்களிடம் தொடர்பு கொண்டார். இதற்கிடையே திரு. சுப்ரமண்யம் அவர்களுக்கு மத்திய மந்திரி சபையில் அழைப்பு வந்துவிடவே இக்காரியம் அப்படியே நின்றது. சற்றேனும் ஊக்கத்தைத் தளர விடாமல் திரு தனிநாயகம் 1963-ம் ஆண்டில் முதலமைச்சராயும் கல்வி மந்திரியாயுமிருந்த திரு. பக்தவத்சலத்தை அணுகி அப்பொழுது டெல்லியில் நடக்கவிருந்த கீழ்த்திசை மாநாட்டைப் பயன்படுத்திக் கொண்டு, பூனாவில் வடமொழி, பிராகிருதம் மொழித் தலைவராய் விளங்கிய ஆர். என். தண்டேகருக்கு அம்மகாநாட்டில் பங்கு கொள்பவர் தமிழ் வளர்ச்சியில் அக்கறை கொண்டவராயிருந்தால் விவரங்களை அனுப்புமாறும் கேட்டுக் கொண்டனர். ஆனால் நாட்கள் கடந்தனவேயன்றி செயலில், முன்னேற்றமே காண முடியவில்லை. எப்படியோ, பல இன்னல்களுக்கிடையே ஜனவரி மாதம் 7ம் தேதி 1964ம் ஆண்டு, டெல்லி கேந்திரத்தில் முதல் மாடி அறையில் திரு. மீனாட்சி சுந்தரம், திரு. தனிநாயகம் இவர்கள் கனவு பலித்து ஒரு தமிழ் வளர்ச்சிக் கூட்டம் நடந்தேறியது. புரொபசர் பில்லோசாட், புரொ தாமஸ் பாரோ ஸ்வெல்பெயில் போன்ற வெளிநாட்டு அறிஞர்களும் பங்கேற்றனர்.

ஒருமுறை வெற்றி வாய்ப்பைக் கண்ட பின் நழுவ விடுவார்களா? ஊக்கம் உந்த உலகத் தமிழ் மகாநாட்டை நடத்தியே தீர வேண்டும் என்று தீவிரமாய்ச் செயலில் இறங்கி வெற்றியும் கண்டார் திரு தனிநாயகம். இம்முயற்சியில் தமிழகத்து திரு சுப்பய்யாவின் பங்கு கொஞ்ச நஞ்சமல்ல.

## தினபதி மலேசியா 6-1-1981

### மாநாடு ஆரம்பமானபொழுது வானொலியில் சங்கே முழங்கு

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு தமிழக ஆளுநர் ஜனாப் சாதிக் அலி, ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை மதுரை மாநகரில் ஆரம்பித்து வைத்து, விழா நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது, அன்று மாலை 6-15 மணி முதல் 6-30 வரை சென்னை வானொலி நிலையம் ஒலிபரப்பிய திரைப்படப் பாடல்கள், மதுரைத் தமிழாராய்ச்சி மாநாட்டு விழாவுக்கு வாழ்த்துக் கூறுவதாகவே அமைந்திருந்தது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின்: ''சங்கே முழங்கு! சங்கே முழங்கு! சங்கே முழங்கு! எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!

''எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார். இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே! நாங்கள் ஆண்மைச் சிங்கத்தின் கூட்டமென்றும் சிறியார்க்கு ஞாபகம் செய்-முழங்கே சங்கு!'' என்னும் சீர்காழி கோவிந்தராஜன் பாடிய பாடல் ஒலிபரப்பப்பட்டது.

இரண்டாவது பாடல் டி. எம். சௌந்தரராஜன் பாடிய ''சங்கம் வளர்த்த தமிழ் நீயல்லவா'' என்பது ஆகும்.

மூன்றாவதாக ஒலிபரப்பான பாடல் பி.பி. ஸ்ரீநிவாஸ்—சுசிலா பாடிய ''மதுரை நகரில் தமிழ்ச் சங்கம்'' என்றபாடல். இப்பாடல்கள் அனைத்தும் மிகமிகப் பொருத்தமாகவே அமைந்திருந்தன.

தினகரன் இலங்கை 4-1-1981

## மதுரைத் தமிழ் விழா

பொருப்பிலே பிறந்துதென்னன் புகழிலே கிடந்து, சங்கத் திருப்பிலே இருந்து, வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதையாம் தமிழணங்குக்கு இன்று மதுரையம்பதியிலே பெரு விழாவெடுக்கின்றார்கள். தமிழ் இனியது; தமிழுக்கு அமுதென்று பெயர்—அந்தத்தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர். தமிழ் அன்னைக்கு விழாவென்றால் மகிழாத தமிழ் நெஞ்சமும் உண்டா? தமிழ் நாடு தனி ஏற்பாடுகளேயே செய்திருக்கின்றது. அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடெனினும், இது உலகத் தமிழ் விழா என்றே கொள்ளவேண்டும். உலகெங்கணுமுள்ள தமிழ் அறிஞர்கள் கூடி ஆராய்கிறார்கள். எமது நாட்டிலிருந்தும் பேரறிஞர்கள் சென்றிருக்கின்றார்கள். தமிழ் பற்றிய பல விவகாரங்கள் இங்கே ஆராயப்படும். அறிஞர்கள் கூடும் இதே வேளையில் கலைச் சிறப்புமிக்க இன்னும் பல நிகழ்ச்சிகளும் நடைபெறவுள. மகாநாடு நடைபெறும் தமிழ் நாடே விழாக் கோலம் பூண்டிருக்கிறது. இங்குள்ள தமிழ் மக்கள் அனைவருக்குமே தமிழ் நாடு செல்ல வேண்டும் என்ற ஆவல் உண்டு. ஆனால் இது சாத்தியமா? விழா வெற்றி காண வேண்டும்; தமிழணங்கின் புகழ் மேலும் பெருக வேண்டும் என்று வாழ்த்தி அஞ்சலி செய்து எமது உள்ளக் கமலங்களை அவள் திருவடிகளில் சமர்ப்பிப்பதே நாம் செய்யக் கூடிய ஒன்றாகும்.

தினகரன் இலங்கை 7-1-1981

## மதுரை மாநகர் எங்கணும் தமிழர் பெருவெள்ளம்

தமிழ் எனும் அமுதின் தீஞ்சுவை தேர்ந்திட அகிலமெங்கணுமிருந்து அலையலையாக வந்து குவிந்துள்ள தமிழர்தம் கூட்டமும் வடவேங்கடம் முதல் தென்குமரியாயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்தினின்றும் அலையலையாகத் திரண்டு வந்துள்ள தமிழர் தம் பெருங்கூட்டமும் அன்பால், மொழியால் பண்பாட்டால் ஒன்று கலந்து சங்கமமாகிச் சமுத்திரம்போல் காட்சியளிக்க அங்கயற் கண் அம்மையும், ஆலவாய் அப்பனும் எழுந்தருளியிருக்கும் மதுரை மாநகரிலே தமிழணங்கின் திறம் நயக்கும் தமிழர் தம் பெருவிழா தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பண்டைய தமிழர் வாழ்ந்ததெப்படி? கண்காட்சி தரும் விளக்கம்

## மதுரை மாநகர் எங்கும் களிப்பு

தமிழன் என்றோர் தனி இனம் உண்டு. தமிழ் என்றோர் தனி மொழியுண்டு.

தமிழனுக்கு என்றோர் தனி கலாசாரம் உண்டு. தனிக் கலை உண்டு. தனி இலக்கணம் உண்டு.

மதுரையில் ஏற்றப்பட்டுள்ள அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு என்னும் தமிழ்க்கொடி இதனை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

பண்டைய தமிழகத்து மன்னர்களான சேரன், சோழன் பாண்டியன் ஆகிய மூவேந்தர்களின் ஆட்சி மதுரையில் மீண்டும் ஏற்பட்டுவிட்டதா ?

மதுரை மகாநாடு இந்தச் சந்தேகத்தை ஏற்படுத்தும் அளவுக்கு தமிழின் இனிமையை அள்ளிக் கொட்டியுள்ளது.

தமிழாராய்ச்சி மகாநாட்டின் முக்கிய அம்சம் காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் ஆராய்ச்சி கருத்தரங்கு.

இந்தக் கருத்தரங்கில் உலககெங்கிலும் இருந்து மதுரைக்கு வந்துள்ள 650 தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்கின்றார்கள்.

இங்கு தமிழின் இனிமை பற்றி எழுதப்பட்ட 250 ஆராய்ச்சிக் கட்டுரைகள் பற்றி ஆராயப்படும்.

அங்கு எடுக்கப்படும் பெரும்பாலான முடிவுகள் உலகில் உள்ள தமிழ்மக்களின் நிலையை எடுத்து இயம்பும்.

மதுரை குதிரைப் பந்தயத் திடலில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட மகா நாட்டில் பட்டிமன்றம், கருத்தரங்கு, கலையரங்கு, மகளிர் அரங்கு ஆகியவை தொடர்ந்து நடைபெறும்.

இவை பொது மக்களுக்கு மிகவும் ரசிப்பினையும் படிப்பினையும் ஏற்படுத்தக்கூடியவை.

இன்று 5ம் தேதி ஆரம்பிக்கப்பட இருக்கும் பொருட் காட்சி மிகவும் முக்கியத்துவம் பெற்றது. இதனை கர்நாடக முதலமைச்சர் திரு. குண்டுராவ் இன்று ஆரம்பித்து வைக்கிறார்

இந்தப் பொருட்காட்சி 30 பரப்பு நிலத்தில் புறம்பாக அமைக்கப்பட்டுள்ளது.

மிகுந்த அலங்காரங்களுடன் இந்தப் பொருட்காட்சி அரங்கு 50 இலட்ச ரூபாய் செலவில் நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

தமிழர்கள் பண்டைய யுகத்தில் எப்படி வாழ்ந்தார்கள்?

படிப்படியாக அவர்கள் எப்படி நாகரிக வாழ்வுக்குப் புகுந்தார்கள்!

இப்போது எப்படி வாழ்கின்றார்கள் ?

இந்த கேள்விகளுக்கு பொருட்காட்சியின்போது பதில்கள் கிடைக்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் இலக்கியத்தில் இந்த அங்காடிகள் எப்படி வர்ணிக் கப்பட்டுள்ளார்களோ அவ்வாறே இந்தப் பொருட்காட்சி யிலும் அங்காடிகள் நடமாடுகின்றனர்.

இங்கு மொத்தம் 62 அங்காடியர் இருக்கின்றனர். பண் டைய யுகத்து அங்காடியரைப்போல் அதே உடையில் இவர்கள் காட்சி தருகின்றனர்.

## தினபதி மலேசியா 5-1-1981

இன்று ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மதுரை மாநகரில் ஆரம்பமாகின்றது. காலத்தால் பழைமையாகவும், கட்டிளமை குன்றாத தீரத்தால் இளமையாகவும்—இன்னும் வடிவாலும் வனப்பாலும் வளமாகத் திகழ்வதையே ''தொன் மைசால்'' எனும் சிறப்புச் சொல்லால் குறிப்பிடுவர்.

இத்தகைய சீரும் சிறப்பும், தொன்மையும், தொல் புகழும்மிக்க மாமதுரையிலேதான் இன்று தமிழ் அறிஞர் களும் ஆராய்ச்சி வல்லுநர்களும் ஒன்று கூடுகின்றார்கள்.

அக்காலத்தே தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாகத் திகழ்ந்த நகரங்களில் மதுரை மாநகருக்குப் பெரும் சிறப்பு

உண்டு. ''மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று, யானை கட்டிப் போரடித்த அழகான தென் மதுரை'' எனப் புகழப் பெற்ற நகரம் மதுரை மாநகரமாகும்.

பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டு, பாண்டிய நாட்டின் ராஜதானியாகத் திகழ்ந்தது மதுரை. இம்மதுரையில் தான் கபிலர், பரணர், நக்கீரர் என்ற பல சான்றோர்கள் ஒன்று கூடிச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள்.

ஆன்ற புலமைமிக்க அப்புலவோர்கள் அவையிலேதான் வழக்காட வந்த விரிசடைப் பெருமானின் வெஞ் சினத்தைக் கண்டும் ''நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்று நக்கீரர் என்ற புலவர் நீதி உரைத்தார். தமிழ்ச்சங்கத்தில் பல நூல்கள் அரங்கேற்றப்பட்ட சிறப்பும் கூடல் மாமதுரைக்கு உண்டு.

தேன் மதுரச் செந்தமிழும், தேவாரப் புகழ்கொண்ட திருக்கோயில்களும் செறிந்துள்ள தமிழகத்தில், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமை மதுரை மாநகருக்குத்தான் உண்டு.

பன்னெடுங் காலத்திற்கு முன்பே தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என முச்சங்கங்கள் அமைத்துத் தமிழ் வளர்த்த பண்டைய நகரம் மதுரை.

சங்கப்புலவர்கள் அமர்ந்திருந்த தலைச் சங்கத்திற்குத் தலைமை தாங்கி, தமிழ் வளர்த்தவர் சுந்தரர்க்கு அடியெடுத்துக் கொடுத்த சுந்தரேஸ்வரர் தலைச்சங்கப் புலவர் என்ற வரலாறு படைத்தது மதுரை.

அதிகமானுக்கு நெல்லிக் கனி கொடுத்த ஔவையும், சேரமான் பெருவழுதி என்ற மன்னன் மயிற்தோகையாலான சாமரம் வீச, சயனித்திருந்த மோசிக் கீரனாரும் நட்புக்கு இலக்கணம் வகுத்த பிசிராந்தையாரும், சடையப்ப வள்ளலே தாம்பூலம் மடித்துக் கொடுக்கத் தமிழ் பாடிய கம்பனும், நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் ஆரம் படைத்த இளங்கோ அடிகளும், காக்கைப் பாடினியும், காவற்பெண்டும் போன்ற பெண்பால் புலவர்களும் மதுரைச் சங்கத்தே வீற்றிருந்து தமிழ் வளர்த்த சான்றோர்களாவர்.

இச்சங்க காலப் புலவர்களிடையே ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றுப் புகழ் பெற்ற ஈழத்துப் பூதந்தேவனார், முரஞ்சியூர் முடிநாகராயர் பன்னாகர் போன்ற புலவர்கள் சங்கத்தே வீற்றுத் தமிழ் வளர்த்த வரலாறு படைத்தது நமது ஈழ மணித் திருநாடு ஆகும்.

இம்மரபின் வழி வழியே இன்று ஈழத்துத் தமிழ்அறிஞர்களும், தமிழ் அமைச்சர்களும், அயராது தமிழ் வளர்க்கும் படைப்பிலக்கிய வாதிகளும், பத்திரிகையாளர்களும் ஈழத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில்—ஐந்தாவது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கூடுகின்றார்கள் கூடல் மதுரையில்—

விபூதி, உருத்திராட்சம், சடாமுடி என்னும் மூன்றையும் தரித்து மூர்த்தி நாயனார் அரசாண்ட பட்டினம் மதுரை

அரிமார்த்தான் பாண்டியன் ராஜன் காலத்தில், மாணிக்கவாசக சுவாமிகள்'' தென்னவன் பிரம்மராயன்'' என்னும் பெயருடன் அமைச்சராக இருந்து அரசாட்சி செய்தார்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் சமண சமயத்துக்குப் பிரவேசித்த கூன் பாண்டியனுடைய வெப்புநோயை ''மந்திரமாவது நீறு'' என்னும் திருநீற்றுப் பதிகம் ஓதி தீர்த்தருளிய திருப்பதி.

''போக மார்த்தப் பூண்முலையாள்'' எனும் திருநள்ளாற்றுப் பதிகம் எழுதியிருந்த ஏட்டைக் கனலிடைஇட்டு வேகாமல் எடுத்து—''வாழ்க அந்தணர்'' எனும்திருப்பாசுரம் எழுதிய ஏட்டை வைகை ஆற்றிலே விட்டு நீரை எதிர்த்துச் செல்லும்படியாகச் செய்து—

கூன் பாண்டியனுடைய கூனை நீக்கி அவரையும் சைவராக்கி, பாண்டிய நாடு முழுவதும் அன்று பரவியிருந்த சமண இருளைப் போக்கி சைவத்தின் பொற்சுடரின் ஒளி பரப்பியதும் இம்மதுரையில்தான்.

திருஞான சம்பந்த நாயனாரால் திருநீறு சாத்தப்பட்டு கூன் நிமிர்ந்த பாண்டியன் ''நெடுமாற நாயனார்'' என்னும் பெயருடன் பல்லாண்டு காலம் ஆட்சி நடத்தியது இத்திருப்பதியில்—

சைவ சிரோண்மணியான மங்கையர்க்கரசியாரும், மந்திரியாகிய ''குலச் சிறை நாயனாரும்'' தேவாரத் திருப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடப்படும்படியான பெரும் பாக்கியத்தைப் பெற்று வாழ்ந்திருந்த நகரம் மதுரையாகும். பஞ்ச சபைகளில் ஒன்றாகிய ரஜத சபை எனும் வெள்ளியம்பலத்தை உடைய ஸ்தலம் மதுரை.

மீனாட்சி அம்மனின் ஆலயத்தை நடுநாயகமாக வைத்து மதுரையின் அழகான வீதிகள் அமையப் பெற்ற இத்தலத்திலேதான் சுந்தரேஸ்வரர் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்தருளினார்.

வந்தியம்மன் என்ற செம்மனச் செல்விக்காக வைகை யாற்றில் அணை கட்டும் பொருட்டு சுந்தரேசுவரர் பிட்டுக்கு மண் சுமந்த கதையும் இங்குதான் நடைபெற்றது.

தமிழ் நாட்டின் இரண்டாவது தலைநகரமாக வர்ணிக்கப்படும் மதுரை மாநகரின் சிறப்புக்கள் சொல்லும் தரத்தன்று. மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் பொன்தாமரைக் குளமும், ஏழுசுரங்களை எழுப்புகின்ற இசைத் தூண்களும் இன்றும் பௌவியமாகக் காத்துப் போற்றி பாதுகாத்து வருகின்ற பொக்கிஷங்களாகும்.

நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தை ஞாபகப் படுத்தும் வகையில் இரண்டு பர்லாங் தூரத்தில் திருமலை நாயக்கர் மஹால் அமைந்துள்ளது.

நெடுதுயர்ந்த வெண் பூச்சுத் தூண்களோடு, பரந்து விரிந்த அப்பிரம்மாண்டமான அரண்மனையில் அறங்கூறும் அவை, கலை நிகழ்ச்சி மண்டபம், ஆடற்கலையைப் பார்த்து ரசிக்கும் உப்பரிகை, அந்தப்புரம் ஆகிய பல்வேறு சிறப்பு அமைப்புகளோடு வான் உயர்ந்து நிற்கின்றது அன்று வாழ்ந்த திருமலை நாயக்க மன்னரின் மஹால்.

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் ஆரம் படைத்த தமிழ் நாட்டில், அக்காப்பியத்தில் இடம்பெற்ற கண்ணகியும், கோவலனும் வலம் வந்த வீதிகளாக மதுரை மாநகரை வர்ணிக்கின்றார் இளங்கோ அடிகள்.

இவ்வாறு பல்வேறு சிறப்புகளைக் கொண்ட மதுரை மாநகரில்தான் ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இன்று கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

தமிழும் தெலுங்கும் சேர்ந்திருந்த சென்னைப் பட்டணத்தைப் போலன்றி—சீரிளமைத் திறன் வியந்து பாடும் செந்தமிழ் அரசாண்ட நகரமாக பண்டைக் காலத்துப் பாண்டிய மன்னர்களின் தலைநகராக விளங்கியது பசுமைமிகு வயல்கள் சூழ்ந்த மாநகர் மதுரை.

அன்று மூவேந்தர்களும் தமிழ் வளர்த்தார்கள் எனச் சான்றுகள் கூறுகின்றன. அத்தகைய மகோன்னதமான வரலாற்றுக்குப் பின்—

இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை சென்னை மாநகரில் அறிஞர் அண்ணா சிறப்பாக நடத்தி வைத்தார். அன்று வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீறுகொள் கூட்டம். உள்ளத்தால் ஒருவராக ஒன்று பட்டுப் படைத்த பெருவிழாவிற்குப் பின்

இன்று—

மக்களின் மகோன்னத ஆதரவைப் பெற்று அரசுகட்டில் ஏறிய பொன்மனச் செம்மல்—புரட்சித் தலைவர் தமிழக முதலமைச்சர் ''மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்'' எம். ஜி. ராமச்சந்திரன் முன்னின்று நடத்துகின்றார் முத் தமிழ் மாநாட்டை.

ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை ஒட்டி வரலாற்றுப் புகழ் மிக்க வைகை யாற்றைப் போலவே, இலக் கியப் புகழ் மணக்கும் மதுரை இன்று விழாக் கோலம் பூண் டுள்ளது. பத்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் உலகின் பல திசைகளில் இருந்தும் கூடல் மதுரையில் கூடியுள்ளார்கள்.

கோலாகலமாக இன்று ஆரம்பமாகின்ற ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சிறப்புறுவதற்குப் புரட்சித் தலைவரை தானைத் தலைவராகக் கொண்ட தமிழக அமைச் சர்கள் அயராது உழைத்து வருகின்றனர். சுமார் 13.5 கோடி ரூபாய்களைத் தமிழக அரசு செலவு செய்து நடத்தும் இம்மாநாட்டின் மூலம் மதுரை மாநகரம் நிரந்தரமான பல சிறப்புக்களைப் பெறப் போகின்றது.

ஐந்தாவது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் மூலம் மூன்று தமிழ்ச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் நான் காவது தமிழ்ச் சங்கம் ஒன்றை அமைக்கப் போவதாக தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அறிவித்துள்ளார். எதிர் காலத் தமிழ் வளர்ச்சிக்கு இந்தப் புதிய தமிழ்ச் சங்கம் ஆற்றப் போகும் பணி அளப்பரிய சேவையாக அமையும் என எதிர்பார்க்கிறார்கள் தமிழ் அறிஞர்கள்.

## மக்கள் குரல் சென்னை 2-1-1981

### கூடல் நகரில் தமிழர் கடல்

மீனாட்சியின் நான்மாடக்கூடல் நகரை 'தமிழர்கடல்' கொள்ளப் போகிறது.

முதலிரண்டு தமிழ்ச் சங்கங்களை சீறிய கடல்கொண்டு சென்றது!

மூன்றாவது சங்கம், காலத்தில் கரைந்துவிட்டது. எம். ஜி. ஆர். ஆட்சி அமைக்கும் நான்காவது தமிழ்ச் சங்

கத்தை 'தமிழர் கடல்' மடியிலே ஏந்தி பாராட்டி சீராட்டு கிறது.

தமிழ் மாநாட்டின் போதும், அதற்குப் பிறகும், மீனாட்சி நகரம் புதுக்கோலம் புனையும்! சுற்றுப்புறத் தூய்மை அதன் அழகுக்கு அழகு சேர்க்கும்.

உலகத் தமிழர்களின் விழாவை கூடல் நகரிலே நடத்த முற்பட்ட முதல்வர் எம். ஜி. ஆரை பாராட்ட கடமைப் பட்டிருக்கிறோம்.

தமிழர் எடுக்கும் தமிழ் விழா வெல்லும். வெற்றிப் பாதையில் நடைபோடும்!

## மக்கள் குரல் சென்னை 7-1-1981

### புகழ்சேர்க்கும் உலகத்தமிழ் மாநாடு

நான்மாடக் கூடல் வரலாற்றிலே சனவரித் திங்கள் நான்காம் நாள். பொன் எழுத்துக்களால், பொறிக்கப்பட்ட திருநாள். ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் துவக்க நாள் மதுரைக்கு மட்டுமல்ல—மாபெரும் உலகிற்கே ஓர் நன்னாள். அலைகடல் நடுவுள் பலகலம் செலுத்தி அன்றைய தமிழகத் தின் சிறப்பைப் பரப்பிய நிலையை மாறி அலைகடல் கடந்த வர்களும்—அணைபுரண்ட வெள்ளமென தமிழகத்தை நோக்கி வந்துள்ளனர்.

என்று பிறந்தனள் என்று உணரா இயல்பினளான அன்னைத் தமிழுக்கு ஆவலுடன் விழா எடுக்கும் உலகத் தமிழ் மாநாடு—தமிழின் சிறப்பை-தமிழரின் சிறப்பைத் திக்கெட்டும் பரவச் செய்து வானில் சென்றெட்ட வைக்கும் சீர்மிகு நிலை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

'விருந்து' என்றால் 'புதுமை' என்ற பொருள் தமிழில் உண்டு. செல்விருந்தோம்பி வருவிருந்திற்கு காத்திருக்குதல் நன்மனம் படைத்தவன் தமிழன். விருந்து புறத்திருக்க தான் மட்டும் தனித்துண்ணும் பழக்கம்கிடையாது. அன்னைத் தமிழுக்கு அயராது பாடுபட்ட அறிஞர் பெருமக்களை ஆவ லுடன் வரவேற்க அண்ணாவின் வழி நடக்கும் இவ்வரசு செய்துள்ள ஏற்பாடுகள் தமிழின் பெருமைபோல் தமிழ்தனிச் சிறப்பு வாய்ந்தவை.

கடல் கடந்த நாடுகளிலிருந்து வரும் கன்னித் தமிழ் வீரர்களுக்கு எண்ணமும் செயலும் எப்போதுமே தமிழ்.

அன்னைத் தமிழின் சிறப்பை கண்டு, கேட்டு, உண்டு உயிர்த்து, மதுரையை விட்டுத் திரும்பிச் செல்லும்போது, தமிழ்நாட்டின் தனிச் சிறப்பைக் கூறும் சான்றுகளாகத் திகழும் சில வரலாற்றுச் சிறப்பு மிக்க—தலைத்தாய் களிநடனம் புரியும் இடங்களைப் பார்த்துச் செல்ல ''கலைச் சுற்றுலா'' ஒன்றிற்கும் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

'உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிதல்' புலவர்களின் சிறப்பு. மதுரை மாநகர் தமிழ் மாநாட்டிற்கு வருகை தந்து இருக்கும் முத்தமிழ் வித்தகர்களின் உள்ளங்களிலே இம் மாநாட்டின் சிறப்புகள் அழியா இடம் பெறும் எனக் கூறவும் வேண்டுமோ!

## தேமதுரத் தமிழுக்கோர் சிறப்புமிகு திருவிழா

தமிழுக்கு ஏற்றம் தரும் ஆண்டாக புத்தாண்டு அமைந்துள்ளது. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மாமதுரையில் தமிழ் மணத்தைப் பரப்பிய வண்ணம் 1981-ஆம் ஆண்டு மலர்ந்துள்ளது. ஆண்டாளின் திருப்பாவையும், மாணிக்க வாசகரின் திருவெம்பாவையும் இனிய காலை வேளையில் முழங்கும் மார்கழித் திங்களில் பாண்டிய நாட்டின் தலை நகரான மதுரையம்பதியில் தேமதுரத் தமிழுக்கு ஓர்சிறப்பு மிகு திருவிழா நடைபெறுகிறது. திருவிழா நகரான ஆலவாயிலில் தமிழுக்கு எடுக்கப் பெறும் விழா ஈடு இணையற்ற மாபெரும் ஒரு விழாவாகும். தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தமிழகத்திற்கும் மேலும் மேலும் ஏற்றத்தைக் கொணர கொண்டாடப் பெறும் கோலாகலத் திருவிழா இவ்விழா.

நமது அன்னை மொழியாம் தமிழினை ஆராய உலக நாடுகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் அனைவரும் மீனாட்சி பட்டனத்தில் குழுமியிருப்பது கவிஞர் பாரதி பல ஆண்டுகளுக்கு முன்பு நெடுநோக்குடன் கூறிய ஒரு மொழியை நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளது. 'தேமதுரத் தமிழோசை உலகம் எல்லாம் பரவும் வகை செய்ய வேண்டும்' என்று பாரதி பாட்டிசைத்திருக்கிறார்.

தேமதுரத் தமிழோசையை உலகம் எல்லாம் பரவ வகை செய்ய மதுரை நகரில் கூடியிருக்கும் உலகத் தமிழ் அறிஞர்களை தமிழக மக்களும் மதுரை மாநகர் மக்களும் 'வருக! வருக'' என வாழ்த்தி வரவேற்கின்றனர்.

உலகத்தமிழ் மாநாட்டை ஒட்டி அமைக்கப்பெற்றுள்ள ஐந்து தோரண வாயில்களும் புகழ் பெரிய மீனாவின் மதுரைக் கோட்டைக்கு எழில்மிகு அணிகலன்களாக விளங்குகின்றன. திருப்பாவையில் 'தோரண வாயில்கள்' பற்றி ஆண்டாள் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மதுரை மாநகரில் அன்னை தமிழுக்கு எடுக்கப்படும் விழாவை ஒட்டி பல வளர்ச்சி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு நகர் அழகுபடுத்தப்பட்டுள்ளது. அன்னை தமிழுக்கு நடத்தப்படும் அற்புதத் திருவிழாவினால் மாநகர் மதுரை புதுவலிவும் பொலிவும் பெற்று விளங்குகிறது.

உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் இந்த மங்கல வேளையில் சில சிந்தனைகள் எழுகின்றன. திருக்குறளை ஒரு தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என மதுரை மாநகராட்சி மன்றம் சில காலத்திற்கு முன்பாக ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதனை தமிழ்மாநாடு வலியுறுத்தி, அதைத் தேசிய நூலாக அறிவிக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நான் மாடக் கூடலில் தமிழுக்கெனத் தனிப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மும்முரப்படுத்தவும் தமிழ் விழாவில் ஆவன செய்ய வேண்டும். மாமதுரையில் பல்கலைக்கழகம் காண முதல் முயற்சிகளை மேற்கொண்ட கலைத் தந்தை திருகருமுத்து தியாகராசச் செட்டியார், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர்களாய் பணியாற்றி தமிழ் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது பாடுபட்ட டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர் மு.வரதராசனார் ஆகிய பெருமக்களுக்கு அஞ்சல் தலை வெளியிடவும் தமிழ் மாநாட்டில் அரசினரை வற்புறுத்த வேண்டும்.

''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என உலகுக்கு நல்லுரை வழங்கிய தமிழ்ப் புலவர்கணியன் பூங்குன்றனாரின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து அவரது வரலாற்றுக் குறிப்புகளையும் தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஒரு நூலாகத் தர உலகத் தமிழ் மாநாடு ஆவன செய்து உதவ வேண்டும்.

## குமரிக்கண்டம் கருத்துக்கு விருந்து !

''குமரிக்கண்டம்'' திரைப்படம் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகவே இருக்கிறது.

செயற்கை மாடல்களையும், இடிமின்னல் எழுச்சியையும் இணைத்து, கோர்வையான வரலாற்றைத் திரையில் உயிரோட்டமாகக் காட்ட முடியும் என்பதற்குக் குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்ட இந்தப் படம் சான்றாகும்.

அண்ட கோள்கள் மோதியதால் சிதறிய பகுதி பூமியாயிற்று என்பது பல யூகங்களில் ஒன்றாகும். அது ஒன்றே முடிவானதல்ல.

இருந்தாலும், ஒரு கோணத்தில் பூமிப் பந்து பிறந்த கதை காட்டப்படுவதில் கவர்ச்சி இருக்கிறது!

ஒட்டியிருந்த கண்டங்கள் ஏற்கப்பட்ட புவியியல் ஆராய்ச்சிக் கணிப்பாகும்.

லெமூரியாவும் குமரிக்கண்டமும் பழந்தமிழர் பண்பாட்டின் தொட்டில்களாக இருந்ததை அற்புதமாக வடித்திருக்கிறார் டைரக்டர் ப. நீலகண்டன் அவர்கள் !

வசனங்கள் இல்லை ; ''பின்னணி விளக்கம்'' வசனத்தில் வாராது! பொருத்தமான பாத்திரங்கள்! விழிகள் பேசும் ஈடில்லா மொழிச் சிறப்பு! பின்னணி வர்ணனையில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நடையழகு! ''ஜெயங் கொண்டான்'' பண்பட்ட தமிழ் உள்ளங்களைக் கொள்ளை கொண்டான்! அழுத்தம், ஏற்ற இறக்கம், குரலில் செழுமை அழகுக்கு அழகு சேர்த்தன!

''இது ஒரு தொடக்கந்தான், இன்னமும் நிறைய வரும்' என்று எம். ஜி. ஆர். சொன்னது இனிக்கும் செய்தி!

தொடர்புச் சாதனங்களில் மிகச் சிறந்தது கண்களுக்கு காட்டும் சாதனம்! நடந்ததை ''நடப்பதாக'' உயிரோட்ட ஈர்ப்பு சக்தியோடு விளக்குவது! படித்தவர்களும் பாமரர்களும் பொதுவாக ரசிப்பது!

தமிழர் வரலாற்றைத் திரையில் வடிக்கும் இந்தத் தொடக்கப்படம் இரண்டு ஆண்டுகள் மனப்பாடம் செய்யும் தலைவிதியைப் போக்கிய பாடமாக இருக்கிறது.

நாட்கள் மிகக்குறைவாக இருந்தாலும் ஒவ்வொரு கட்டத்திலும் எம். ஜி. ஆர். செழுமைப்படுத்த ஆலோசனை கூறினார் என்பது அவரது அவையடக்கம் காரணமாக வெளியே தெரிந்திருக்காது!

வெல்டன் என்று சொன்னால் தமிழறிஞர்கள் மன்னிப்பார்களாக! இப்படிச் சொல்வதும் தமிழ்தான்! ''நானறிந்த பத்திரிகைத் தமிழ்!''

## உலகத் தமிழ் மகாநாடு உணர்த்தும் சில புதிய ஆய்வுகள் :

இன்று காணப்படுவது போன்ற வடிவத்தை இந்தியா முன்பு கொண்டிருக்கவில்லை. கன்னியாகுமரிக்குத் தெற்கே இன்று காணப்படும் இந்துமாக் கடல் முன்பு ஒரு பெரிய நிலப் பரப்பாக இருந்தது. அது கிழக்கே பர்மா தொடங்கித் தெற்கு சீனா வரையிலும், மேற்கே ஆப்பிரிக்காவின் கிழக்கு தெற்குக் கரைகள் வரையிலும், வடக்கே விந்தியமலைவரையிலும் விரிந்திருந்தது. அந்த நிலப்பரப்புக்கு ஆங்கிலப் பௌதிக நூலார் லெமூரியா என்று பெயர் சூட்டினர். இதனைக் குமரிக்கண்டம் எனவும், கடல் கொண்ட தமிழகம் எனவும், இந்துமாக்கடலில் மூழ்கிப்போன ஒரு பெரும் நிலப் பகுதி எனவும் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். ஆகவே, தென்னாற்காடு தான் முதலில் தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்தை நிலநூல் வல்லார் தெரிவித்துள்ளனர். பூமியின் நடு கோட்டுப் பகுதியே முதலில் நிலமாக மாறியிருத்தல் வேண்டும் என்பது அவர்கள் கருத்து. பாறைகளின் பழமையை அவர்கள் இதற்குத் தக்க சான்றாகக் காட்டுகின்றனர். தமிழகத்தில் திருவண்ணாமலைக்கு அருகில் பழமையான பாறைகள் கிடைப்பதால் திருவண்ணாமலை மிகவும் தொன்மையான திருத்தலம் எனக் கொள்ளப்படுகிறது. ஆக, முதலில் தோன்றிய நிலப்பகுதியில் மனித இனமும் மொழியும் தோன்றியிருத்தல் வேண்டும். ஆதி மனிதன் தோற்றத்தின் முதலிடம் லெமூரியா என்றும், விலங்குகளிலிருந்தே மனிதன் தோன்றினான் என்றும் அறிவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். ''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்த குடி'' என்னும் தொடர் தமிழ்க்குடியின் தொன்மையை உணர்த்துகின்றது. ஆதி மனிதன் தோன்றிய லெமூரியா எனப்படும் குமரிக் கண்டத்தில் குமரிக்கோடு என்ற ஒரு மலை இருந்தது. பிற்காலத்தோர் அதற்கு மகேந்திரம் எனப் பெயரிட்டனர். இந்த மலையின் காரணமாகக் குமரி ஆறு (குமரித் தீம்புனல்) உண்டாயிற்று. மலையையும் ஆற்றையும் சுற்றி நாடு ஏற்பட்டது. குமரியும் அதைச் சார்ந்த நாடும் மலையும் குமரி நாடு எனப் பெயர் பெற்றது. ''வேங்கடம் குமரித் தீம் புனல் பௌவமென்று, இந்நான்கெல்லை தமிழக வழக்கே'' என்ற பழம்பாடலால் குமரி முனையின் இருப்பைத் தெரிந்து கொள்ளலாம். வரலாற்றாசிரியர்களான ஸ்டிராபோ (கி.மு. 74- கி.பி. 24), தாலமி (கி.பி. 119—161) ஆகியோர் குமரி முனையைப் பற்றிக் கூறியுள்ளனர். கி. பி. 77-ம் ஆண்டைச் சார்ந்தது என்று கருதப்படும் பெரிப்ஸ் என்னும் நூல் குமரி என்பதை ஒரு தீபகற்பமாகவும், துறைமுகமாகவும், யாத்திரைத் தலமாகவும் கூறுகிறது. ''பஃறுளியாற்றுடன் பன்

மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள'' என்று இளங்கோவடிகள் (சிலப்பதிகாரம்-காடுகான் காதை 19-20) கடலில் மூழ்கிய இந்தக் குமரிக் கண்டம் பற்றிக் கூறியுள்ளார். சிலப்பதிகாரத்துக்கு உரை கண்ட அடியார்க்கு நல்லார் கடலில் மூழ்கிய குமரிக் கண்டத்தின் பகுதிகளைப் பற்றி விவரித்துள்ளார். சங்க நூலாகிய கலித்தொகையும் மூழ்கிப் போன குமரிக் கண்டத்தின் தென்பகுதியைப்பற்றிக் குறிப்பிடுகிறது. கடல்கோள் காரணமாக, மேற்குக் கரையிலிருந்த முசிறி, கிழக்கே யிருந்த பாதளம், குமரி நாடு ஆகிய யாவும் சிதைவுற்றுக் கடலில் மூழ்கிவிட்டன.

தமிழரின் வரலாற்றுப் பாரம்பரியத்தை நினைவு கொள்ளத்தக்க வகையிலும், பண்டைத் தமிழரின் பழமையான நாகரிகத்தையும், தமிழ் மொழியின் தொன்மையையும் அனைத்து மக்களும் கண்டுகளிக்கும் வகையிலும் கடல் கொண்ட குமரிக்கண்டம் பற்றிய திரைப்படத்தைத் தமிழக அரசு தயாரித்து உலகத் தமிழ் மகாநாட்டின்போது கடந்த செவ்வாயன்று திரையிட்டது. இந்தப் படம் சினிமா ஸ்கோப் படமாக வண்ணத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. படத்தின் நீளம் 3,500 அடி. இந்தப் படத்தைக் கேரள முதலமைச்சர் நாயனார் அவர்கள் திரையில் வெயிளிட்டார். ''பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பல தமிழுக்கும் மலையாளத்திற்கும் பொதுவான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளன. சேரன் செங்குட்டுவன் கேரளத்தில் கண்ணகிக்குச் சிலை எழுப்பி, கொடுங்கலூர் என்ற ஊரில் கோவிலையும் கட்டினான். இன்றும் அந்தக் கோவில் ''ஸ்ரீ கரும்பா பகவதி'' என்று அழைக்கப்பட்டு வழிபாடும் நடத்தப்படுகிறது. கண்ணகியின் கதை தமிழரையும் மலையாளிகளையும் இணைத்துள்ளது. மனோன்மணியம் என்ற முதல் தமிழ் நாடகத்தை இயற்றிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை கேரளத்து ஆலப்புழையைச் சேர்ந்தவர்'' என்று நாயனார் தமது உரையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

மக்களின் வரலாறு என்பது மொழியின் வரலாறாகவும், அவர்கள் வளர்த்த பண்பாட்டின் வரலாறாகவும் விளங்குகிறது. ஒலியே மொழிக்கு அடிப்படை. 'ஓம்' என்ற ஓங்கார ஒலியே உலகத் தோற்றத்திற்கு முன்னிருந்து ஒலித்துக்கொண்டிருந்தது என்று சைவ சமயத்தினர் கூறுவர். கிறிஸ்தவத் திருமறையும் ''ஆதியிலே வார்த்தை இருந்தது'' என்று கூறுகிறது. ஆகவே, உலகத் தொடக்கத்திற்கு முன்னரே ஒலி இருந்தது என அறிய முடிகிறது. இலக்கண நூலாசிரியர்களும் இக்கருத்தினை ஏற்றுள்ளனர். மொழி முதற் காரணமாமணுத் திரளொலி, எழுத்து அது முதல் சார் பெனவிரு வகைத்தே'' என்று எழுத்தின் பிறப்பினைக் கூறுகிறது நன்னூல். சிறு சிறு அணுத்திரள் ஒலிகள் ஒன்று சேர்ந்தபோது உண்டானதே மொழி. முதற்கண் மக்கள் தோன்றிய குமரிக்

கண்டத்தில் மனிதர்கள் தங்கள் கருத்துக்களைச் சைகைகளினால் தெரிவித்துக் கொண்டிருக்க வேண்டும். சைகைகளினால் கருத்துக்களைத் தெரிவிக்கவோ அல்லது உணர்த்தவோ முடியாத இடர்ப்பாடு ஏற்பட்டபோது, எழுப்பும் ஒலிகளுக்குப் பொருள் படைத்திருக்க வேண்டும். பழக்க வழக்கத்தினாலும், பன்முறைப் பயிற்சியினாலும் பொருளற்ற ஒலிகள் பொருளுடையனவாக வளர்ந்திருக்க வேண்டும். மொழியிலிருந்து பிறந்தது இலக்கியம்: இலக்கியத்திலிருந்து பிறந்தது இலக்கணம். தமிழ்மொழிக்கு அகத்தியர் சிற்றரகத்தியம், பேரகத்தியம் என்னும் இலக்கண நூல்களைச் செய்தார் எனக் கூறுவர். ஆனால், இவற்றுள் ஒன்றும் இக்காலத்துக்குக் கிடைக்கவில்லை. அகத்தியத்துக்கு முன் குமரம் என்னும் ஓர் இலக்கணம் இருந்ததாகக் கூறப்படுகிறது. பேராற்று நெடுந்துறையன் பெருநூல்களும், இடைக்கழிச் செங்கோடன் இயனூல் முதலிய இலக்கணங்களும் இருந்து மறைந்து போனதாகச் செங்கோன் தரைச் செலவு என்னும் நூலால் அறியப்படுகின்றது. தொல்காப்பியம், வீரசோழியம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், மாறனலங்காரம், இலக்கண விளக்கம், இலக்கணக்கொத்து, நேமிநாதம், நன்னூல் முதலியவை தமிழ் மொழிக்குத் தற்போதுள்ள இலக்கணங்களாகும்.

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி தமுக்கம் கலையரங்கில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் துறை ஒரு கண்காட்சியை அமைத்துள்ளது. அகழ்வாய்வுகள் புலப்படுத்தும் தமிழரது சீரிய பண்பாட்டின் சில கூறுகளை இக்கண்காட்சி உணர்த்துகின்றது. தமிழ் வளர்ச்சித் துறை—பண்பாட்டு மையத்தில் அமைந்துள்ள காட்சியில் கீழ்க்கண்ட அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

முதற் பகுதியில், தருமபுரி மாவட்டம், மல்லப்பாடியில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கற்கால ஓவியங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவ்வகையான ஓவியங்கள் தமிழ் நாட்டில் முதல் முறையாகப் புலப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதியில், வரலாற்றுக் காலத் தொல்வியல் சான்றுகள் வைக்கப்பட்டுள்ளன. உறையூர் அழகறை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகளில் கிடைத்த புதைபொருள்களும், புகைப் படங்களும் வைக்கப்பட்டுள்ளன. ரோமானியர் பயன்படுத்திய ''ஆம்பொரே'' என்னும் மதுச்சாடிகள், மற்றும் உறை கிணற்றின் பாகங்கள், எழுத்துக்களுடன் கூடிய பனை ஓலைகள், மற்றும் அகழ்வாய்வில் கிடைத்த கட்டிடங்களின் புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

ஜப்பானிய அறிஞர்களுடன் இணைந்து தொல்வியல் துறை நடத்திய தமிழகக் கிராமத் தெய்வங்கள் மற்றும் வழி பாட்டு முறைகள் பற்றிய ஆய்வின் முடிவுகள் மூன்றாம் பகுதியில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

நான்காம் பகுதியில், பல்லவர் காலக் கூத்து முறையை விளக்கும் கூத்துச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

சோழர் தலைநகரான உறையூருக்குக் கோழியூர் என்ற பெயர் வந்த காரணத்தை விளக்கும் யானையுடன் சண்டை யிடும் கோழிச்சிற்பம் ஐந்தாம் பகுதியில் வைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் திருச்சி உறையூர் பஞ்சவர்ண சுவாமிகோவிலில் உள்ளது.

ஆறாம் பகுதியில், ஸ்ரீரங்கநாதர் சன்னிதியில் கண்டு பிடிக்கப்பட்ட வண்ண ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. இந்த ஓவியங்கள் 17-ஆம் நூற்றாண்டுத் தமிழக மக்களின் உடை, ஆடையணிகள் ஆகியவற்றைப் பற்றித் தெரிவிக்கின் றன. நாயக்கர் கால ஆடையணிகளின் வரை படங்களும் இங்கு வைக்கப்பட்டுள்ளன.

## பொலிக தமிழகம்: வளர்க தமிழ் மொழி

தமிழ்ச்சங்கத் திருத்தளம் இன்று புதுப்பொலிவுபெற்று விளங்குகிறது. இறைவனுக்கே பல்லாண்டு கூறும் தமிழ்ப் புரட்சி கண்ட திருத்தலமும் மதுரையே. பண்டைக்கால பாண்டிய மன்னர்கள் தமிழைப் பேணிவளர்த்தனர். அவர்கள் காலத்துப் புலவர்கள் அனைவரும் மூன்று தமிழ் சங்கங்களி லும் மாண்புடன் விளங்கினர். அவர்களது ஒப்புதல் பெறாத எந்தக்கவிதையும் தமிழ் உலகில் நடையாட இயலாது. முக் கண்ணாயினும் பிழை புரிந்தால் குற்றம் குற்றமே என்று கூறும் சுதந்திரமும் திறமும் புலவர்களிடையில் பரவிநின்ற பொற்காலம்.

தன் வாழ்நாளில் பெரும் பகுதியைத் தமிழ் ஆய்வில் கழித்து, ராமநாதபுரத்தில் 1819-ல் காலமான எப். டபிள்யூ. எல்லீஸ் என்ற மகானின் குறளைப்பற்றி எழுதிய அச்சேறாத ஆராய்ச்சிக் குறிப்புகள் அலசப்பட்டன. மருத்துவம் பற்றித் தனி அரங்கு ஏற்பட வேண்டும் என்று டாக்டர் கனகரத்தி னம் (இலங்கை) அழுத்தமாகக் கூறியதை நினைவில்கொண்டு இரண்டாவது மகாநாட்டில் சங்க இலக்கியத்தில் சித்த மருத் துவம் என்ற பொருள் ஏற்கப்பட்டது.

இம் முதல் மகாநாடு வெற்றியுடன் நடப்பதைக் கண் ணுற்ற திரு பக்தவத்சலம் அக்கூட்டத்திலேயே இரண்டா

வது மகாநாட்டிற்கு வருகை தந்து சிறப்பிக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். சிறு பொறி பெரும் அனல் ஆவது போல் தமிழ் வளர்ச்சி பெருகி 1968ம் ஆண்டு ஜனவரி மாதம் மூன்றாம் தேதியிலிருந்து 10ம் தேதி வரை சென்னையில் நடக்கத் துவங்கியது. 500 பிரமுகர்களுக்கு அழைப்பிதழ் பறந்தன. உலகின் பல்வேறு பாகங்களின் தமிழ் ஈர்ப்பையும் காண முடிந்தது. அர்ஜண்டினாவிலிருந்து இருவர், ஆஸ்திரேலியா இருவர், கானடா 3, இலங்கை 49, செக்கோஸ்லோவேகியா 3, பின்லாந்து 2, பிரான்சு 7, ஜெர்மனி 5 ஹங்கேரி 1, இந்தோனேசியா 3; இஸ்ரேல் 2, இத்தாலி 4, ஜப்பான் 3, கொரியா 1, மலேசியா 37, மரிஷஸ் 2, மெக்ஸிகோ, 1, நெதர்லண்ட்ஸ் 2, பிலிப்பைன்ஸ் 1, ருமேனியா 2, சிங்கப்பூர் 13, ஸ்பெயின் 1, ஸ்வீடன் 3, ஸ்விஸ் 2, தாய்லாந்து 13, ரஷ்யா 6, இங்கிலாந்து 9, அமெரிக்கா 42, இப்படிப் பலர் ஆராய்ச்சியில் கூடினர். உலகில் எந்த மூலையிலாவது தமிழ் எட்டாத இடம் உள்ளதா. தாய் நாட்டில் கூடியவர் 280. அதில் தமிழ் நாட்டில் 203.

தமிழ் மண்ணில் பிறந்து தமிழையே மூச்சாகவுடைய தமிழன், தமிழ் ஆராய்ச்சி செய்வது பெரிய அதிசயமல்ல. தமிழ் என்ற மொழி ஒன்று உள்ளதா என்று கேட்குமளவுக்கு உலகில் எங்கோ ஒரு மூலையில் உள்ளவர்கள்கூட தமிழால் கவரப்பட்டு, அதை ஓதி ஆராய்ச்சிக் கூடம் வந்து பங்கேற்று பல அரிய விஷயங்கள் வெளிப்படுத்தினார்கள் என்றால் தமிழ் மொழியின் பெருமைக்கு இதைவிட உரைகல் என்ன. பிரான்ஸ் நாட்டு டாக்டர் ஜூன் பிலியோசா, தொல்பொருள் ஆராய்ச்சியும், தமிழும் என்பது பற்றி உரையாடலுடன் துவங்கிய நிகழ்ச்சிகளில் மேல் நாட்டினரின் பங்கு சிறந்து நின்றது.

## நீரோட்டம் சென்னை 3-1-1981

கூடல் மாநகரில் கூடுவோம் வாரீர்
உலகத்தமிழ் மாநாடு தமிழர்தம் திருவிழா !
தமிழமுதுண்ண அனைவரும் வாரீர் ! வாரீர் !

''தேமதுரத் தமிழோசைதிக்கெட்டும் முழங்கிட'' ''மாமதுரைத் திருநகரில் ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு'' ஓங்கிய சிறப்புடனும் உன்னத ஏற்பாடுகளுடனும் உலக அறிஞர்கள் ஒன்று கூடி மகிழும் வகையில் 1981-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் நான்காம் நாள் முதல் பத்தாம் நாள்வரை ஏற்றமுடன் நடைபெறவிருக்கின்றது.

''வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்—அன்னார் உள்ளத்தால்
ஒருவரே மற்று உடலினால் பலராய்க் காண்பர்
கள்ளத்தால் நெருங்கொணாதே—என வையம் கலங்கக் கண்டு.

துள்ளும்நாள் எந்நாள்
உள்ளம்சொக்கும் நாள் எந்த நாளோ''

எனும் பாவேந்தரின் பாட்டு வரிகளுக்கு ஒரு படப்பிடிப்பாக உலகத்தமிழ் மாநாடு மதுரையில் நடைபெற இருக்கின்றது.

''என்றுமுள தென்தமிழ் ஈடில்லாநற்றமிழ்'' என்றெல்லாம் எண்ணியெண்ணிப் பெருமிதம் பெறுபவர்களாகிய நமக்கு உலக அறிஞர்கள் எல்லாம் ஒன்று கூடித் தென்மாடக் கூடலிலே தமிழின் பெருமையைக் கூடிப் பேச இருக்கின்றார்கள் என எண்ணும்போது நமக்குக் குதூகலம் பெருகுகின்றது.

பாரெங்கும் தமிழகத்தோடு உள்ள தொடர்பைப் பாருங்கள். இந்தோசைனாவிலுள்ள கல்வெட்டுகளில் தமிழ் எழுத்துக்கள் இடம் பெற்றுள்ளன என்பது உண்மையா ? மேல் நாட்டு கடற்கரையோரத்தில் ராஜராஜன் கால வெற்றித் தூண் அமைக்கப்பட்டிருப்பது தெரியுமா?' 'மெசபடோமியாவின்' பள்ளத்தாக்குகளில் தமிழ்பாண்டங்களின் துண்டுகள் காணப்படுகின்றன என்பவை போன்ற செந்தேன் செய்திகள் நம்மை நாடி வந்து கொண்டிருக்கின்றன.

தமிழ் புது மொழியல்ல; முதுமொழி! உலக நாடுகள் எல்லாவற்றிலும் ஒரு காலத்தில் பரவியிருந்த தமிழின் சுவடுகள் தமிழ்மொழியின் பண்பாட்டையும் தொன்மையையும், நேர்மையையும், சீர்மையையும் எடுத்துக் காட்டும் வகையில் உலகத் தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி ஆராயவிருக்கின்றனர். சனவரி திங்கள் நான்காம் நாள் முதல் பத்தாம் நாள் வரை மாநாடு நடைபெறுகின்றது.

''அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம்' என்னும் ஆராய்ச்சி அமைப்பின் சார்பாக பல்வேறு நாடுகளில் உள்ள ஆய்வறிஞர்கள் பகுகொள்ளும் வகையில் பல்வேறுநாடுகளில் மாநாடு நடத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டு இதுவரை கோலாலம்பூர், சென்னை, பாரீசு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உலகத்தமிழ் மாநாடுகள் சீராக நடைபெற்றுள்ளன. பல்வேறுநாடுகளைச் சார்ந்த ஆய்வறிஞர்கள் தங்கள் தமிழாய்வுப் புலமையை எழுத்து வடிவத்தில் வழங்

கும் ஆய்வியல் கருத்தரங்கம் மட்டுமே இம்மாநாடுகளில் நடந்தன.

தமிழ் ஆர்வலர்களும் தமிழ்ப் புலவர்களும், தமிழ்ப் பெருமக்களும் பெரிதும் பங்கு கொள்ளும் பொதுக் கருத்தரங்கம், பாட்டரங்கம், பட்டிமண்டபம் அழகிய ஊர்வலம், அற்புதக் கண்காட்சி முதலிய பண்பாட்டுக் கலை நிகழ்ச்சிகளோடு தமிழ் உணர்ச்சியையும் எழுச்சியையும் மக்களிடையே உருவாக்கப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பொது நிலைக் கருத்தரங்கைப் ''பூம்புகார்'' என்னும் பெயரில் சென்னை மாநாட்டில் அப்போது புதியதாக உருவாகக்னார்கள். அம்முறையிலேயே மதுரையில் நடைபெறும். மாநாட்டையொட்டிப் பந்தயத்திடலில் பொது நிலைக் கருரத்தரங்கு கவிஅரங்கு, பட்டி மண்டபம், சிந்தனைமேடை வழக்காடு மன்றம் ஆகியவற்றை முத்தமிழ் முற்றத்தில்—மூவேந்தர் அரங்கில் நடத்தும் பொறுப்பு பொது நிலைக் கருத்தரங்குக் குழுவிடம் தரப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி அறிஞர்கள் ஒன்று கூடி, தங்கள் ஆய்வறிவையும் நுண்மான் நுழைபுலப்பன்மான் திறத்தையும் காட்டுவது தான் இன்றும புலவர் தொழிலாக விளங்குகின்றது. புலவர்கள் கூடினால் பந்துகள் போன்ற கருத்துக்கள் வந்து குவியும் வண்ணம் மாநாட்டுக் கருத்தரங்குகள் நிகழும். ஆராய்ச்சிக் கருத்தரங்குகளில் அறிஞர்கள் பங்கு பெறுவது போலவே, நமது நாட்டு மக்கள் ஆகிய அனைவரும் கேட்டு மகிழும் வகையில் பாட்டுத் தமிழின் பல்வேறு சிறப்புகளை எல்லோரும் கேட்டு மகிழ வேண்டும் என்ற எழிலார்ந்த அடிப்படையில்—நமது பொன்மனச் செம்மல் தமிழக முதல்வர் அவர்களின் விருப்பத்தின்படி—சங்கத்தமிழ் இயல்புகளை எல்லாம் எடுத்துக்காட்டுகின்ற சான்றோர்களின் கருத்தரங்கு பொதுநிலைக் கருததரங்காக மலரும்.

''ஆராய்ச்சிக் கருத்தரங்கில் அயல் நாட்டவர்கள் வழங்கவிருக்கும் அரிய கருத்துக்களை அவ்வப்போது தொகுத்துத் தமிழில் வழங்குவதற்கும் இந்த மாநாட்டில் ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ''ஒலியெல்லாம் சங்கத்தமிழ் முழக்கம்! ஒலியெல்லாம் தமிழ்க் கலையின் விளக்கம்'' என்னும் வகையில் பணிகள் பாங்குற செய்யப்படுகின்றன.

கருத்தரங்கத்தில் தொடக்க நாளாக 4-1-1981 அமைகிறது. 5, 6, 8, 9 ஆகிய நாட்களிலும் நாளொன்றுக்கு இரண்டு அமர்வுகளாகவும், நிறைவு நாளன்று ஓர் அமர்வுமாக ஆக 11 அமர்வுகளாகப் பொதுநிலைக் கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. 150-க்கும் மேற்பட்ட அறிஞர்கள் பங்கு பெறுகின்றனர்.

கருத்தரங்கம் பட்டிமன்றம், சிந்தனை மேடை, வழக்காடு மன்றம், கவியரங்கம் என்ற வகையில் தமிழ் மொழியின் இயல்புகளும் சிறப்புகளும் விளங்கும் இலக்கிய வடிவங்களின் மூலம் ஐந்து நாட்களிலும் நாளொன்றுக்கு இரண்டு கருத்தரங்கம் என்ற அடிப்படையில் 11 அமர்வுகளில் அதனை நடத்தக் கருதப்பட்டுள்ளது.

ஆன்றோர்கள் அறிஞர்கள், சான்றோர்கள் கவிஞர்கள், கலைஞர்கள் அறிவாளர்களின் இலக்கிய நல்லுணர்வுகளை மக்கள் தெள்ளத் தெளிவாக அறியும் வண்ணம் அமைப்புகள் மிளிரவிருக்கின்றன.

சிந்து வெளிசிந்தும் ஒளி, கடல்கொண்ட தென்னகம், ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்திறம், வையத்துக்கு வான்புகழ் வழங்கிய திருவள்ளுவர் நெறி, சங்க இலக்கியத்தின் சால்பு இடைக்கால இலக்கிய ஏற்றம் மறுமலர்ச்சித் தமிழின் மாட்சி நூற்றாண்டு விழா காணவிருக்கும் பாட்டுகொரு புலவன் பாரதியாரின் படைப்புத்திறன் பாவேந்தர் பாரதிதாசனுடைய இலக்கியமாட்சி என்ற வண்ணம்அற்றை நாள் முதல் இன்றைய நிலைவரை தமிழின் ஆழத்தையும் அகலத்தையும் பரப்பையும் ஆராயும் பொதுத்தமிழ்ப் பூங்காவாக மாநாட்டின் அமைப்பு உருவாக்கப்படுகிறது.

தமிழில் பூக்கிறது புதிய சங்கம்!

''தமிழுண்டு தமிழ் மக்களுண்டு; நல்ல தமிழுக்கு
நாளும் செய்வோம் நல்ல தொண்டு.'

## நீரோட்டம் சென்னை 4-1-1981

### வரலாற்றுப் பொன்னேட்டில் இடம் பெறும்
### உலகத்தமிழ் மாநாடு மாமதுரையில் தொடங்கியது!

கங்கா நதியும் கடாரமும் கொண்டு சிங்காதனமிருந்த பாண்டியன் தலைநகரில் ஐந்தாவது உலகத் தமிழ்மாநாடு.

மாநாடு தொடங்கும் அதிகாலைப் போதினில் மதுரை மீனாட்சியம்மன் ஆலயபணியும் மார்கழி மாதத் திருப்பள்ளி எழுச்சியிசையும் இயைந்து ஒலிக்கின்றன.

இரவெல்லாம் பனிபெய்து குளிர்காற்று வீசுகிறது.

காலை 9 மணிக்கெல்லாம் மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்குவதால் மதுரை வந்து சேர்ந்த தமிழ் பெருமக்கள், அயல் நாட்டிலிருந்து வந்த தமிழ்ப் பிரதிநிதிகள் சோர்வை உதறி தள்ளி விட்டு எழுகின்றனர்.

வைகை நதியில் வரலாறு காணாத வகையில் இருகரைகளையும் தொட்டுக் கொண்டு வெள்ளமாய் சுழித்தோடுகின்றது.

தமிழ் மாநாடு காணவும், தமிழ்ப் பேரறிஞர்கள் கருத்து மழையில் நனைந்திடவும் வெள்ளம்போல் திரண்டிருந்த மக்களுடன் போட்டி போட்டுக் கொண்டு வைகையும் வெள்ளப்பெருக்குடன் வரலாறு படைக்கின்றது.

மதுரை மாநகரம் இன்று அதிகாலையிலேயே புதுக் கோலம் கொண்டு விடுகிறது. எங்கு நோக்கினும் மக்கள் திரண்ட வைகையில் பல்லாயிரவர் நீராடி நல்லாடைஅணிந்து மாநாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்கத் தயாராகின்றனர்.

விடிந்தால் இடம் கிடைக்காதோ என முன்னாள் இரவே பந்தய மைதானத்தை முற்றுகையிட்டோ முன்பாக இடம் பிடித்துக் கொண்டு வெற்றிப் புன்னகையுடன் அமாந்திருக் கிறார்கள்.

கானல பணி ஒன்பது!

பந்தய மைதானம் திணறுகிறது! எள் போட்டால் எள் விழாத அளவுக்கு மக்கள் கூட்டம்! பார் பெருத்ததால் படை பெருத்ததோ! படை பெருத்ததால் பார் சிறுத்ததோ என ஐயுறும் அளவுக்கு மக்கள் பெருங்கடல் அலைமோதுகிறது.

அருகிலிருக்கும் கட்டடங்கள் அனைத்திலும் மக்கள் தொத்திக்கொண்டுள்ளனர். மாநாட்டு மேடை மூவேந்தர் காலத்து விழா மண்டபம்போல் எழிலுற அமைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொருவரும் மணவறையில் அமர்ந்திருக்கும் மணமக்களைப்போல் ஆர்வத்துடன் அமர்ந்திருக்கின்றனர்.

சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்க்கச் செய்யும் மேளதாளத்துடன் நாதசுர இசையில் தம்மை மறந்து செவியின்பம் பருகிக் கொண்டிருக்கும் வேளையில் எங்கும் பரபரப்பு!

விழா மேடையிலேயே நகரின் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் எழில்தோரண வாயில்களின் திறப்பு விழா நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு தோரண வாயில்களுக்காகவும் மேடையிலேயே அமைக்கப்பட்டிருக்கும் மின் பொத்தானை அழுத்த நகரில் உள்ள பல்வேறு தோரண வாயில்கள் திறக்கப்படுகின்றன.

இது சேரன் நுழைவாயில்! தானாக திறந்து கொண்டிருக்க ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கு தொலைக்காட்சிப் பெட்டியில் பந்தய மைதான விழா நிகழ்ச்சிகளை மக்கள் பார்க்கிறார்கள்!

பின்னர் பொதுநிலைக் கருத்தரங்கு 11 மணி அளவில் தொடங்குகிறது!

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. பத்துப்பதினைந்து வயது குறைந்தவர்போல் எழுச்சியுடன் இருக்கிறார். கருத்தரங்கை சிலம்புச் செல்வர் தொடங்கி வைத்து செந்தேன் மழை பொழிகிறார்.

மாந்தர் தோற்றமும், தமிழர் மரபும் என்கிற தலைப்பின் கருத்தரங்கம் தொடங்குகிறது.

பிற்பகல் 3 மணி முதல் 5 மணிவரை கவியரங்கம் நடைபெறுகிறது. ''எப்போதும் இருப்பவர்கள்'' எனும் தலைப்பில் சட்ட மேலவைத் துணைத் தலைவர் புலமைப்பித்தன் தலைமையில் கவியரங்கம் களை கட்டுகிறது.

அன்னப் படகு வரும்போது குளத்தில் ஒரு அலை நெழ்ச்சி ஏற்படுவதுபோல் மக்கட்பெருங்கடலில் ஒரு நெகிழ்ச்சி! அசைவு ஆம் புரட்சித் தலைவர் மேடைக்கு வருகிறார்! கையொலி! மகிழ்ச்சி ஒலி!

சிறிதுநேரத்தில் தமிழக ஆளுநர் சாதிக் அலி அவர்களும் வருகிறார்.

செய்தித்துறை அமைச்சர் ஆர். எம். வீரப்பன் அவர்கள் கோடி முரசுகளின் குரலோடு வரவேற்புரையைத் தொடங்குறார்.

மதுரையில் கோவலன் பொட்டலில் கிடைத்த ஒரு எலும்புக்கூடு பற்றிய செய்தியை அவர் கூறும்போது ''ஒரு நல்ல திரைக்கதை ஆசிரியர்'' நிகழ்ச்சிச் செய்திகளை அடுக்

கிக்கொண்டே சென்று ஒரு வியப்புச் செய்தியை இறுதியில் சொல்வது போலிருந்தது.

அமைச்சருக்குப் பிறகு தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கின் தலைவர் மகராசன் பேசுகையில் குறிப்பிட்ட ஒரு கருத்து மக்களின் கையொலியைப் பெற்றது.

முதலில் நடைபெற்ற 'தமிழ் மாநாடுகள்' நான்கினையும் விட ஆயிரம் மடங்கு உயர்ந்தது இம்மாநாடு. இத்தகைய சிறப்போடு இந்த மாநாட்டை நடத்திட தமிழக முதல்வர் முன் வந்ததற்கு தமிழின் பாலுள்ள அவரது மையல் என்று மகராசன் குறிப்பிட்டார்.

அடுத்து தமிழக ஆளுநர் சாதிக் அலி தொடக்கவுரை ஆற்றினார். அவரது பேச்சு தமிழை நன்முறையில் ஆய்ந்தறிந்த பேச்சாக இருந்தது.

தொல்காப்பியம்—பட்டினப்பாலை பற்றி அவர் பேசும் போது பலுக்கல்—உச்சரிப்பு—ஒருமாதிரியாக இருந்தாலும் அந்த நூல்களின் ஆழத்தைப் பற்றி நல்ல வலிமையான சொற்கள் மூலம் விளக்கியதைக் கேட்டு தமிழ் நெஞ்சங்கள் நெகிழ்வடைந்தன.

அரசுக்கும் கட்சிக்குமிடையே ஒரு எல்லைக்கோடு வேண்டும் என்று அண்ணா அவர்கள் ஆட்சிபீடத்தில் அமர்ந்தவுடன் கூறினார்கள்.

அண்ணாவின் காலத்துக்குப் பிறகு புரட்சித் தலைவரின் ஆட்சியில் தான் அதைக் காண்கிறோம். அந்தக்கோடு தங்கக் கோடாக—தங்க ரேகையாக மிளிர்ந்தது உலகத் தமிழ் மாநாட்டில்!

அரசாங்க அதிகாரிகள் தாம்! ஆயினும் ஒரு குறை—ஒரு குற்றம்-ஒரு அச்சம் இல்லாமல் உலகத்தமிழ்மாநாட்டை நடத்துகிறார்கள்.

பொதுவாக அரசு விழாக்கள் எனில் அழகு உணர்ச்சி கலை உணர்ச்சி குறைந்திருக்கும் என்று பொதுவாகக் கூறுவார்கள்.

ஆனால், மதுரை மாநாட்டில் ''மற்றபிறர் இப்படிச் செய்வார்களோ!'' என்ற அளவில் கலை உணர்விலும், அழகுணர்விலும் அரசு அதிகாரிகள் மிக்கிருந்தோராய்க் காட்சி தந்தனர்.

அவர்களின் முதல்வர் மிகச் சிறந்த கலை நுணுக்கம் பெற்றவர்; அமைச்சர்களும் அழகுணர்வில் தோய்ந்தவர்கள் என்பதால் ஏற்பட்ட உந்துதல் வழிகாட்டுதல் ஆகியவற்றால் கலைவிழாவாக உலகத் தமிழ் மாநாட்டை மாற்றிக் காட்டி யிருக்கிறார்கள்.

இதனைக் குறிப்பிட்டுக் கூறுவதற்குக் கரணியம்—தொடக்கவிழா—திறந்த வெளி அரங்கிலுள்ள அழகும் எழிலும் மிக்க மேடையாகும்! அழகோ... அழகு... கொள்ளை அழகு!

பாண்டிய மன்னனின் அரசமண்டபம்போல் அலங்கரிக் கப்பட்டிருந்தது—அந்த மேடை!

மேடைக்கு அனைத்துத் தலைவர்களும் வந்துவிட்டனர். மேடைக்கு எதிரே இதழாசிரியர்கள்.

அதற்கடுத்த அமைப்புக்குள் வெளிநாட்டு உள்நாட்டுத் தமிழறிஞர்கள்! அதற்கடுத்த—அடுத்த—அடுத்த அடைப் பிற்குள் மக்கட் பெரு வெள்ளம்!

இந்திய ஒற்றுமையை தமிழ் இலக்கியங்கள் வலியுறுத்தி யுள்ளதை அவர் சுட்டிக் காட்டினார்.

வடக்கிலும் வடகிழக்கிலும் வேற்றுமை உணர்வுகள் தலைதூக்கியுள்ள இந்த வேளையில் ஒற்றுமையை வலி யுறுத்தி இந்தியாவுக்கே வழிகாட்டும் ஒளியை தமிழ் வழங்கு கிறது என்பதை இங்கே இருப்பவர்களல்லர்—மத்திய அமைச்சர் கூறுவது எத்துணை பெருமை நமக்கு ?

ஆழமாக தமிழை ஆய்ந்தவர்கள் ஒற்றுமை உணர்வின் தலையாய சின்னங்களாவார்கள்! ஒருமைப்பாட்டின் தூது வர்கள் ஆவார்கள்!

அது போன்றே தமிழ் நெஞ்சங் கொண்டவர்களும் ! அமைச்சர் ஆர். வீ. சுவாமிநாதன் தமிழ் நெஞ்சத்தை எடுத் தோதினார்கள்.

அதற்கு அடுத்து பேசிட வந்தவர் முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்கள் ! தமிழ் இலக்கியத்தின் வைரமகுட மாகத் திகழ்கின்ற சேக்கிழாரின் மரபில் வந்தவர்.

கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டை தமிழகத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்று பாடுபட்டவர் அவரது முதல் முயற்சிதான்அண்ணா காலத்தில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு!

வயதால் முதிர்ந்து பழுத்த அந்தச் சான்றோர் பிறர் உதவியோடு மேடையேறி மெதுவாக ஒலிபெருக்கி முன் நடந்து வந்த காட்சியைக் கண்டபோது கண்களில் நீர் சுழும்பியது.

தமிழ் எத்துணை ஆற்றல் பெற்றது? என்பதையும் தமிழின்பால் இந்த முதிய தலைமுறைக்கு எத்துணை பக்தி என்பதையும் எண்ணிடும்போது நம்மை நாமே ஆய்வு (சோதனை) செய்து கொள்ள வேண்டியவர்களாய் உள் ளோம்!

முன்னாள் முதல்வர் கூறிய கருத்துக்களில் பக்தி இலக் கியங்களில்கூட அசல் இலக்கியங்கள் தமிழில் உள்ளன— என்ற ஒரு கருத்து ஒப்புயர்வற்ற கருத்து.

மொரீஷியஸ் தீவிலிருந்து வந்த அமைச்சர் ஜகத் சிங் நமது மாநாட்டு விருந்தோம்பலை பலபடப் புகழ்ந்தார்.

தங்கள் நாட்டுக்கு திருக்குறளோடு தமிழர்கள் வந் தார்கள் என்று அவர் கூறும்போது இதயம் மகிழ்ந்தது.

வெளிநாட்டுத் தமிழ் அறிஞர் ஆஷர் எடுத்த எடுப்பில் மழலைத் தமிழில் பேசத் தொடங்கியதும் மகிழ்ச்சிக் கையொலி எழுந்தது.

தமிழ் ஒரு உலகமொழி என்று அவர் முத்திரை யிட்டார் !

''மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று ஆனை கட்டிப் போரடிக்கும் அழகான தென் மதுரை'' என்று ஆஷர் அழகு மழலையில் சொன்னபோது அதுவும் ஆடி ஆடி அசைந்து கொண்டே சொன்ன வேளையில் மகிழ்ச்சிக்கும் கையொலிக்கும் சொல்லவா வேண்டும் ?

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது சென்னை, மதுரை, அண்ணாமலை பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றிற்கும் மூன்று இலட்சம் ரூபாய்கள்மாநாட்டின் சார்பில் கொடுக்கப்பட்டன. அத்தொகைகளை அறக்கட் டளையாக்கி, திருக்குறள் ஆராய்ச்சிக்குச் செலவிடக்காண் கிறோம்.

மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு பாரிசில் 1970-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 15ஆம் நாள் முதல் 18ஆம் நாள் வரையில் கூடியது. அவ்வமயம் ஆலோசனைக் குழுவும் கூடியது. 'தமிழ்மொழி, இலக்கிய ஆய்வுகளைத் தொடக்க

வேலையாகக் கொண்டு, அனைத்துலக தமிழ் ஆய்வுக் கழகத்தை அமைக்க பச்சைக்கொடி காட்டப்பட்டது.

1974ஆம் ஆண்டு சனவரி திங்கள் 3 முதல் 9 வரை யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழ் மாநாடு கூடிற்று. அது பெரிதும் அறிஞர்களின் ஆய்வு அரங்கமாக விளங்கிற்று.

அப்புறம் ஏழு ஆண்டுகள் ஓடின. 1981-ம் ஆண்டு சனவரி நான்காம் நாள் முதல் பத்தாம் நாள் வரை, சங்கம் வளர்த்த கூடல் மாநகரில் அய்ந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடக்கப் போகிறது. தமிழ் பிறந்த மண்ணிலே, தாய்த் தமிழகத்தில், தமிழ் மாநாடு கூடினால், மக்கள் வருகைக்கு கேட்கவா வேண்டும்? அதோடு மக்கள் இதயக் கனியாகியுள்ள முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆரின் நேரடிப் பார்வையில் நடக்க இருப்பதால், கூட்டம் பெரிதாக இருக்குமென்று எதிர்ப்பார்க்கலாம். தமிழறிஞர்களுக்கு மட்டுமல்லாது, தமிழ் உணர்வுடைய பொது மக்களுக்கும் பயன்தரும் வகையில் நிகழ்ச்சிகள் சிறக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. எதிர்காலத்திற்கான ஆக்கப்பணிகளுக்கும் உறுதியான தெளிவான, திட்டவட்டமான அடிப்படைகள் அறிவிக்கப்படுமென்றும் நம்புகிறோம்.

தமிழர்கள், மக்கள் இனத்தின் முதல் பிள்ளைகள். அவர்கள் தோன்றி வளர்ந்து, பன்நெடுங்காலம் பண்பாட்டோடு வாழ்ந்தது லெமூரியா என்று பெருநிலத்தில்.

'இன்றைய தமிழகத்திற்குத் தெற்கே இருந்த அப்பெரும் நிலப்பரப்பு கடலூர் கற்பனையின் பிதற்றல் அல்ல, உண்மை. அதற்கு இன்று இன்ன அடையாளங்கள் உள்ளன. மேற்கொண்டு, இவ்வழிகளில் ஆழ்கடல் ஆய்வு நடத்தினால் அப்புவியியல் உண்மை உறுதிப்படுத்தப்படும். இப்படி இருப்தாண்டுகளுக்கு முன்னரே சோவியத் வல்லுனர் அலக்சாண்டர் கோண்டிரடோவ் முடிவு செய்துள்ளார் 'மூன்று மாகடல்களின் புதிர்' என்னும் தலைப்புடைய நூலில் வெளியிட்டுள்ளார்.

ஆழ்கடல் ஆய்வு இக்காலத்தில் நடக்கக் கூடியது. அதற்கு இந்திய அரசின் ஆதரவு தேவை. வெளிநாட்டு வல்லுனர்களை இந்திய அரசின் உதவியால்தான் பெற முடியும். அதற்குப் பெருஞ் செலவு ஆகலாம். மக்கள் இனவளர்ச்சி பற்றிய பேருண்மையைக் .காண பல நூறு கோடி செலவும் தகும்; முறையாகும்.

நான் மாட கூடல் நகரில் நா மணக்க நாம் பேசும் அன்னை தமிழ் மொழிக்கு அண்ணாவின் அருமைத் தம்பி முதல்வர் புரட்சித் தலைவர் எடுத்த விழா—உலகம்காணாத பெருவிழாவாக அமைந்துவிட்டது.

எங்கெங்கு காணினும் மக்கள் வெள்ளம், எழுச்சிக் கோலம்.

பொங்கும் அருவிகள் நதியாகி கடலில் சங்கமிக்கும் காட்சியைக் கண்டதுண்டு.

சாலைகளிலும் வீதிகளிலும் 'மக்கள் நதி பெருக்கெடுத்து மாமதுரையை மக்கள் கடலாக்கியது கண் கொள்ளாக் காட்சி !

தமிழ் வளர்த்த பழைய மதுரையை கடல்கொண்டது வரலாற்றுக் குறிப்பு!

முத்தமிழ் வளர்த்த மூவேந்தரும் ஒரு வேந்தராய் உருவெடுத்ததுபோல் திகழ்கின்ற நம் இதயவேந்தன் புரட்சித் தலைவர் எடுத்த இத்தங்கத் தமிழ் விழாக்காண வந்த மக்கள் கடல் கூடல் நகரைக் கொண்டது.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்—தேமதுரத் தமிழோசை தெருவெல்லாம் செழிக்கச் செய்வீர்' என்றான் தேசியக்கவி பாரதி.

பாரதி கண்ட கனவு நனவாகியுள்ளது! தேமதுரத் தமிழோசை தெருவெல்லாம் முழங்கச் செய்து அன்னை தமிழுக்கு அனைத்து நாட்டினரும் புகழாரம் சூட்டும்படி செய்து விட்டார் நம் புரட்சித் தலைவர்.

தமிழின் சிறப்பை இதுவரை நாம் கூறினோம்! இப்போது உலகம் கூறுகின்றது.

இந்த நூற்றாண்டின் இணையற்ற பெருவிழா ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடுதான் என்று இதுவரையில் கூடிய மக்கள் இன்று ஊர்வலத்தையும் அதைக் காணக் கூடி நின்ற

வர்களையும் கண்டு எந்நூற்றாண்டும் காண இயலாத வகையில் உள்ளது என்று வியப்பால் கூறினர்.

உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்தைக்காண தமிழகமே மதுரையில் திரண்டது. மதுரை மக்கள் வெள்ளத்தில் குலுங்குகிறது.

சித்திரைத் திருவிழாவையும் மிஞ்சும் அளவில் மதுரை நகரமே மக்கள் வெள்ளமாக காட்சி தருகிறது. சித்திரை திருவிழாவில் வைகை கரையில் மட்டும்தான் மக்கள் வெள்ளம். ஆனால் இப்போது காணும் இடம் எல்லாம் மக்கள் திரள் அலைமோதும் அளவுக்கு கூட்டம் அலைபாயதொடங்கியுள்ளது.

இரவு வந்துவிட்டால் போதும், மதுரை நகரமே ஜொலிக்கிறது. கட்டடங்கள் அனைத்தும் மின்சார விளக்கு அலங்காரத்தால் கண்ணைப் பறிக்கிறது.

மதுரை நகரமே சொர்க்க பூமியாக காட்சி அளிக்கிறது.

## மாலை முரசு சென்னை 9-1-1981

கூடல் மாநகரே குதூகலத்தில் மூழ்கியுள்ளது. மூவேந்தர் பரம்பரைக்குச் சான்று கூறும் முத்தமிழ் அறிஞர்கள் கூடிப்பேசும் கோலாகல விழாவாக ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு மதுரையில் நடைபெறுகிறது.

தமிழ்மொழியின் சிறப்பு, தமிழர் நாகரிகத்தின்மேன்மை அத்தனையும் மொத்தமாகக் காட்சி தரும் மதுரையம்பதியிலே நடைபெறும் இம்மாநாட்டிற்குத் தமிழாய்ந்த அனைவரையும் கரங்கூப்பி வரவேற்றுள்ளார் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்....தனியொருவரோ, அன்றி தனியொரு கட்சியோ நடத்தும் அரசியல் மாநாடல்ல இது' தமிழகம் எடுத்திடும் ஒப்புயர்வற்ற உலகத் தமிழ் மாநாடு'

## சுதேசமித்திரன் சென்னை 5-1-1981

மதுரையில் மக்கள் இல்லாத இடம் இது என்ற வினாவுக்கு விடை காண்பது அரிது எனக் கூறும் வகையில் சாலைகள் தோறும் சந்துகளிலும்கூட மக்கள் ஊர்ந்து செல்கின்றனர்.

மதுரை மாநகரம் மக்கள் நெருக்கத்தினால் மூச்சு விடவே திணறிக் கொண்டுள்ளது.

## அலை ஓசை சென்னை 5-1-1981

*1968*-ம் ஆண்டில் சென்னையில் உலகத் தமிழ் மாநாடு நடந்த பின் 12 ஆண்டுகள் கழித்து தமிழ் நாட்டில் மீண்டும் இப்போது நடக்கிறது.

இந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டிற்கு மாபெரும் பெருமை ஒன்று உண்டு. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமையை ஊட்டுகிறது.

தாமரைப்பூ போன்ற அமைப்புள்ள மாமதுரை இந்த மாநாட்டுக்கு பெருமை அளிப்பதோடு, தமிழ் மாநாட்டால் தானும் பெருமை பெற்றுக் கொண்டது.

வைகையில் வெள்ளம் வந்தால் ஆறு மட்டுமே புரண்டோடும். ஆனால் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி மதுரை நகரின் அனைத்து வீதிகளிலும் மக்கள் வெள்ளம் புரண்டோடியது.

மெல்லிய தென்றலிலே பூச்செடிகள் தலையாட்டி அலை மோதுவதுபோல எங்கு நோக்கினும் அலை அலையாய் மனிதர்கள். முகம் நிறைந்த மகிழ்ச்சிப் புன்னகையுடன் மக்கள் நடமாட, இரவில்கூட மதுரை பகல் போலவே காட்சியளித்தது.

இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்கு புத்துயிர் கொடுத்தவர்களிலே ஒருவர் பேரறிஞர் அண்ணா. அவரைத் தலைவராகவும் தெய்வமாகவும் ஏற்றுக்கொண்ட எம். ஜி. ஆர். தன்னை வளர்த்த தமிழுக்கு; தமிழ்த்தாய்க்கு இந்த உலகத் தமிழ் மாநாட்டில் பெருமை கூட்டியுள்ளதை வந்திருந்த மக்களெல்லாம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தனர்.

## அலை ஓசை சென்னை 5-1-1981

எங்கெங்கும் மக்கள் வெள்ளம்
அலங்காரத் தோரணங்கள், வண்ண விளக்குகள்
பாண்டியர் ஆட்சிகாலத்தை பிரதிபலிக்கும் அற்புதக் காட்சிகள்

## மதுரை நகரமே விழாக்கோலம்

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி மதுரை நகரமே விழாக்கோலம் பூண்டிருக்கிறது. எங்கு திரும்பினும் அழகு தோரணங்கள், வண்ண விளக்குகள், அலங்கார வாயில்கள், எழில் கூட்டும் மணி மாடங்கள் என கூடல் மாநகரமே கோலாகலமாக காட்சி அளிக்கிறது.

மதுரம் என்ற சொல்லிலிருந்துதான் மதுரை என்ற பெயர் வந்தது என்று சொல்வார்கள். மதுரம் என்றால் இனிமை என்று பொருள்.

யாழில் இனிய வாணிதேவி மதுரவாணி எனப்படுகிறாள். தமிழ் தேனினும் இனிய மொழி தேமதுரத் தமிழ் என்றார் பாரதியார். தமிழ் என்பதற்கும் இனிமை என்பதே பொருள்.

இந்த தமிழ் மணத்தை உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் உலகெங்கும் பரப்ப அமெரிக்கா, பிரிட்டன் பிரான்ஸ் மேற்கு ஜெர்மனி, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, ஆப்பிரிக்கா நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் வெள்ளியன்றே மதுரை நகருக்கு வந்து சேர்ந்தனர்.

ஜப்பானிய மொழித்துறையிலும், இலக்கியத்துறையிலும் புகழ்மிக்க இரு ஜப்பானிய பேராசிரியர்கள் ஜப்பானிய மொழிக்கும், தமிழுக்கும் நெடுங்காலமாகவே தொடர்பு உண்டு என்பதை தக்க ஆதாரங்களுடன் எடுத்துக் காட்ட இங்கு வந்துள்ளனர்.

இந்த வெளிநாட்டு பிரதிநிதிகள் எங்கெங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதன் பொருள் விளங்கி நிற்கும் மதுரையம்பதியின் அழகிலும் அம்சத்திலும் வியந்து போயுள்ளனர். வட்டமாக அமைந்துள்ள வீதிகள், சங்கிலிக் கோவையென தொடர்வரிசையாக உள்ள வீட்டமைப்புகள், அழகுக்கு அழகு சேர்க்கும் அலங்கார வாயில்கள் அனைத்துமே அவர்களது உள்ளங்களைக் கொள்ளை கொண்டுள்ளன.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் புறநானூற்று தொடர் ஐந்தாவது உலகத் தமிழ்மாநாட்டின் பொன்மொழியாக விளங்குவதை அவர்கள் கண்டார்கள்.

பாண்டியர்கள் ஆண்டபொற்காலத்தை அவர்கள் கண் எதிரே கண்டார்கள். பொன்னும் மணியும், முத்தும் பவழமும், அங்காடிகளில் கொட்டி குவித்து விறுவிறுப்பான வாணிகம் நடைபெற்ற பண்டைய காட்சிபோல கூடல் மாநகரின்

கடை வீதிகளில் களை கட்டியிருந்த காட்சியும் அவர்களைப் பெரிதும் கவர்ந்தது.

நக்கீரர் வளர்த்த தமிழ் வெளிநாட்டினரை எந்த அளவுக்கு கவர்ந்து உள்ளது என்பதற்கு ஐரோப்பிய நாட்டுப் பிரதிநிதிகள் குழுவில் இடம் பெற்றுள்ள பெண்மணிகள் தட்டுத் தடுமாறி அல்ல—சரளமாக அழகு தமிழில் பேசுவதே அற்புதச் சான்றாகும்.

பிரதிநிதிகள் அனைவரும் நல்லமுறையில் கவனிக்கப்பட வேண்டும் என்பதில் அரசு காட்டிவரும் கவனமும் அவர்களுக்கு மனநிறைவை ஏற்படுத்தியிருக்கிறது.

## மலையாள மனோரமா 11-1-1981

இலட்சக்கணக்கில் தமிழ் மக்கள் மிக்க ஆர்வமுடன் பங்கெடுத்துக் கொண்ட அலங்கார ஊர்வலத்துடன் 25 லட்சம் மக்கள் பங்கேற்ற இறுதி விழாவுடன் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டிற்கு திரை வீழ்ந்தது.

நாலரை கோடி மக்கள் தொகை கொண்ட தமிழ் நாட்டின் எல்லா நகரங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் புண்ணிய புராதன நகரமாகிய மதுரை நகரத்திற்குள் பிரவேசிக்கத் தொடங்கிய மக்கள் வெள்ளம், இம்மாபெரும் நகரத்தை மக்கள் கடலாக மாற்றியது.

## கேரளா பத்திரிகா-திருவனந்தபுரம் 11-1-1981

இறுதி நாளான இன்று திராவிடப் பண்பாட்டை பிரதிபலிக்கும் அழகிய ஊர்திகள் அடங்கிய ஊர்வலம் நடைபெற்றது.

கலைநிகழ்ச்சிகள் கவியரங்கம் விவாதங்கள்—ஊர்வலம், மதுரை தனது பொற்காலத்தினை மீட்டெடுத்தது போலிருந்தது, கடந்த சில தினங்கள்.

பாண்டிய, சோழ, சேர மன்னர்களின் காலத்தின் நினைவுகள் தலை தூக்கி நின்றது. நகரம் தூங்குவதற்கே மிகவும் கஷ்டப்பட்டது. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு அவ்வளவு முக்கியம் வாய்ந்ததாக இருந்தது தமிழ் மக்களுக்கு.

'திருவிழா' அரங்கேறிக் கொண்டிருக்கையில் மக்களின் கவனத்தை அதிகம் ஈர்த்தது, முதலமைச்சர் மக்கள் திலகம் எம். ஜி. இராமச்சந்திரன்தான்.

## தனி நிறம் திருவனந்தபுரம் 10-1-1981

''தமிழின் பண்பாட்டையும் கலையினையும், வண்ணப் பொலிவினையும் அழகினையும் பறைசாற்றும் வண்ணம் இருந்த மிகப் பிரம்மாண்டமான அலங்கார ஊர்வலத்துடன் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு முடிவுற்றது. சிந்தையைத் தூண்டும் வண்ண கலை நோக்குடன் அமைக்கப்பட்டிருந்த அலங்கார ஊர்திகள் அடங்கிய ஊர்வலத்தினைக் காண சாலை ஓரங்களில் லட்சக்கணக்கில் மக்கள் வெள்ளம் திரண்டு கூடியிருந்தது.''

## இந்தியன் எக்ஸ்பிரஸ் மதுரை 5-1-1981

### வண்ணமிகு தமிழ் மாநாடு தொடங்குகிறது

தமிழ் மக்களுடைய எண்ணமும் மதுரை மக்களுடைய கனவும், உலகத் தமிழ் மாநாடு தொடங்கப்பட்டபோது மெய்யாகிவிட்டது. ஆர்வமும் எழுச்சியும் ஒருங்கே மலர்ந்திருந்த மாநாட்டில், தமிழ்நாடு ஆளுநர் தமிழின் பண்டைய பெருமையையும் தற்போதுள்ள நிலையையும் எதிர்காலத்தில் தமிழ் அறிஞர்கள் ஆற்ற வேண்டிய கடமையையும் நிறைவுறுத்தி மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

மாநாட்டு அமைப்பு, மிகுந்த கவர்ச்சியூட்டியது. சங்க காலம் திரும்பிவிட்டதோ என்று நினைக்கத்தக்க அளவில் தமிழ் ஏற்றம் பெற்றது. முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் பேச்சை மக்கள் மிகுந்த அமைதியுடன் கேட்டனர். ஒரு வகையில் இது அவருக்கு வெற்றி நாட்டிய நாளாகும்; அவரது உழைப்பு பலனளிப்பதை அவர் காண முடிந்தது.

## இந்தியா டைடிங்ஸ் 25-1-1981

தமிழர்கள் கண்கவர் விழாக்களை நடத்துவதில் விருப்பமுள்ளவர்கள். அந்த வகையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு அவர்களுக்கு நல்வாய்ப்பினை அளித்துள்ளது.

பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்த மதுரை அழகு படுத்தப்பட்டு மணமகள்போல் காட்சியளித்தது. ஒரு வார காலம் நடைபெற்ற தமிழ்விழாவிற்கு லட்சக்கணக்கில் தமிழர்கள் வருகை தந்தார்கள்.

தமுக்கம் மைதானம் புதுப்பொலிவு பெற்று விளங்கியது. தமிழ் மொழி இலக்கியம், நாகரிகம் ஆகியவற்றின் பழமையை எடுத்துக் காட்டும் வகையில் பொருட்காட்சி அமைக்கப்பட்டு இருந்தது.

கோலாகலமாக மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு முடிவுற்றது: இதை வெற்றிகரமாக நடத்திய பெருமைக்குரிய முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பாராட்டப்பட்டதும் வாழ்த்தப்பட்டதும் நியாயமே

## இல்லஸ்டிரேட் வீக்லி பம்பாய் 4-1-1981

### மக்கள் நினைவில் நிற்கும் மாநாடு

இந்த மாநாட்டினைப் பற்றிய நினைவு அங்கு கூடவிருக்கும் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் மனதில் நிலைத்து நிற்கும் வகையில் நிகழ்ச்சிகள் அமைந்திட அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது தமிழக அரசு.

ஜூன் திங்களில் மீண்டும் ஆட்சிக்கு வந்த அ.இ.அ.தி.மு.க. அரசு உடனடியாக எடுத்த முடிவுகளில் இந்த மாநாட்டு நாள் பற்றியதும் ஒன்று.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது 1968ல் சென்னையில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்திய நாட்களில்—மதுரையில் மாநாடு நடைபெறவிருப்பது நல்ல பொருத்தமாகும்.

சென்னையில் நடந்து 12 ஆண்டுகள் கழிந்து மதுரையில் இந்த மாநாடு நடக்கின்றது.

தமிழ் மொழியின் தோற்றம், வளர்ச்சி குறித்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பித்து அறிஞர்கள் விவாதிக்கும் கருத்தரங்கு நிகழ்ச்சியோடு—கலைப் பெருவிழாவாகவும் இந்த மாநாடு நடக்கவிருக்கின்றது.

## பிரி இந்தியா  சென்னை  4-18-1-1981

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு, மாநாட்டை நடத்தியோரின் எதிர்பார்ப்புகளை மிஞ்சும் வகையில் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் மாநாட்டில் பங்கேற்றதுடன், தமிழ்நாட்டின் கலை, கலாச்சாரத்தை வளர்க்கும் வகையில் நடைபெற்ற அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பையும் பார்வையிட்டார்.

## ஈஸ்ட்டர்ன் எக்கனாமிஸ்ட்  18-24-1-1981

### ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு

அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சிக்கு வந்த ஏழு மாதங்களில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் நாலரை கோடி தமிழ் மக்களிடம் தனக்குள்ள கலை, அரசியல் செல்வாக்கை நிலைநிறுத்தியுள்ளார்.

இச்செல்வாக்கு உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற ஒரு வார கால நிகழ்ச்சிகளுக்குப் பிறகும் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் கலந்து கொண்ட இறுதிநாள் நிகழ்ச்சிக்குப் பிறகும் தெள்ளென விளங்கியது.

இத்தகைய பெருமைமிக்க நிகழ்ச்சி ஒன்றை மதுரை இதுவரை கண்டதில்லை.

இந்நிகழ்ச்சிக்கு பொதுமக்கள் அளித்த ஆதரவு எழுத்தால் வடிக்க இயலாது.

இச்சிறப்புக்கு உலகத் தமிழ் மாநாடு, பண்டை நாட்களில் தமிழ்மொழி பெற்றிருந்த சிறப்பையும் உலகளாவியத் தன்மையினையும் எடுத்துக் காட்டுவதுடன் இன்றுள்ள தமிழ் மக்களுக்கு அத்தகைய உன்னத நிலையை எய்த வேண்டுமென்ற உணர்ச்சியை ஊட்டுவதாகவும் அமைகிறது.

ஒரு வார காலம் நடைபெற்ற இம்மாநாட்டில் தமிழ் வளர்ச்சிக் குறித்து ஆழ்ந்த ஆய்வும் பயன்தரத்தக்க விவாத

மும் நடைபெற்றது. இம்மாநாடு தமிழ்நாட்டின் பண்பாடு, சமுதாய ஏற்றம் இவற்றின் வரலாற்றுச் சிறப்புகளை பல் வேறு வகையில் விளக்கிடும் அழகுமிகு ஊர்திகளின் ஊர்வலத் துடன் நிறைவுற்றது.

திருமதி இந்திரா காந்தி அம்மையார் நிறைவு நாள் விழாவில் கலந்து கொண்டது, தமிழ் மக்களிடம் அவர் கொண்டுள்ள மதிப்பைக் காட்டுகிறது.

## பேட்ரியாட் டெல்லி 10-1-1981

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் தமிழ் மீது பெரும் காதலுடையவர். திரைப்படத் தயாரிப் பிலும் நடிப்பிலும் சீர்திருத்தவாதியான அவர் நடித்த பல படங்கள் தமிழுக்கே முனைப்பை ஏற்படுத்தியுள்ளன. தமிழ்க் கல்வியின் மீது தனக்குள்ள காதலுக்கேற்ப, தமிழ்க் கலாச் சாரத்தின் தலைநகரான மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்த இவர் திட்டமிட்டுள்ளார். மதுரை ஒரு கோவில் நகரம் மட்டுமல்ல. அதனைத் தலைநகராகக் கொண்டிருந்த தமிழ் மன்னர்கள் தம் தாய்மொழியை நேசித்து அதன் மேம்பாட்டுக்காக அயராது பாடுபட் டார்கள்.

இப்போது மாநாட்டுக்காக மதுரை நகரே விழித்துக் கொண்டுள்ளது.

விழாக்கோலம் பூண்டுள்ள மதுரை பாண்டிய மன்னர் களின் பழம் பெருமையை மீண்டும் பறைசாற்றுகிறது.

## சண்டே ஸ்டான்டர்டு சென்னை 4-1-1981

### மதுரை மாநாடு—தமிழின் வெற்றி

மதுரையின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுகின்ற நிகழ்ச்சி தொடங்குகின்றது. பண்டைய பெருமைமிக்க நகரம் உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகளின் கவர்ச்சியில் திளைத்து நிற்கிறது. இது தமிழ் மொழியின் மாட்சியால் ஏற்படும் திகைப்பு. இந்நகருக்கு இது புதிதன்று, ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழில் பாமாலைகளை குவித்து பெருமையூட்டிய நகரம் இது. இருப்பினும் இம்

மாநாட்டில் ஒரு புதுமை இருக்கின்றது. சங்கப் புலவர்கள் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு இம்மொழி வளர்ச்சிப் பெற்றுள்ளது. எண்ணிலடங்கா எழுத்தாளர்களும் அறிஞர் களும் இம்மொழியை வளர்த்து நவீன தொழில் நுட்ப உலகத்திற்கேற்றவாறு பக்குவப்படுத்தியுள்ளார்கள். இம் முறையில் இம்மொழிக்கு ஏற்றம் அமைத்து மேலும் செம்மை படுத்திட இம்மாநாடு வழிவகுக்கும். சாதாரண மக்களும் இம்மாநாட்டில் பங்கு கொண்டு சிறப்படைய வேண்டு மென்று நிர்வாகிகள் தீர்மானித்து செயலாற்றுவது சரியே.

## டெக்கான் கிரோனிகல், செகந்தராபாத் 11-1-1981

### மதுரையில் வண்ணமிகு அலங்கார ஊர்திகளின் ஊர்வலம்

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட மிகவும் கவர்ச்சிமிக்க வண்ணமிகு அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு மதுரை நகரில் இன்று நடைபெற்றது.

தமிழர்களின் புகழ்மிக்க நாகரிகம், பண்பாடு, வரலாறு, இலக்கியம் கலைகள், சமயம் முதலியவற்றை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்த இந்த ஊர்வலத்தை பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் கண்டார். 14 கிலோ மீட்டர் நீளம் இந்த அணிவகுப்பு நடந்தது.

## டெக்கான் கிரோனிகல் செகந்தராபாத் 3-1-1981

### உறவுகளை வலுப்படுத்தும் தமிழ் மாநாடு

வைகைக் கரையோரமுள்ள பழமையான நகரில் பன்னாட்டு அறிஞர்கள் கூடும்போது தமிழின் புராதனப் பெருமை மீண்டும் கண்ணெதிரே தோன்றும்.

தமிழ்க் கலாச்சாரத்தின் ஊற்றாக விளங்கிய கடைசி சங்கமான மூன்றாம் தமிழ்ச்சங்கம் இருந்தது மதுரையில் தான். தங்கள் பெருமைக்குரிய மரபைப் பற்றித் தெரிந்து வைத்துள்ள மதுரை நகரின் மக்கள், மாநாட்டுக்கு வருவோரை விருந்தோம்ப ஆயத்தமாயுள்ளனர்.

அனைத்துலகத் தமிழராய்ச்சிக் கழகமும், தமிழ்நாடு அரசும் இணைந்து நடத்தும் உலகத் தமிழ் மாநாட்டில் உலகெங்கும் உள்ள தமிழர்களிடையே கலாச்சார இணைப்புகள் பலப்படுத்தப்படும். இருபது நூற்றாண்டு களாக இருந்துவரும் தமிழின் மேன்மை இங்கே விவரிக்கப் படும்.

## மெயில் சென்னை 5-1-1981

### எங்கே தமிழ் வெல்கிறதோ அங்கே

தமிழ்நாட்டில் மதுரையில் தற்போது நிகழும் 5வது உலகத்தமிழ் மாநாடு தமிழ் மொழியின் பழமை, பெருமை, சிறப்புக்களை நிலைநிறுத்த நடக்கவில்லை. இவை ஏற் கனவே நிலைநிறுத்தப்பட்டுவிட்ட உண்மைகள். ஐந்து மாநாடுகளில் மூன்று வெளிநாடுகளில் நடந்ததே இதற்குச் சான்றாகும். ஆளுநர் சாதிக் அலி துவக்க உரையில் நம் கவனத்துக்குரிய சில அம்சங்களைக் கூறியுள்ளதைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

தமிழின் எளிமையும் வளைந்து கொடுக்கும் தன்மையும் வெளிப்பாட்டுத் திறனுமே அதன் புகழுக்குக் காரணம் எனச் சரியாகவே கூறிய ஆளுநர், இவற்றிற்காக நாம் பெருமையும் அடக்கமும் கொள்ள வேண்டும் என்றார். அவரது அறிவுரை இதுதான்: ''நம் பெருமையை வரம்புக்குள் வைத்துக்கொண்டு அதைப் பரவலான மேம்பாட்டுக்குப் பயன்படுத்துவதே முறையாகும்''. இது தமிழுக்கு மட்டுமல்ல; எல்லா மொழி களுக்கும் பொருந்தும். இம்மொழிகளின் மரபுப் பெருமை களை நினைவுபடுத்தும் வேலை முழுமூச்சுடன் நடக்கிறது. பல நூற்றாண்டுகளாகவே தன் வளர்ச்சியையும் பரந்து விரி யும் ஆற்றலையும் தமிழ் காட்டி வந்த போதிலும் இன்னும் புதிய சொற்களுக்கும் கருத்துக்களுக்கும் அது தன் கதவு களைத் திறந்து வைக்க வேண்டும். தன் தனித்தன்மையை யும் இழந்துவிடாமல், மதுரையில் கூடும் தமிழறிஞர்கள் இதற்கு முக்கியத்துவம் தர வேண்டும்.

இனி, புதிதாகத் தமிழில் வர எதுவுமில்லை என்ற மூடிய புத்தக மனப்பான்மை தமிழ்க் கலாச்சாரத்துக்கும் மரபுக் கும் முரண்பட்டது. ஆங்கிலம் பரவலாக பிரபலமானதன் காரணமே, அது பிறமொழிச் சொற்களைத் தானே ஏற்கும் தன்மையோடு இருந்ததுதான். இன்றைய நவீனத் தொழில் நுட்ப யுகத்தில் தமிழும் முழு மனதோடு இந்த மனப்பான் மையை மேற்கொள்ள வேண்டும். இந்தத் திசையில் செல் வதற்கான உந்துதலை அறிஞர்களே தரவேண்டும்.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி திரு. சுப்ரமணியத்தின் கருத்தை விளைவில்லாதது என ஒதுக்க இயலாது. குறைந்த எழுத்துக்களுடைய ஆங்கிலம் அதனாலேயே வலிமையுள்ளது என ஒரு கருத்தும், அதிக எழுத்துக்களுள்ளதால் தமிழ் இன்னும் வலிமை பெறக் கூடியது என்று திரு எம். ஜி. இராமச்சந்திரன் கூறிய கருத்தும் கவனிக்கத்தகுந்தன. இருவருமே இது பற்றி முடிவு செய்வதை ஆராய்ச்சியாளர்களுக்கு விடுவதுதான் சரி என ஒப்புக் கொள்ள வேண்டும். இதுபற்றி சரியான முடிவுக்கு வரக்கூடியவர்கள் ஆராய்ச்சியாளர்களே. இம்மாநாட்டின் விளைவாக இத்துறையில் ஆராய்ச்சி நடக்குமானால், தமிழின் மறுமலர்ச்சிக்கு அது வித்திடுவதாக அமையும்.

ஆனால், ஸ்ரீலங்கா பிரதிநிதிக்கு எம். ஜி. ஆர். கூறியது சிறந்த முன்னுதாரணமாக அமைந்து, மாநாட்டின் ஆரோக்யமான செல்வாக்கைத் தொடர உதவியது. எந்த நாட்டிலுள்ள தமிழர்களுக்குச் சிக்கல் ஏற்பட்டாலும் பிற தமிழர்கள் உதவ வேண்டுமென ஸ்ரீலங்கா பிரதிநிதி கோரினார். இந்த உதவி மொழி, கலாச்சார விஷயங்களில்தான் இருக்க வேண்டும் என்றும், மாநாடு அரசியலுக்கு அப்பாற்பட்டதானதால் அரசியலை நீக்கிவிட வேண்டும் என்றும் எம். ஜி. ஆர். தெளிவுபடுத்தினார். மாநாடு தமிழ் இலக்கியம் கலாச்சாரம் சார்ந்த விவாதத்துக்கானது அதில் அரசியலை நுழைத்தால் விளைவுகள் விபரிதமாகிவிடும்.

மிகவும் பயனுள்ள அமைப்பாக உருவாக்கப்படவிருக்கும் உலகத் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகம் பற்றீ நன்கு சிந்திக்க வேண்டும். அந்தச் சங்கத்தின் நிர்வாகத்தை அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிக் கழகம் போன்ற அமைப்பிடம் ஒப்படைத்து விட்டு ஒரு கணிசமான நிதி தருவதுடன் அரசு திருப்திப்பட்டு ஒதுங்கிக்கொள்ளலாகாதா?

இந்தத் திட்டம் பாராட்டுக்குரிய திட்டம்தான். ஆனால் அதை அறிஞர்களும் ஆராய்ச்சியார்களுமே நிர்வகித்தல் வேண்டும். அரசின் நேரடி நிர்வாகம் இருந்தால் பிரச்னைகள் எழும். ஆராய்ச்சி நூல்கள், இலக்கியம் எழுதுவதை ஊக்குவித்தல் எல்லாம் அறிஞர்களும் எழுத்தாளர்களும் சரித்திராசியர்களும் நிறைந்த உலகத்தின் பணி. இதில் அரசின் அக்கறை நிதியுதவுவதில் மட்டுமே இருக்கலாம். உலகத் தமிழ்ச் சங்கம் தமிழ்நாடு அரசின் ஒரு பிரிவாக அமைந்து விட்டால் அது அனைத்துலகத் தன்மையை இழந்துவிடும். எல்லா நாட்டு அரசுகளும் இதற்குதவ முன்வந்தால் அப்போதுதான் உலகத் தமிழ்ச்சங்கம், அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்திற்குச் சரியான இணையாக அமையும்.

## இந்து பெங்களூர் 5-1-1981

### 'மதுரை என்றும் இளமை'

ஆர்வம் மிக்க நாட்களின் தொடக்கம். தொடக்க நாளிலிருந்து ஒருவார காலத்திற்கு எங்கணும் துடிப்பு மிக்க செயற்பாடுகள்தான். மதுரை நகர் எவ்வளவு வளர்ச்சி பெற்ற போதிலும் அதன் பண்பாட்டு, கலைச் சிறப்பை இழக்காமல் என்றும் உள்ளது. இந்நகர், என்றும் சீரிளமைத் திறன் பெற்றுத் திகழும் தமிழ் மொழிபோல் என்றும் இளமை குன்றாது விளங்குகிறது.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள வந்துள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகளில் சீன நாட்டு அறிஞர் இருவர் தங்கு தடையின்றித் தமிழில் பேசுகின்றனர்.

## இந்து சென்னை 4-1-1981

### தமிழ் மாநாட்டிற்கு மதுரை தயாராகிறது

''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என அரசியல் மேடைகளிலும் தீவிரத் தமிழ் விரும்பிகளின் மேடைகளிலும் கேட்கின்ற முழக்கத்திற்குச் சரியான சூழ்நிலை மதுரை நகர் முழுவதும் நிலவுகிறது. நாளை தமிழ் மாநாடு துவங்கவிருக்கிறது.

மாநாட்டின் இலச்சனை பொறித்த பல வண்ணக்கொடிகளும், சாலைகள் தோறும் சலசலக்கும் தோரணங்களும், பெரிய சாலைகளில் வரவேற்கும் வளைவுகளும், மாநாட்டின் பல்வேறு நிகழ்ச்சிகள் நடக்குமிடங்களுக்கு இடப்பட்டுள்ள பெயர்களுமாக, தமிழ் மொழியின் கலாச்சாரத்தின் கடந்த கால உன்னதம் திரும்பக் கண்முன்னே வருகிறது.

நினைவு வளைவுகளுக்குக் கடைசி நிமிட வேலைகள் இன்னும் நடக்கின்றன. கண்காட்சி நிகழும் தமுக்கம் மைதானத்தின் மூன்று வளைவுகளும் முழுமை தரப்படுகின்றன.

விழாக்கோலம் பூண்டுள்ள மதுரைக்கு வந்துள்ள ஆயிரக் கணக்கானோர், குழுக்கள் குழந்தைகளாக, நகரெங்கும் உலாவி, நள்ளிரவு வரையிலும் நடமாடி, ரசனையுடன் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட கட்டடங்களைக் கண்டுக் களிக்கின்றனர்.

முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில், ஆளுநர் சாதிக் அலி, மாநாட்டையும் அனைத்துலகக் கருத்தரங்கையும் துவக்கி வைப்பார்.

ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் துவக்க விழாவுக்காக ஏற்படுத்தியுள்ள திறந்தவெளி அரங்கிற்கு மாபெரும் தமிழ்ப் புலவரான திருவள்ளுவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது. கருத்தரங்க மண்டபம் 'மூவேந்தர் அரங்கம்' என சேர, சோழ, பாண்டியர்களை நினைவுபடுத்தும் விதத்தில் அழைக்கப்படுகிறது.

கவிஞர்களும் புலவர்களும் ரேஸ்கோர்ஸ் அரங்கில் இலக்கியம் பேசும் அதே நேரத்தில் உலகெங்குமிருந்து வந்துள்ள பிரதிநிதிகள் எழில்மிகு காமராசர் பல்கலைக்கழகத்தில் நகருக்கு 13 கிலோ மீட்டர்களுக்கப்பால் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வழங்குவார்கள்.

## இந்தியன் எக்ஸ்பிரஸ் சென்னை 7-1-1981

### உலகத் தமிழ் மாநாடு!

இலக்கியம், மொழி பற்றிய மாநாடுகளில் பொதுவாக மக்கள் ஆர்வம் அவ்வளவாக இருப்பதில்லை. ஆனால் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு இதற்கு விதிவிலக்கு.

உலகமெங்கிலும் உள்ள தமிழர்கள் தங்கள் மொழி, கலாச்சாரம் பற்றிய உணர்ச்சிகளைப் பிரதிபலிக்க இந்தத் தமிழ் மாநாடு வழி வகுத்துள்ளது. இந்த மாநாடு பற்றி குறைகூறுவது தேவையற்றது.

இந்த் மாநாட்டுக்கு ரூ. 12 கோடி அளவுக்கு செலவிடுவது பற்றியும் குறை சொல்லியுள்ளனர். என்னதான் சொன்னாலும் இதுபோன்ற மாநாட்டினால் தமிழுக்குச் சிறப்பிடம் கிடைக்கிறது என்பது உண்மை.

இந்தத் தொகையில் பெரும்பகுதி மதுரை நகர வளர்ச்சிக்கு மக்கள் நலத்துக்குச் செலவிடப்பட்டுள்ளது. பணத்தால் அளவிட முடியாத பல நல்ல பலன்கள் இதன் மூலம் ஏற்பட்டுள்ளன.

தொன்மையான மொழிக்குச் சொந்தக்காரர்களான தமிழர்கள் இதைப் பிரபலமாக்க வேண்டும் என விரும்புவது சரியே! தமிழ் நிறைவான மொழியாக வேண்டும். இந்த வகையில் உலகத் தமிழ்ச் சங்கம் அமைத்து ஆண்டுதோறும் மாநாடு நடத்தப்படும் என்று முதல்வர் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது!

## இந்து ஹைதராபாத் 4-1-1981

### கோவில்கள் நிறைந்த மதுரை மணக்கோலம் பூண்டுள்ளது

பண்டைய பாண்டியர் தலைநகரான மதுரை, திருமணத்தின்போது மணமகள் மணக்கோலம் பூண்டுள்ளது போல் உலகத் தமிழ் மாநாட்டின்போது அழகும் மணமும் செறிந்து திகழ்கிறது. இலக்கிய வளர்ச்சிக்கெனக் கூடும் இந்தப்பெரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அறிஞர்களும் சாதாரணப் பொதுமக்களும் மதுரைக்கு வந்த வண்ணம் உள்ளனர்.

இரண்டுமுறை தள்ளி வைக்கப்பட்ட இம்மாநாடு, 2,000 ஆண்டுகளாக தமிழ் வளர்ச்சியில் வழிவழி பெருமை பெற்றுத் 'தமிழ்க் கூடல்' மாநகர் என்று அழைக்கப்பட்ட அதே நாட்களில் இப்போது நடைபெறுகிறது. கி.பி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அவர்களே புலமை பெற்றுத் திகழ்ந்த பாண்டிய மன்னர்களின் ஆதரவில் தமிழ்ச் சங்கம் மதுரையில் செழித்தோங்கியது. மூன்று சங்கங்கள் இருந்தனவென்றும் 608 புலவர்களின் அரிய நூல்களில் முதல் இரண்டு சங்கப் புலவர்களின் நூல்கள் கடலால் அழிந்தனவென்றும் வழிவழிச் செய்தி தெரிவிக்கின்றது. மூன்றாவது சங்கத்தில் இருந்த 49 புலவர்களின் நூல்களில் 18 நூல்களே தற்போது கிடைத்துள்ளன.

## இந்தியன் எக்ஸ்பிரஸ் மதுரை 8-1-1981

### பழமையை நோக்குங்கால்

மதுரையில் உலகத் தமிழ் மாநாட்டின் ஒரு பகுதியாக தமுக்கம் மைதானத்தில் பொருட்காட்சி திறந்து வைக்கப்பட்டது. திறக்கப்பட்ட உடன் மக்கள் வெள்ளம் அரங்கை நிறைத்தது.

இப்பொருட்காட்சி செய்திகளின் சுரங்கமாகத் திகழ்கிறது.

தொல்பொருள் ஆய்வுத்துறை அமைந்துள்ள கூடம் மிகச் சிறந்த வகையில் உள்ளது. இக்கூடம் சிறந்த கற்பனைத் திறனால் அமைக்கப்பட்டுள்ளது.

## இந்தியன் எக்ஸ்பிரஸ் மதுரை 6-1-1981

### பண்பாட்டு விழாவில் கவர்ச்சிமிகு பொருட்காட்சி

சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பண்டைய வரலாறு தொல் பொருள் ஆய்வுத்துறை அமைத்துள்ள இடத்தில் தமிழர்களின் பண்டையப் பெருமை சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. சிந்தையைத் தூண்டும் பல பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக தர்மபுரி மாவட்டத்திலுள்ள நல்லப்பாடியில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்கள் காண்பதற்கு அரிய காட்சியாகும்.

திருவரங்கம் ஆலையத்திலுள்ள ஓவியங்களில் காணப்படும் உடைகள், பிற அணிகள் முதலியவற்றைக் காட்டும் ஓவியங்களும் புகைப்படங்களும் நடனம் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு ஆர்வத்தையும் எழுச்சியையும் ஊட்டுவதாகும்.

## இந்தியன் எக்ஸ்பிரஸ் மதுரை 6-1-1981

### முதல் முக்கியத்துவம் பெற்றுள்ள மாநாடு

உலக மொழி ஒன்று மேலும் வளர்ச்சி பெற வேண்டுமானால் உலக மாநாடும் அவசியமாகும். மதுரை மாநகரில் இம்மாநாடு நடப்பது மகிழ்ச்சிப் பெருக்கூட்டும் நிகழ்ச்சிதான். இங்கு நடைபெறும் நிகழ்ச்சி, முதலிடம் பெறத்தக்க சிறப்பு வாய்ந்ததாகும். மதுரைக்கோயிலில்மூன்றாவது சங்கம் எவ்வாறு செயல்பட்டது என்பது நமக்குத் தெரியாது. முன்பிருந்த சங்கத்தில் பாண்டியற்கு மன்னர்களின் ஆதரவு இருந்தது என்ற போதிலும் தற்போதுள்ள மாநாட்டு நிகழ்ச்சிகள்போல் வியத்தகு முறையில் பெரும் சிறப்பை ஈட்டியிருக்க முடியாது.

பண்டு தமிழ் வளர்த்த பெருமை மிக்க மதுரையம்பதியிலேயே இன்றைய ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெறுவது, வரலாற்றில் புகழ்மிக்க சந்தர்ப்பமாகும்.

# தமிழ் வார, மாத இதழ்கள்

## கலைக்கதிர் 4-1-1981

### ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு!

தமிழின் சிறப்புக்கள்; தமிழுக்கு வேண்டிய சிறப்புக்கள் தமிழுக்கு ஏற்பட்ட ஏற்பட்டு வருகிற இடர்ப்பாடுகள்; தமிழ் நாட்டிற்கு நலன் செய்வன, தீமை தருவன ; தமிழ்ப் பண்பாட்டின் சிறப்புக்கள் ஆகியவற்றை விளக்கமாக எடுத்துரைத்து, தமிழின் தனித்தன்மை, மாறாத நல்லியல்புகள் நிலைபேறுடையனவாக இருக்கவும் வளர்ந்து வருகிற உலகோடு ஒன்றி வளர்ந்து உயரவும் அறிஞர்கள் வழிகாட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடும்; உலகெங்கணும் பரவியுள்ள தமிழர்களையும் தமிழறிந்தவர்களையும் ஒன்றுதிரட்டி அவர்கட்கும் தாய்த் திருநாட்டிற்கும் இடையே உள்ள நல்ல தொடர்பை உணர்த்தி உறவை வளரச் செய்யும் நோக்கத்தோடும்; உலகில் பல்வேறு மொழியாளர்களும் தமிழின் சிறப்பை உணர்ந்து தமிழ் கற்கும் ஆர்வத்தை வளர்க்கும் நோக்கத்தோடும்; பிறநாட்டவர்—பிறமொழி பேசுபவர்கள் வாயிலாகத் தமிழ் சிறப்பைக் கேட்டு மகிழும் நோக்கத்தோடும் தமிழக அரசும் அனைத்து நாட்டுத் தமிழ் ஆராய்ச்சிக் கழகமும் இணைந்து, சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த கூடல் மாநகரில் 1981-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4ஆம் நாள் முதல் 10ஆம் நாள்வரை நடத்திய ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு நோக்கத்தால் வெற்றிபெற்றுள்ளது என்று சொல்லுதல் வேண்டும். தமிழ் மீது உள்ள பற்றுதலாலும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களிடம் மக்கள் கொண்டுள்ள ஈடுபாட்டாலும் தமிழர் வரலாறு பண்பாடு பற்றிய காட்சிகளைக் கண்டும் பேச்சுக்களைக் கேட்டும் பயன்பெறும் நோக்கத்தாலும் தொடக்க விழா முதல் இறுதிவரை மதுரையிலே தமிழகமே வந்து கூடிவிட்ட கோலத்தைக் காணும் காட்சியைப் பெற்றோம்.

## பொது நிலைக் கருத்தரங்கு

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் அறிஞர் பெரு மக்கள் பங்கேற்கும் பொது நிலைக்கருந்தரங்கப் பொழிவுகள் மதுரை மாநகர் பந்தயத் திடலில் அமைக்கப் பெற்ற 'மூவேந்தர் அரங்கில்' நடைபெற்றன.

6 நாட்களிலும் அரசியல், கவிதை, கட்டுரை, சொற்போர், ஆராய்ச்சி, போன்ற பல்வேறு துறைகளில் சிறப்பறிவு பெற்ற 200-க்கும் மேற்பட்ட அறிஞர்கள் பொதுநிலைக் கருத்தரங்கில் பங்கு பெற்றனர். நாள்தோறும் நூறாயிரக் கணக்கான மக்கள் அவர்களின் மொழிகளைக் கேட்டு இன்புற்றனர். நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்புற அமைந்திருந்தன.

## பொருட்காட்சி

ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு நடைபெறுவதை ஒட்டி மதுரை தமுக்கம் மைதானத்தில் பெரும் பொருட் செலவில் தமிழக அரசு நிறுவியுள்ள கண்கவரும் பொருட் காட்சியைத் தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர். தலைமையில் கர்நாடக முதல்வர் மாண்புமிகு குண்டுராவ் திறந்து வைத்தார் ''உலகத்தமிழ் மாட்டை மதுரையில் நல்ல முறையில் ஏற்பாடு செய்திருப்பதற்காக மகிழ்கிறேன், தமிழ்க் கலை மிகப்பெரிய புராதனக்கலையாகும். தென்னிந்தியாவில் தமிழ்தான் பழமை வாய்ந்த மூத்த மொழியாகும்'' என மாண்புமிகு கர்நாடக முதல்வர் தமது திறப்புரையில் குறிப்பிட்டார்.

கண்காட்சியின் தொடக்கத்தில் அறநிலையத் துறையின் அரங்கம், தமிழ் வளர்ச்சித்துறையின் மிகப் பெரிய அரங்கம், பண்பாட்டு மைய அரங்கம், பொதுப் பணித்துறையின் அரங்கம், தொல் பொருள் துறையின் அரங்கம், கைத்தறித் துறை அரங்கம், சுற்றுலாத்துறை அரங்கம், நூலகத் துறையினர் அரங்கம் ஆகிய பல அரங்கங்கள் இடம்பெற்றிருந்தன.

கற்று அறிவதைவிடக் கேட்டறிவது சிறந்தது. கேட்டு அறிவதைக் காட்டிலும் கண்டறிவது சிறப்புடையது என்ற வகையில் பல நூல் பயின்று அறியக் கூடிய செய்திகளைச் சில மணித்துளிகளில் அறிந்து கொள்ளும் வண்ணம் எல்லாக் காட்சிகளும் சிறப்புமிக்கனவாய் இருந்தன.

## குமரிக்கண்ட சினிமா

கொடுங்கடலால் கொளப் பெற்ற லெமூரியாக் கண்டம், குமரிக் கண்டம், நாகரிகத்தின் பிறப்பிடம், திராவிடப்பெருங் குடி மக்களின் ஆதி இருப்பிடம் என்றெல்லாம் கூறப்பெறும் லெமூரியாக்காட்சியினை வரலாற்று அடிப்படையில் சினிமாப் படமாக ஆக்கியுள்ளனர். இதனைக் காணும் மக்கள் தங் களின் பழம்பெருமையை உணர்ந்து உயரவும்; ஊக்கம் கொள்ளவும் வாய்ப்பு உண்டு. இந்நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்த கேரள நாட்டு மாண்புமிகு முதல்வர் திரு. இ. கே. நாயனார் அவர்கள் தமிழ்மொழியின் தொன்மையையும் தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையையும் விளக்கினார்.

## அலங்காரத் தேர்கள்

நாளும் தமிழ் வளர்த்த நான்மாடக் கூடலிலே, நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் ஓர் அங்கமாக 10-1-81 அன்று கண்ணைக் கவர்ந்து கருத்தில் நிலைக்க வைத்த ஊர்வலம் பற்றி ஒரு சில சொற்கள்: பாரத நாட்டின் பிரத மர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் மகிழ்வோடு ஊர்வலக் காட்சிகளைக் கண்டு களித்தார். ஊர்வலத்தின் முதன் முதலில் உலக உருண்டையைக் கொண்டு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கோட்காட்டினைக் காட்டும் காட்சி யும்—காற்சிலம்பாகச் சிலப்பதிகாரம், கை வளையாக வளை யாபதி, இடையணியாக மணிமேகலை, திருமார்புத் தொங்க லாகச் சிந்தாமணி, செவியணியாகக் குண்டலகேசி, நெற்றிச் சுட்டியாகச் சூளாமணி என்றெல்லாம் உருவகப்படுத்தப் பட்ட தமிழன்னை அரசோச்சும் ஆற்றலைச் சுட்டத் திருக் குறளைச் செங்கோலாகக் கொண்ட தமிழன்னை உருவகக் காட்சியும், உழவுத் தொழிலைப் போற்றும் காட்சியைக் காட்டும் ''சுழன்று ஏர்ப்பின்னது உலகம்'' என்ற வண்டியும் அதியமானின் வீரத்தையும், போர்த் திறமையையும் தொண் டைமான் தானே அறிந்து கொள்ளும்படி வஞ்சப் புகழ்ச்சி யாகப் பாடலை அமைத்து ''போரை நிறுத்திய பைந்தமிழ் ஔவை''யைக் காட்டும் அணி பெறு வண்டியும்—கணவனை இழந்த கடுந்துயரிலும், குற்றம் செய்தவன் கொற்றவனே ஆனாலும், அஞ்சாது நீதி பெற வழக்குரைத்த கற்புக் கடவுள் கண்ணகியைக் காட்டும் சிலம்பின் வென்றசேயிழை ஊர்தியும்—தமிழரைப் போலவே தமிழில் சொற்பொழி வாற்றுவதில் வல்லமை பெற்றிருந்த இராபர்ட் டிநொபிளி (1577—1656 இத்தாலியர்) ''சதுரகராதி'' என்ற முதல் தமிழ் அகராதியை இயற்றிய வீரமாமுனிவர் (1680-1742 இத்தாலியர்). திராவிட மொழிகளின் ''ஒப்பிலக்கணம்'' என்ற உலகப் புகழ் பெற்ற நூலை இயற்றிய கால்டுவெல், (1814-1891 அயர்லாந்து நாட்டவர்), திருவாசகம், திருக்

குறள், நாலடியார் ஆகிய தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட ஜி. யு. போப் *(1820-1903* ஆங்கிலேயர்), ஆகிய அறிஞர்களின் திருவுருவங்களைத் தாங்கிய அலங்கார வண்டியும்—

பன்னிரு திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளாக வைக்கப்பட்டுள்ள தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாக உள்ள தேவாரம் பாடிய திருநாவுக்கரசர் (அப்பர்) ஏழாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ள சுந்தரர், ''திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்ற பழமொழிக்கு உரிய திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர், ''திருப்புகழ்'' என்னும் பக்திப் பனுவலைப் பாடிய அருணகிரி நாதர், 'திருமந்திரம்' இயற்றிய திருமூலர், திருமறைக்காட்டில் தோன்றி மக்கள் தொகுதியிடம் அளவு கடந்த அன்பும் அருளும் கொண்டு அருட்பாடல் பாடிய தாயுமானவர், தமிழகத்தில் 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து ஆராயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைக் கொண்ட திருவருட்பாவினையும் உரைநடை நூல்களையும் தமிழகத்துக்குத் தந்த அருளாளர் இராமலிங்க சுவாமிகள் ஆகியோர்களின் திருவுருவங்களைக் காட்சிகளாகக் காட்டும் வனப்புமிகு தேரும்,

தான் சூடிய மாலையைத் திருமாலுக்குச் சூடக் காத்திருக்கும் ஆண்டாளைப் பெரியாழ்வார் வியந்து பார்க்கும் காட்சியைக் காட்டும் தேரும்,

கம்பரின் புலமைத்திறத்தில் கட்டுண்டு கவிசொல்லும் கம்பருக்குச் சேர அரசனே அடைப்பக்காரனாக நின்று வெற்றிலையை மடித்துத்தரும் காட்சியைக் காட்டுவதாக அமைகின்ற அணிசெய் தேரும்.

நாடு முழுவதும் பரவிக் கிடந்த தமிழ் ஏடுகளைத் தேடிப் பதிப்பித்த டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் *(1855-1942)*, தேச விடுதலைப் போராட்ட வீரரும் தமிழ்த் தொண்டு பல நிலைகளில் செயல் வடிவம் பெற்றுச் சிறப்படைய துணை நின்றவருமான கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் *(1872-1931)*, தனித் தமிழ் இயக்கத் தந்தையாகப் போற்றப்படும் மறைமலையடிகளார் *(1876-1950)* தமிழாசிரியராக இருந்து இதழ் ஆசிரியராகப் புகழ் பெற்று, அரசியல் தலைவராய் விளங்கி, தொழிலாளர் தலைவராகச் சிறப்புற்று, தமிழ் அறிஞராய், எழுத்தாளர்க்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த மனிதப் பண்புமிக்க திரு. வி. கலியாணசுந்தரனார் *(1883-1953)* ஆகியோர்களின் திரு உருவங்களைக் காட்சியாகக் காட்டுகின்ற கவின்மிகு தேரும்.

பல்லவர் காலத்தில் ஏற்றத்துடன் விளங்கிய மாமல்ல புரத்தில் நடைபெற்ற ஏற்றுமதி இறக்குமதி காட்சியும், வணிகரோதையும் மாட்சியுடன் காட்சியாக்கப்பட்டுள்ள திரைகடல் வணிகத் திருக்காட்சித் தேரும்.

மஞ்சு விரட்டு என்னும் பெயரில் தமிழகத்தின் சில பகுதிகளில் குறிப்பாக மதுரை மாவட்டத்தில் வீரத்தை மெய்ப்பிக்கும் விளையாட்டாக நிகழ்ந்து வருகின்றதனைக் காட்டும் காட்சியை நல்கும் கவின்மிகு தேரும்.

*390* ஆண்டுகளுக்கு முன் சீர்காழியில் வாழ்ந்த முத்துத் தாண்டவர் இராம நாடகக் கீர்த்தனை யாத்து ''கனகாபிஷேகம்'' பெற்ற அருணாசலக் கவிராயர் *(1712-1779)* தில்லைவிடங்களில் தோன்றி பல பிரபந்தங்களையும் தமிழிசைப் பாடல்களையும் எழுதிய தில்லைவிடங்கமி மாரி முத்தா பிள்ளை *(1710-1770)* ஆகியோர்களின் திருவுருவங்களைக் காட்சியாகக் காட்டப்பட்டுள்ள இசைத் தமிழ் பேரணியில் இன்னிசை மூவர் எனற காட்சித் தேரும்.

கடமை தவறிய கூலியாளை இறைவன் என உணராமல் அரசன் பிரம்பால் அடிக்கும் காட்சியைக் காட்டும் 'மக்கள் பணியில் மகேசனுக்கும் பங்கு' என்ற காட்சி ஊர்தியும்.

திருவனந்தபுரத்தில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய பேராசிரியரும் மனோன்மணிய நாடகம் எழுதியவருமான சுந்தரம் பிள்ளை, ஏறத்தாழ 40 நாடகங்களை எழுதி, இயக்கி நடத்திய நாடகப் பேராசான் சங்கரதாசு சுவாமிகள் பல துறை அறிஞர்களையும் நடிக்குமாறு செய்து தாமும் நடித்து ஏறக்குறைய அரை நூற்றாண்டுக் காலம் நாடகக் கலையின் முன்னேற்றத்திற்காகப் பெரும் தொண்டு புரிந்த நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார், மேனாட்டு நாடக முறையைப் பின்பற்றி மேடை அமைப்பு, திரைச் சீலை அமைப்பு, பின்னணி இசை, உரையாடல் அமைப்பு, நடிப்பு நிலை ஆகிய அனைத்துத் துறையையும் புதுமைப் படுத்திய நாடகக் கலைஞர் கந்தசாமி முதலியார் ஆகிய அறிஞர்களின் திருவுருவங்கள் நாடகத் தமிழ் வளர்த்த நல்லோர் எனக் காட்டும் காட்சியுடைய அழகிய தேரும்.

போர்க்களத்தில் தன் மார்பில் பாய்ச்சப்பட்ட கீழே விழாமல், குத்திக் கொண்டிருந்த வேலை யானையின் மீது வீச வேல் கிடைத்துவிட்டது என்று அவ்வேலினைத் தன் மார்பில் இருந்து உருவிய வெகுளியோடு நகைக்கும்— நினைத்தாலே மெய்சிலிர்க்கும் வீர நிகழ்ச்சியைக் காட்டும் அலங்கார வண்டியும்,

எண்ணத்தால் எழுத்தால் செயலால் இப்படி எல்லாத் துறைகளிலும் தந்தை பெரியார் ஏற்படுத்திய சீர்திருத்தத்தைத் தமிழ் மக்கள் நன்றியோடு ஏற்றிப் போற்றி வருகின்ற காட்சியைக் காட்டும் அழகுறு தேரும்.

குறிஞ்சித் திணையின் உரிப் பொருளாகிய கூடல் ஒழுக்கத்தினைக் கவினுறக் காட்டும் குறிஞ்சிக் காட்சியும்,

துறைதோறும் தமிழ் வளர்த்த பேரறிஞர் அண்ணாவின் பலதுறை ஆற்றல்கள், பல உருவங்களாக உயிரோவியங்களாய்க் காட்டப் பெறும் அழகுமிகு தேரும்.

குற்றால நாதரைக் கண்டு மையல் கொண்ட வசந்த வல்லிக்குக் குறவஞ்சி குறி சொல்லும் காட்சியும்,

ஓராயிரம் ஆண்டு ஓய்ந்து கிடந்த பின்னர் வாராத மாமணிபோல் தமிழர்க்கு வாய்த்த மகாகவி பாரதியார் கொண்ட புரட்சிக் கவிஞராய்ப் போற்றப்படுகின்ற பாவேந்தர் பாரதிதாசன் (1891-1964) மரபும் புதுமையும், சங்கமாகும் கவிதைக் கடலாகக் காட்சியளித்த கவிமணி தேசிக விநாயகனார் (1876-1954) விடுதலை பெற்ற நாட்டில் தமிழக அரசின் அரசவைக் கவிஞராக வீற்றிருந்த பெருமைக்குரிய நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் ஆகியோர்களின் திருவுருவங்களைக் காட்சியாகக் கொண்ட தேரும் வரலாற்றுக் காட்சிகளாக அலங்காரத் தேர்களில் அணிசெய்து உலா வந்தன.

இவைகளை மதிப்பிற்குரிய மாண்புமிகு பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் தமிழக மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும் தமிழக அமைச்சர்களும் 20 லட்சம் தமிழக மக்களும் கண்டு களித்தனர். மக்கள் வெள்ளம் தேங்கிநின்றது. காட்சிகள் கண்ணுக்கு விருந்தாயமைந்தன. மக்கள் ஒழுங்காக இயங்கி யாருக்கும் ஊறு நேராவண்ணம் நடந்துகொண்ட முறை உள்ளத்திற்கு மகிழ்ச்சியளித்தது.

## ஆய்வு நிலைக் கருத்தரங்கு

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு ஆய்வுக் கருத்தரங்கில் முதல் நாள் கூட்டரங்க நிகழ்ச்சிகள் 5-1-1981 காலை 9 மணியளவில் பல்கலைக்கழக வளாகத்தில் தொல்காப்பியர் அரங்கில் தொடங்கின. தமிழ் நாட்டிலும் பாரத நாட்டின் பிற பகுதிகளிலும் இருந்து வந்த சிறப்பு நிலைக் கருத்தரங்கப் பேராளர்கள் 400 பேர்கட்கு மேல் இருந்தனர். வெளிநாட்டுப் பேராளர்கள் 200-க்கும் மேற்பட்டவர்கள் பங்கு பெற்ற

னர். வெளிநாட்டுப் பேராளர்களில் மலேசியா பேராளர்கள் 65; இலங்கைப் பேராளர்கள் 15; இந்தோனேசியா பேராளர்கள் 9; அமெரிக்கப் பேராளர்கள் 5; பிரான்சுப் பேராளர்கள் 4; மேற்கு ஜெர்மனி பேராளர்கள் 3; செக் நாட்டிலிருந்து ஒருவர்; இஸ்ரேல் நாட்டிலிருந்து ஒருவர்; இலண்டனிலிருந்து மூவர் ; ஜப்பான் பேராளர்கள் 4; சிங்கப்பூர் பேராளர்கள் 3; மேற்கு ஆஃப்பிரிக்கப் பேராளர்கள் 2. இவர்களில் பலர் ஆர்வத்தோடும் ஆராய்ச்சி வல்லமையோடும் ஆய்வு நிலைக் கருத்தரங்கில் பங்கு பெற்றமை மிகவும் மகிழ்வாக இருந்தது. தமிழ் வாழ்த்துப் பாடலை அடுத்து உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் அமைப்புக் குழுத் தலைவர், நடுவர் எஸ். மகராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார். உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தோன்றி வளர்ந்த வரலாற்றை அதன் இன்றைய தலைவர் திரு. ஏ. சுப்பையா தன் தொடக்கவுரையில் எடுத்துக் கூறி பின் அன்னைத் தமிழ் மொழியின் தனித் தன்மைகளை விளக்கும் தம் கட்டுரையைப் படித்தார். 5—1—81 முதல் 10—1—81 வரை மொழி, இலக்கியம், வரலாறு, மொழி ஒற்றுமை, பண்பாட்டு ஒற்றுமை போன்ற பல்வேறு தலைப்புகளில் 230-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப் பெற்றன. அவையனைத்தையும் பற்றிக் குறிப்பிடுவது இக்கட்டுரையில் இயலாது. எனவே, சான்றுக்காக சிலவற்றை மட்டும் குறிப்பிடுதல் சாலும்.

சப்பானிய அறிஞர் சுசுமு ஓநோ ''தமிழ்-சப்பானிய மொழிகளின் உறவு'' என்ற தலைப்பில் அரிய ஆய்வுக்கட்டுரையினை வழங்கினார். இலக்கண அடிப்படையில் தமிழ்-சப்பானிய மொழியில் உறவுகளை-தொடர்புகளை-நூற்றுக் கணக்கான சொற்களினைச் சான்றாகக் கொண்டு விளக்கி உரைத்தார். சப்பானிய மொழி தமிழைப் போன்ற ஒட்டு நிலை அமைப்பைக் கொண்டது; தமிழைப் போலவே பெயர்ச் சொல்லுக்கு முன்னர் பெயரடைகளும், வினைச் சொல்லுக்கு முன் செயப்படு பொருளும் வருகின்றன. சப்பானிய மொழியில் பின் ஒட்டுகளும் துணைவினைகளும் உள்ளன. அதில் பெயர், வினை ஆகியவற்றிற்குப் பன்மை வடிவங்கள் இல்லை. அ. இ. உ. போன்ற மூவகைச் சுட்டுகள் சப்பானிய மொழியில் உள்ளன. ஆனால் தமிழில் உள்ள இடப்பெயர் மாற்று வடிவங்கள் சப்பானிய மொழியில் இல்லை. இது ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடு. ஏறத்தாழ 500 சொற்களின் அடிப்படையில் இக்கட்டுரை அமைக்கப் பட்டிருந்தது.

செக்கோஸ்லோவேகியாவின் பிராகா பல்கலைக்கழகத்து அறிஞர் டாக்டர் ஜே. வாசெக் தமது ஆய்வுக் கட்டுரையில் தமிழுக்கும் அல்டாய்க் மொழிக் குடும்பத்தைச்

சார்ந்த மங்கோலிய மொழிக்கும் இடையே மிகுந்த ஒற்றுமைகள் காணப்படுகின்றன என்ற ஒரு புதிய ஆய்வுக் கருத்தை வெளியிட்டார். ஏறக்குறைய இருநூற்றுக்கும் மேலான சொற்களில் இவ்வொற்றுமை காணப்படுகின்றது என்றார்.

உலகிலுள்ள பல்வேறு ஆய்வுகளும் அறிவியல் துறைக்குப் பெருமளவில் நலஞ் செய்து வருகின்றன. தனிமனிதர் முயற்சிகளும் குறிப்பிடத்தக்க அளவில் உதவி வருகின்றன. இந்த அறிவியல் புரட்சிக் கூறுகளை உயிரியல் புரட்சி, சமூகவியல் புரட்சி, உளவியல் புரட்சி, இயற்பியல் புரட்சி என நான்காகக் கூறலாம் என சென்னை மாநிலக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி. திருஞானசம்பந்தம் ‘அறிவியல் புரட்சிகள்’ என்ற தலைப்பில் தாம் படித்த கட்டுரையில் குறிப்பிட்டார்.

டாக்டர் ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் தாம் படித்த ‘அறிவியலும் தமிழும்’ என்ற கட்டுரையில் உயர் தனிச் செம்மொழியாகிய தமிழ்மொழி, உலகப் போக்கிற்கு ஏற்ப அறிவியல், தொழில்நுட்ப மொழியாகவும் விளங்க வேண்டும். குழந்தைப் பள்ளி முதல் பல்கலைக் கழக இறுதி நிலை வரை தமிழே பயிற்று மொழியாக இருத்தல் வேண்டும்; அவ்வாறு செய்யும் பொழுதே அறிவியற் பயன் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். 1935-ஆம் ஆண்டு வரை ருஷ்ய மொழி ஆதரவற்றிருந்தது. இன்று அதன் நிலை சிறந்தோங்கியுள்ளது. ஜப்பான் மொழியின் மூலம், தமிழொடு தொடர்புடையது என ஆய்ந்து அறிஞர்கள் கூறுகின்றனர். அம்மொழி அறிவியல் வளம் கொழிக்கிறது. இவை இவ்வாறாகத் தமிழ் மொழிக்கு அவ்வாற்றல் இல்லைஎன்பது உண்மையாகாது. நாம் ஊன்றி உழைக்கவில்லை ; உரிய முயற்சி செய்யவில்லை என்பது உண்மை. நாம் தமிழைப் பயிற்று மொழியாக்குதற்குச் செவ்விய ஒரு முகமான முடிவு எடுக்கவில்லை. கலைச் சொல்லாக்கம் குறித்தும் செவ்விய முடிவு எடுக்கவில்லை. காலம் தாழ்த்தாமல் நாம் ஆய்ந்து முடிவெடுத்து நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். ஒரு மொழியாளர் பிற மொழியாளரிடமிருந்து இந்த அறிவியல் இன்றி ஒதுங்கி வாழ முடியாது. இந்நிலையில் சில சொற்களைக் கடன் வாங்க நேர்வது இயற்கை. தன் தொழில் வளர்ச்சிக்கு வங்கிக் கடன் முதலியன பெறுதல் போலக் கடன் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் நாம் என்றும் கடனாளியாக இருக்க வேண்டுவதும் இல்லை. கடன் வாங்கும் சொல்லும் நம் மொழிஇயல்புக்கு ஏற்றதாக இருக்கக் கருத்துச் செலுத்துதலும் கட்டாயம் வேண்டும் என்பன போன்ற பல கருத்துக்களை வெளியிட்டார்.

## மக்கள் செய்தி சென்னை 5-1-1981

### உலகைக்கவரும் தமிழ்

உலகம் பெரியது! அதில் நாடுகள் பல. தன்னாட்சி நாடுகள் 154. அவற்றில் அய்ம்பதில் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

பண்டைப் பாண்டியன் காலத்தில், யவனத்தோடு வாணிகம் செய்தவர்கள் நாம். ரோமாபுரிக்கு முத்தும் சந்தனமும் ஏற்றுமதி செய்தவர்கள், நாம்.

ஒரே வேளை, கடாரம் காணச் சென்றாலும் நாம் பேரரசு அமைத்ததாக கூறுவதற்கு இல்லை. இங்கே, இந்தியாவில். மூவேந்தர் நாடுகளுக்குள் நாம் பெரிதும் நிறைவுக் கொண்டு இருந்தோம்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு மேல்காற்று வீசத் தொடங்கியது. மேற்கத்திய நாடுகளில் தொழிற்புரட்சி தொடங்கிற்று. தொழில்கள் இயந்திரமயமாயின. உற்பத்திப் பொருள்கள் மலையெனக் குவிந்தன. அவற்றை விற்க சந்தை தேடி வந்தார்கள். எவர்? பிரிட்டானியர், பிரஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள், போர்ச்சுக்கீசியர் ஆவார்.

போட்டியில் ஆங்கிலேயர் வென்றனர். இந்திய ஆட்சி ஆங்கிலேயர் கையில் சிக்கியது. அவர்களுடைய பிடியில் பல நாடுகள் வந்தன. மக்கள் குறைந்த, பிஜி, மலேசியா, மோரிஸ் தென் ஆப்ரிக்கா ஆகியவை ஆங்கிலேயர் ஆளுகைக்கு வந்தன ஏன்? மேற்கிந்திய தீவுகளும்கூடத்தான்.

இந்நாடுகளில் இயற்கை வளம் நிறைய, அதைப்பொருள் வளமாக்க, ஆட்கள் தேவைப்பட்டார்கள், பாட்டாளி பட்டாளத்தை தமிழ்நாட்டில் கண்டனர். கப்பல் கப்பலாக ஆங்கே அனுப்பினர். மேற்கிந்தியத் தீவுகளை வளப்படுத்திய தமிழர், படிக்கப் பேச, வாய்ப்பின்மையால், தமிழையே மறந்தனர். பிஜித் தீவிலும் மோரிஸ் தீவிலும் தென்னாப்பிரிக்காவிலும் தமிழ் ஓரளவு உயிரோடு இருக்கிறது. மலேசியாவில், பசுமையாக இருக்கிறது. இலங்கையில் துடிப்போடு உள்ளது.

தமிழர், இப்படி பல நாடுகளில் குடியேற நேர்ந்தது. நம்மை உலக மக்கள் மாகடலில் கலக்க வைத்தது. பலர் நாட்டஞ் செலுத்தத் தொடங்கினார்கள்.

அதேபோது, பிறிதொரு தொடர்பு வளர்ந்தது. இந்திய மக்களிடையே கிறுத்துவ சமயத்தைப் பரப்ப, அய்ரோப்பிய பாதிரிகள் பலர் அவ்வப்போது வந்தார்கள். அவர்களில் சிலர் தமிழ்நாட்டிற்கு வந்தனர்.

தமிழர்களிடம் தமிழில் பேசினால், 'கர்த்தரின்' சமயத்தை எளிதில் பரப்ப இயலும் என்று உணர்ந்தார்கள். அதற்காகத் தமிழைக் கற்றார்கள். அக்கல்வி, தொடக்நிலையோடு நிற்கவில்லை. சிலரிடம் ஆழ்ந்த கல்வியாக வளர்ந்தது.

ஜி. யு. போப் என்னும் அறிஞரைத் தமிழ்மறையாம் திருக்குறள் கவர்ந்தது. அவர் அதை ஆங்கில மொழியில் பெயர்த்து வெளியிட்டார். வேறு சில தமிழ்ப்பாடல்களையும் ஆங்கிலத்தில் கொடுத்தார். அவைபிற நாட்டவரைக் கவர்ந்தன; தமிழ் இலக்கியப் பெருமையினைப் பறைசாற்றின. பண்டைத் தமிழர் பண்பாடு, மனிதனை மதிக்கும்தன்மையது; மக்கள் தன்மையினை வளர்ப்பது. இவற்றை வெளிநாட்டார் அறியத்தலைப்பட்டனர்.

நேரடித் தொடர்பு ஏற்பட்டுத்தொடர்பு பயணவாய்ப்புகள் ஆகியவை உலகத்தை அண்டை வீடாக்குவதோடு, ஒரு கோடியில் இருப்போர் மறுகோடியில் இருப்போர்மேல் அக்கறை கொள்ளச் செய்கின்றன. மக்கள் இனத்தின் ஒரு பிரிவு பிறபிரிவுகளின் வாழ்க்கை முறையைப் பண்பாட்டை இவற்றைக்காட்டும் இலக்கியங்களைக் கற்பதில் ஈடுபடுவது இக்காலத்தின் குறிப்பிடத்தக்க போக்காகும். இதன் வெளிப்பாடே, உலகப் புகழ் பெற்ற பல்கலைக் கழகங்களில், தமிழ்த்துறை செயல்படுவது ஆகும்.

பல நாட்டார் தமிழின் மேல் நாட்டம் செலுத்துவது ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்தது. நம்மை நாமே ஆய்வதற்கும் பிறநாட்டு தமிழறிஞர் தொடர்பினை வளர்க்கவும் தனியொரு அமைப்பு தேவை என்பதை அறிஞர்கள் உணர்ந்தார்கள்.

1964 ஜனவரி 7-ம் நாளன்று புதுதில்லியில் கூடிய சில தமிழறிஞர்கள், 'அனைத்துலகத் தமிழ் ஆய்வு சங்கம்' ஒன்றை நிறுவினார்கள். அது உலகத் தமிழ்மாநாடுகளைத் தூண்டும் கோலாக விளங்குகிறது. இச்சங்கத்தை நிறுவியவர்களில் சிலர் வெளிநாட்டவர்; தனி நாயகம் அடிகளார் ஈழத்

தமிழர். கமில் ஜெலபில் என்பார் செக்கோஸ்லாவிய நாட்டவர்; பிலியோசா, கிராஸ், ஆகிய இருவரும் பிரெஞ்சு நாட்டினர். அவர்களோடு தமிழ்நாட்டு அறிஞர்கள் சிலர் கூடி, வரலாற்றுச் சிறப்பு மிக்க சங்கத்தை அமைத்தார்கள்.

இச்சங்கம் முன்கையெடுத்துக் கொடுக்க, 1966 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 முதல் 23 வரை கோலாலம்பூரில் முதல் உலகத் தமிழ் மாநாடு சிறப்பாக நடந்தது. தமிழ் நாட்டிலிருந்து திரு. மீ. பக்தவத்சலனார் தலைமையில் பலர் அங்கு சென்று அம்மாநாட்டில் கலந்து கொண்டனர். தெ. பொ. மீனாட்சி சுந்தரம், ம. பொ. சிவஞானம், நாவலர் நெடுஞ்செழியன், தமிழ்வேள் பி. டி. ராசன், டாக்டர் மு.வ. நெ. து. சு. ஆகியோர் அக்குழுவில் சென்றார்கள்.

அப்போது மலேசிய நாட்டின் பிரதமராக விளங்கிய, துங்கு அப்துல்ரகுமான் அம்மாநாட்டைத் தொடங்கி வைத்து, மலேசியத் தமிழர் நல்லுறவையும் உலகத் தமிழர் நல்லெண்ணத்தையும் பெருக்கிக் கொண்டார். மலேசிய சிங்கப்பூர் தமிழர்கள், மாநாட்டை தங்கள் வீட்டுத் திரு மணம் போல எண்ணி மகிழ்ந்தார்கள்.

அடுத்த உலகத் தமிழ் மாநாடு சென்னையில் 1968 ஆம் ஆண்டு சனவரி 3-ஆம் நாள் முதல் 10ஆம் நாள் வரை சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

தமிழ் வளர்ந்த மண்ணில் நடந்த அந்நிகழ்ச்சிகள், பெரும் திருவிழாக்கள் போல் இருந்தன. தமிழ் உணர்வும் எழுச்சியும் முன்னர் காணாத அளவில் பொங்கின.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை அப்போதைய குடியரசு தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் தொடங்கி வைத்தார். தமிழர் நெஞ்சில் இடம் பெற்றார்.

அம்மாநாட்டிற்குப் பிறிதோர் சிறப்பு உண்டு. அது என்ன? அனைத்துலக தமிழ்க் கல்விக் கழகம் ஒன்று நிறுவ வேண்டுமென்று பரிந்துரைத்ததாகும்.

நிறைவு விழா சொற்பொழிவில், இப்பரிந்துரையைச் சுட்டிக்காட்டி, முதல்வர் அண்ணா கூறிய சொற்கள், நேரில் கேட்ட என்நெஞ்சில் இன்றும் பசுமையாகி உள்ளது.

**மதுரைமணி மதுரை 6-1-1981**

## உயர்ந்தார்!

ஒரு துளியும் தன்னலம் இன்றி தமிழ்மொழிக்காக, தமிழ்கலாச்சாரத்துக்காக தமிழ் பண்பாட்டுக்காக தமிழ் வளர்ச்சிக்காக தமிழர் முன்னேற்றத்துக்காக ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டை நடத்தி முதல்வர் எம். ஜி. ஆர். தமிழகத்தின் பொதுத் தலைவராக உயர்ந்துவிட்டார்.

கோடிக்கணக்கில் செலவிடப்பட்ட தொகையில் பெரும் பான்மையை மதுரை மக்களுக்கு நிரந்தர பயன் அளிக்கும் வகையில் செய்துள்ளார்.

மாநாட்டை நடத்துகின்ற முறை—கொஞ்சம்கூட அரசியல் நோக்கோடு இல்லாமல் முழுக்க முழுக்க தமிழுக்காக செயல்பட்டு வருவதையே எடுத்துக் காட்டுகிறது.

செஞ்சோற்றுக்கடனுக்காக உயிர் உள்ளவரை தமிழகத் துக்காகப்பாடுபடுவேன் என்று எம். ஜி. ஆர். கூறியது அனைவரையும் நெஞ்சம் நெகிழ வைத்து விட்டது. கண்கள் குளமாகி விட்டன. உயர்ந்த இடத்தில் இருந்தும் அவர் தனது நன்றி உள்ளத்தை பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

உயர்ந்த இடத்தில் இருப்பினும் அவரது நன்றி உள்ளத் திற்கு தமிழகம் என்றும் அவருக்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. உயர்ந்த சிந்தனை பரந்த எண்ணம் அன்பு உள்ளம் ஆழமான போக்கு அனைத்தும் கொண்டும் ஒப்பற்றத் தலைவராக உயர்ந்துள்ள எம். ஜி. ஆரை. வாயார வாழ்த்துவோம். நெஞ்சம் குளிர பாராட்டுவோமாக! தமிழன்னைக்கு எம். ஜி. ஆர். மாசுபடா தமிழ் மாணிக்கம் பதித்த மணி மகுடத்தைச் சூட்டினார்.

தமிழர்கள் எம். ஜி. ஆருக்கு தமிழர் தலைவர் என்று சங்கத் தமிழ் பதித்த தங்கக்கிரீடத்தைச் சூட்டி அகமகிழ் கின்றனர்.

**தினகரன் சென்னை 6-1-1981**

## இரவில் ஒளிரும் மதுரை மாநகர்

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி மதுரை மாநகரின் முக்கிய சாலைகள் அனைத்திலும் அழகிய வேலைப்

பாடுகள் கொண்ட அலங்கார வளைவுகள் அமைக்கப்படுடுள்ளன. இவை இரவில் வண்ண விளக்குகளால் ஒளிருகின்றன.

இதே போல் மாநாட்டுக் கருத்தரங்கு நடக்கும் அரங்கம், கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் அரங்கங்கள் மட்டுமல்லாது பல்வேறு தனியார் நிறுவனங்களும்கூட வண்ணவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதால் மதுரை நகரம் இருளில் ஒளிர்கிறது.

இதனை பார்க்கவும் கருத்தரங்கு கலை நிகழ்ச்சிகள் முதலியவற்றை கண்டுகளிக்கவும் மக்கள் சாரை சாரையாக குடும்பம் குடும்பமாக சென்று வருகின்றனர்.

முக்கிய சாலைகளின் இருபுறமும் உள்ள நடைபாதைகளும் சரி, கட்டிடங்களும் சரி வண்ணங்கள் அடிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன.

## எங்கெங்கு என்னென்ன?

இந்த மாநாட்டையொட்டி பந்தயத் திடலில் (ரேஸ் கோர்ஸ்) அழகிய வேலைப்பாடுடன் கூடிய மிகப் பெரிய பந்தல் போடப்பட்டுள்ளது. மூவேந்தர் அரங்கம் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் பந்தலில்தான் நாள்தோறும் பொதுநிலைக் கருத்தரங்கம், பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## தோரணவாயில்

சோழ, சேர, பாண்டிய மூவேந்தர்களின் பெயர்களில் மூன்று தோரணவாயில்களை நுழைவாயில்களாகக் கொண்டுள்ள தமுக்கம் திடலில் பழங்கால அங்காடிகள் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி இடம் பெற்றுள்ளது. அன்றலர்ந்த தாமரையின் நடுவில் ஒரு பசுவின் சிலை அதன் மடுவைத் தொட்டால் பால் வரும். இப்படி ஒரு அரங்கம் பால்வள நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி 18 அரசுத் துறைகள் சம்பந்தப்பட்ட அரங்குகள் உள்ளன.

தமுக்கம் மைதானத்தின் அருகில் உள்ள இராசாசி பூங்காவில் 'கடல்' கொண்ட இலெமுரியாக் கண்டம்' என்ற சினிமாஸ்கோப் திரைப்படம் காட்டப்படவிருக்கிறது.

டெல்லி செங்கோட்டையில் காட்டப்படுவது போன்று மதுரை திருமலை நாயக்கர் மகாலிலும் ஒலி—ஒளி காட்சி அமைக்கப்படுகிறது. திருமலை நாயக்கரின் வரலாற்றைச் சித்தரிக்கும் இக்காட்சி இங்கு நிரந்தரமாக இருக்கும். இதற்கும் கட்டணம் வசூலிக்கப்படும் என்றே தெரிகிறது.

மாநாட்டையொட்டி மாரியம்மன் தெப்பக்குளத்திற்கும் விமோசனம் கிடைத்தது. வறண்டுகிடக்கும் இத்தெப்பக்குளத்தில் எப்போதுமே தண்ணீர் இருப்பதற்கு ஏற்ப வைகை அணையில் கிணறு தோண்டப்பட்டு அங்கிருந்து குழாய்கள் மூலம் தெப்பக்குளத்துக்கு தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. இதனால் எப்போதும் உல்லாசப்படகு சவாரி செய்யும் வசதி உண்டு.

ஆட்சிமொழித் திட்டம் தலைமைச் செயலகத்திலிருந்து தொடங்கிக் கீழ் நிலவரை வருதல் வேண்டும்; பலருக்கு இத்திட்டம் பற்றி உணர்த்துதல் வேண்டும்; தமிழ் தெரியாத தலைமை அலுவலர் களால் தேக்கநிலை ஏற்படாது பார்த்துக்கொள்ளவேண்டும்; தமிழ்த் தட்டச்சுக்களை மிகுதியாகப் பயன்படுத்தவேண்டும்; படிவங்கள் முதலிய வற்றை அரசு முழுவதும் தமிழிலேயே வெளியிடுதல் வேண்டும் என்பன டாக்டர் மா. நன்னன் அவர்கள் கூறிய கருத்துக்களில் சிலவாகும்.

''அறிவியல் துறைக்குக் கலைச் சொல்லாக்கம் இன்றியமையாதது. ஆனால் அம்முயற்சி, இருப்பதை மொழி பெயர்ப்பதாக மட்டும் நின்று விடாமல், மேலும்மேலும் வளர்ந்து வரும் அறிவியல் எண்ணங்களுக்கு இசைவாகவும் அமையவேண்டும். நம்நாட்டில் ஆண்டுக்குச் சராசரி எழுநூறு அறிவியல் நூல்களே வெளியாகின்றன. அவற்றிலும் பல உயர்ந்த தரத்தை எட்டிப்பிடிக்காதவை. சிறு நாடான ஜப்பானில் ஆண்டுக்கு 40,000க்கு மேற்பட்ட அறிவியல் நூல்களும், முன்னேறிய ருசியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் ஆண்டுக்கு 80,000க்கு மேற்பட்ட அறிவியல் நூல்களும் வெளியாகின்றன. அந்த நாடுகளோடெல்லாம் போட்டி போடக் கூடிய அளவுக்கு நாமும் முன்னேற வேண்டும். அதற்கு இலக்கண ஆசிரியர்கள் இடையூறாக நிற்கக் கூடாது, இலக்கண நூலார் ஒரு காலத்திலும் அறிவியல் வளர்ச்சிக்கு நேரடியாக உதவ இயலாது. இருப்பினும், காலத்தின் தேவையை உணர்ந்து அறிவியல் வளர்ச்சிக்குஒவ்வொருவரும் இயன்ற அளவு உதவ முன் வரவேண்டும்'' என்று மதுரை காமராசர் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள்.

''தமிழ்மொழிப் பற்று வளர்ந்திருப்பினும் அதற்கு மேலாக ஆங்கில மோகம் மக்களைப் பிணித்துக் கொண்டிருக்கிறது. அறிவு வளர்ச்சி முழுமை பெறவேண்டுமானால் தாய் மொழியே பயிற்சி மொழியாக இருக்கவேண்டும். பொது மக்களுக்கும் பெற்றோர்களுக்கும்கல்வியாளர்களுக்கும்மிகுந்த பொறுப்பு உண்டு'' என்பதும் பேராசிரியர் டாக்டர் அறம் கூறிய கருத்துக்களில் சிலவாகும்.

## ஆய்வு நிலைக் கருத்தரங்கில் அமைச்சர்கள்

*8-1-81* அன்று சிறப்புநிலைக் கருத்தரங்குக்கு வந்திருந்த மாண்புமிகு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் ''தமிழர்கள் எங்கிருந்தாலும் அந்தந்த நாட்டோடு ஒன்றியும், தமிழ் மொழி, பண்பாட்டை விடாதும் வாழ வேண்டும் ஒற்றுமையாக வாழ வேண்டும்; பிறரை வாழ வைத்து வாழ வேண்டும்''. எனக் கூறினார். ''அரசியல்வாதிகளும், சினிமா கலைஞர்களும் வெகு விரைவில் மக்கள் அறிந்தவராக ஆகி விட முடியும்; மதிப்புப் பெற்றுவிட முடியும். ஆனால் கல்வியால் சிறந்து ஆராய்ச்சியால் தெளிந்து உயர்வாக வாழும் அறிஞர் பெருமக்களை உலகம் அறிந்து போற்றுவது அரிது. அந்த அரிய செயலை எளிமையாக்கும் கருவி யாகத்தான் இத்தகு மாநாடுகள் கூட்டப்படுகின்றன. அறிஞர்களின் கருத்தும் வாழ்வும் போற்றப்பட வேண்டும், அப்போதுதான் மொழியும் நாடும் பொருளாதாரமும் வளரும்'' எனக் குறிப்பிட்டுப் பேசினார். தன்னைவிட ஏதாவது ஒரு நிலையில் தனக்கு உயர்ந்தவராக இருப்பவரைக் கண்டால் அவர்க்கு அவரின் வயது, பதவி, பட்டம் ஆகியவற்றைக் கருதாது மதிப்பது தன் வழக்கம் எனவும் அது எல்லோரிடமும் இருப்பின் நல்லது எனவும் குறிப்பிட்டார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் திரு ம.பொ.சி. அவர்கள் சமயங்கள் வளர்த்த தமிழ் பற்றி அழகான உரை ஒன்று நிகழ்த்துகையில் படித்தவர்கள் படிதல் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்ற கருத்தினைக்கூறி ''படிப்பின் பயன் படிதல் ஆகும்'' என்ற சிந்தனையைத் தூண்டினார். மதம் வேறு சமயம் வேறு என விளங்க வைத்தார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமிழ் மொழியில் பல்துறை ஆராய்ச்சிகள் எல்லாம் எங்கிருந்தோ வந்தது என்று கூற வேண்டும் என்ற முடிவோடு நோக்காமல் நடுநிலை நின்று உண்மை காண ஆராய்ச்சியாளர்கள் முயலவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ.அரங்கநாயகம், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு செய்தி அறநிலைய துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் போன்ற அமைச்சர் பெருமக்கள் பேராளர்களோடு பேசியும் ஆய்வுநிலைக் கருத் தரங்குகளில் கலந்து கொண்டும் சிறப்பித்தனர்.

## தினமணிக்கதிர் சென்னை ஜனவரி 1981

### இன்றைய தமிழ் இலக்கியமும் உலகத் தமிழ் மாநாடுகளும்

மலேசியாவின் தலைநகரமான கோலாலம்பூரில் நடை பெற்ற முதல் உலகத் தமிழ் மாநாடு, ஆராய்ச்சிக் கருத் தரங்கத்தை மட்டுமே முதன்மையாகக் கொண்டிருந்தது என் றாலும் கூடியவரை அது அடுத்து வந்த மாநாடுகளுக்குச் சிறப்பான முறையில் வழிகாட்டியது என்றே சொல்ல வேண் டும்.

மொழி இயல், சங்கத் தமிழ், இடைக்காலத் தமிழ் இவற்றுக்கான ஆய்வுக் கட்டுரைகளோடு தற்காலத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக்கும் முதல் உலகத் தமிழ் மாநாடு போதுமான இடம் அளித்திருந்தது.

இவ்வாறு, உலகத் தமிழ் மாநாடு இன்றைய தமிழ் இலக் கியத்துக்குத் தனது நிகழ்ச்சிகளில் சிறப்பானதொரு இடத் தையே அளித்திருந்தது. அதன் பிரதிபலிப்பு, தொடர்ந்தாற் போல் நமது பல்கலைக் கழகங்களில் காணத் தொடங்கியது. டாக்டர் பட்டம், எம்.பில். பட்டம் பெறும் தமிழ் இலக்கியத் துறை மாணவர்கள் பொதுவாகச் சிறு கதைகள், நாவல்கள், நாடகங்களை ஆராய முற்பட்டதுடன் உயிர்வாழும் தமிழ் எழுத்தாளர் சிலரின் படைப்புக்களையும் தனித் தனியே ஆராய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டில் இந்தப் புதுமைப் போக்கு வளர வித் திட்டு வளர்த்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் டாக்டர் மு.வ.வும் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரும் ஆவார்கள்.

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டை இரு பிரிவுகளாக விரிவான முறையில் நடத்தி னார்கள் .ஆய்வாளர்ருக்கான கருத்தரங்கு ஒன்று; பொது மக்கள் பங்கு பெறுவதற்கான பொதுமாநாடு ஒன்று. அறிஞர் அண்ணா அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டைத் தமிழ் மக்கள் மத்தியில் கொண்டு செல்லவேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள்.

இந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் ஆராய்ச்சிக் கருத்தரங்கமும் இன்றைய தமிழ் இலக்கியங்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் மறந்து விடவில்லை. ஆராய்ச்சிக் கருத்தரங்கில் இன்று முன்னணியில் உள்ள சில படைப்பிலக்கிய எழுத்தாளர்கள் பங்கு கொண்டு தங்கள் ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தார்கள். முதல் மாநாட்டை யொட்டி நடந்த இரண்டாவது மாநாடும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழுக்கு உரிய இடத்தையே அளித்தது என்று கூறலாம்.

இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் முறையாகப் பயிற்சி பெற்ற பல தமிழாசிரியர்கள் இன்று நம்மிடம் இருக்கிறார்கள். இந்தியாவில் உள்ள வேறெந்த மொழிகளிலும் இன்றைய வளர்ச்சியில் நமது மொழி பின்தங்கிவிடவில்லை. நம்முடைய இன்றைய இலக்கியங்கள் சில பிற இந்திய மொழிகளில் மட்டுமல்லாமல் பிறநாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுப் பாராட்டப்படுகிறது. ஒவ்வொரு கல்லூரியிலும்; ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் தனியே இன்றைய தமிழுக்குத் தனிப்பிரிவு தொடங்கவேண்டிய காலம் இப்போது வந்துவிட்டது.

இதற்கெல்லாம் முன்னோடியாக நமது தமிழ்ப் பல்கலைக் கழக ஆலோசனைக் குழுவில் இன்றைய இலக்கியப் படைப்பாளர்களும் ஆய்வாளர்களும் இடம் பெற வேண்டுமென்றும். அந்தப் பல்கலைக் கழகத்தில் இன்றைய தமிழ் இலக்கியத்துக்கென்று ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**கலைமகள் — பிப்ரவரி, 1981**

## மாபெருந் தமிழ் விழா

எங்கே பார்த்தாலும் ஒரே கூட்டம்; மக்கட் கடல். தலைகளே அலைகளாகத் தெரிந்தன. பெரிய வீதிகளில் மக்கள் நடந்தார்கள்; நடந்து கொண்டே இருந்தார்கள். சந்து பொந்துகளில் எல்லாம் மக்கள். மதுரை மாநகர் விழாக்களுக்குப் பெயர் போனது. வீதிகளுக் கெல்லாம் விழாவின் பெயர்கள். அழகர் ஆற்றில் இறங்கும் விழாவன்று மாபெருங் கூட்டம் வரும். ஆனால் அந்தக் கூட்டத்தையெல்லாம் தூக்கியடித்துவிட்டது இந்தத் தமிழ் விழாக் கூட்டம். மதுரை மாநகரே கூட்டம் தாங்காமல் திணறியது.

உலக ஆராய்ச்சிக் கருத்தரங்கில் ஐந்தாவது மாநாடு, ஜனவரி மாதம் 4-ஆம் தேதி யிலிருந்து 10-ஆம் தேதிவரையில் மதுரையில் நடைபெற்றது. முன்பு நடந்த கருத்தரங்கு

களின் தோற்றம் வேறு; இந்தக் கருத்தரங்கின் காட்சி வேறு. அடே அப்பா! என்ன கூட்டம், என்ன கூட்டம்! தமிழ்நாடே திரண்டு வந்து விட்டது போல் இருந்தது. தமிழ்நாடு மட்டுமா? கல்கத்தாவிலிருந்தும் டில்லியிலிருந்தும் பம்பாயி லிருந்தும் ஜப்பான், தென் ஆப்பிரிக்கா, மோரீஸ் தீவு, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்தும் தமிழ்க் காதலர்கள் வந்திருந்தார்கள். அயல் நாட்டிலிருந்து எழு நூறு பேர்களுக்குமேல் வந்திருந்தார்கள்.

கூட்டத்தின் அளவை என்னென்று சொல்வது? இருபத் தைந்து இலட்சம் இருக்கும் என்பது ஒரு கணிப்பு; இல்லை, இல்லை, ஐம்பது லட்சமே இருக்கும் என்று ஒருவர் சொல்லி வாயைப் பிளந்தார். விழாவுக்கு வந்த பிரதிநிதிகளுக்கு இருக்க இடம், போவதற்குக் கார், உணவு முதலிய எல்லாச் சௌகரியங்களும் செய்து தந்திருக்கிறார்கள். ஆனாலும் கட் டுச்சோறு கட்டிக் கொண்டு வந்தவர்கள் பல பேர். உணவுச் சாலைகளில் கிடைத்ததை வாங்கி ஓரளவு பசியைப் போக்கிக் கொண்டவர்கள் பல பேர். உணவுச் சாலைகளின் வாயில்கள் மூடப்பட்டன. க்யூ வரிசையில் ஒவ்வொருவராக உள்ளே சென்று கிடைத்ததை வாங்கி உண்டவர்கள் பல பேர்.

கிழவர்கள், குமரர்கள், ஆண்கள், பெண்கள், குழந்தை கள் என்று வகை வகையாக மக்கள் போய்க்கொண்டே இருந் தார்கள். வண்டிகள் போக முடியவில்லை. எல்லோரும் சாரி சாரியாக நடந்தே போனார்கள். எல்லோரும் ஆராய்ச்சிக் கருத்தரங்குக்கா வந்தார்கள்? ஏதோ பெரிய விழாவைப் பார்ப்பதற்காக வந்தார்கள். அவர்கள் ஆயுளில் இத்தகைய கூட்டத்தைக் கண்டிருக்கமாட்டார்கள்.

நிகழ்ச்சிகள் வெவ்வேறு இடங்களில் நடந்தன. நகருக்கு எட்டு மைல்களுக்கு அப்பால் உள்ள பல்கலைக் கழக அரங் கில் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றது. பிறகு தனித்தனி அறைகளில் வெவ்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்தவர்கள் கூடினார்கள். ஜப்பானிய மொழிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு, ஆஸ்திரேலிய மொழிக்கும் தமிழுக்கும் உள்ள பொதுமை, நீக்கிரோக்களின் மொழியில் தமிழ் மொழியின் தாக்கம்-இப்படிப் பல பல ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித் தார்கள்.

தமுக்கம் மைதானத்தில்தான் பெரிய கொட்டகை போட்டுப் பொதுக்கூட்டங்கள் நடந்தன. அங்கும் ஜனக்கூட் டம். மூன்று கவியரங்குகள், இரண்டு பட்டிமண்டபங்கள், புலவர் குழுவின் கூட்டம், தமிழின் பெருமையைக் கூறும் சொற்பொழிவுகள் யாவும் நடைபெற்றன.

ஒரு கவியரங்கில் தலைமை தாங்கிய கவிஞர் வாலி மீனாட்சியம்பிகையின் திருவடிகளைத் தலைமேல் தாங்கிப் பாடினார். திரு கண்ணதாசன் அம்மையைப் புகழ்ந்து உருகினார்.

எல்லா நிகழ்ச்சிகளையும் ஒருவர் பார்த்திருக்க முடியாது, ஒருபக்கம் இசை, ஒரு பக்கம் நடனம், ஒரு பக்கம் கருத்தரங்கம், ஒரு பக்கம் பொதுக் கூட்டம் என்று ஒரே சமயத்தில் பல நிகழ்ச்சிகள் நடக்கும்போது எல்லாவற்றையும் கேட்டு மகிழ்வதற்கு முடியுமா? ''தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமல மன்ன, தாள் கண்டார் தாளே கண்டார் தடக்கைகண்டாரும் அஃதே, வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்?'' என்று கம்பன் கேட்டானே, அது போலத்தான் கேட்க வேண்டியிருந்தது.

ஜப்பானியரும் பிற நாட்டவரும் தமிழின் பெருமையை எடுத்துச் சொல்லும்போது தமிழ் மக்கள் தம் மார்பைப் பார்த்துக் கொண்டனர். தமிழ் மக்கள் ஒருகால் தமிழின் சிறப்பை உணர மறந்தாலும் உலகத்தில் வேறுபல நாடுகளில் தமிழைப் போற்றிப் பயிலும் அறிஞர்கள் அதைமறக்க மாட்டார்கள் என்ற உணர்வு உண்டாயிற்று. பாரத நாட்டில் உள்ள பல மொழிகளுக்கு தொன்மையை எடுத்துச் சொல்லும்போது ஓர் ஆராய்ச்சியுரையைக் கேட்பதுபோலவே இருந்தது. ''இந்தியைத் திணிக்கமாட்டோம்!'' என்றபோது எழுந்த ஆரவாரம் வானத்தையே பிளந்து சென்றது. எழுந்த ஆரவாரம் வானத்தையே பிளந்து சென்றது. மகாத்மாகாந்தியும், ராஜாஜியும் விண்ணகத்தில் இருந்தபடியே இதைக் கண்டுகளித்து ஆசி கூறியிருப்பார்கள். பாரதியார் அங்கே துள்ளிக் குதித்திருப்பார்.

மதுரை நகர வரலாற்றில், பொன்னால் ஏடு செய்து வயிரத்தால் எல்லைக்கோடு கட்டி மாணிக்கத்தால் எழுதுவதற்குரிய நிகழ்ச்சி இது. ''தமிழா! நீ உலகில் ஒரு மூலையில் இருப்பவன் அல்ல. நீ உலகம் முழுவதும் தோழாகளைப் பெற்றிருக்கிறாய். கூனிக் குறுகாதே! நிமிர்ந்து நில்! தமிழ் நூல்களை ஆழமாகப்படி! அவற்றை அகலமாகப் பரப்பு'' என்று தமிழ்த் தாய் ஆணையிடுவதுபோல இருந்தது. அதைக் கேட்டவரைப் போலத் தமிழக முதல்வர் உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவுவதாகச் சொன்னார். பல அறிஞர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அந்தச் சங்கம் செயற்படும் என்றார்.

இந்தத் தலைமுறைத் தமிழர் பாக்கிய சாலிகள். தமிழன்னையின் பெருமையை அயல் நாட்டவரும் உணர்ந்து பரப்பி வருவதைக் காணும் பேறு அவர்களுக்குக் கிடைத்

திருக்கிறது. பழைய நூல்களையும் புதுத் தமிழ்ப் படைப்புக் களையும் மதிப்போடு போற்றி நுகரும் உணர்ச்சி இந்த விழா வில் கலந்துகொண்ட தமிழர்களுக்கு உண்டாகியிருக்க வேண்டும்.

உலகமே தமிழ் மணக்கும் இடமாக இருக்கும்போது, தமிழ் சுருங்கிய மொழியாக்கிப் பகையுணர்ச்சியுடன் சிறைப்படுத்தாமல் உலகில் நடனமிடச் செய்யும் கடமை தமிழ்ப் புலவர்களுக்கும் அரசினருக்கும் இருக்கிறது. ''திற மான புலமை யெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'' என்ற பாரதியின் திருவாக்குப் பலித்து விட்டது. இதை உணர்ந்த தமிழ்மக்கள் தம் மொழியில் மேலும் மேலும் ஆர்வம் கொண்டு பயில வேண்டும். பிற மொழிகளோடு ஒப்புநோக்கி ஆராய்ச்சி புரிய வேண்டும். தமிழ் வற்றாத கங்கையாக இருப்பதை அறிந்து மேலும் மேலும் வளப்படுத்த வேண்டும்.

தமிழன்னை சிங்காதனத்தில் ஏறிவிட்டாள். அவள் கொடி பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கிவிட்டது. ''நாம் அவள் மக்கள். அவளுக்கு உலகம் முழுவதும் மதலையர்கள் இருக்கிறார்கள். தமிழ்க் குடும்பம் உலகளாவிய குடும்பம்'' என்று அன்பும் பண்பும் கொண்டு பெருமிதம் அடையலாம்.

## திட்டம் பிப்ரவரி 10, 25, 1981

### உலகத் தமிழ் மாநாடு உணர்த்திய மக்கள் சக்தி:

*1974*ஆம் ஆண்டு இலங்கையின் யாழ்பாணத்தில் நடந்த மாநாடு, தமிழ் அறிவு, தமிழ் வளர்ச்சி போன்றவை உலக ளாவிய அளவு நடைபெற ஒரு உந்து சக்தியாகத் திகழ்ந்தது. மதுரையில் நடந்து முடிந்த ஐந்தாவது உலகத் தமிழ்மாநாடு, மக்களின் மொழி ஆர்வத்தையும், அவர்களின் கட்டுக்கோப் பான போக்கையும் எடுத்துக்காட்டி மொழி ஆர்வம் மகத் தான மக்கள் சக்திக்கு வழிவகுக்கும் என்பதனைப் புலப் படுத்தியது.

### மக்கள் சக்தி

மதுரைமாநகரின் எல்லை வாயில்கள் ஐந்து தோரண வாயில்களால் வரவேற்புக் கொடுத்ததும், மாநாடு காண வந்த லட்சோப லட்சம் மக்கள் ஒரு மனிதர் போல் திரண்ட தும், கட்டுப்பாட்டோடு நடந்து கொண்டதும் மக்கள் சக்தி யின் மகோன்னதத்தை நிருபிப்பதாக இருந்தது. ஓட்டல்

களெங்கும், வரிசை வரிசையாக கூட்டமயம். உணவு கிடைக்காமல் வெறும் வயிற்றுடன் திரும்பிய பசி மயக்கம். ஆனாலும், எங்கும் தமிழ் மயக்கம் என்ற எண்ண உந்தலில், மக்கள், பசி போனாலும் ''பத்தில்'' ஒன்றைக் கூட விடாமல் நடந்து கொண்ட முறை இருக்கிறதே அது ஆயிரம் மாநாடுகளுக்குச் சமம். பொது நிலைக் கருத்தரங்கில், சுமார் மூன்று லட்சம் மக்கள், காலையிலிருந்து இரவு பதினோருமணிவரை கட்டுக்கோப்பாக இருந்தது கூட முக்கியமல்ல. பேச்சாளர் களின் கருத்துக்களை ஊன்றிக் கவனித்து, முக்கியமான கருத் கருத்துக்களுக்கு கைகொடுத்தார்களே அதுதான் முக்கியம். கருத்தரங்கம், கவியரங்கம், பட்டி மன்றம், வழக்காடுமன்றம் ஆகிய அனைத்திலும் கதா நாயகர்களாகக் கருதப்படவேண்டியவர்கள், காண வந்த மக்களே.

தமிழ் மக்களின் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் விளக்கும் வகையிலும், அரசுத்துறை நிறுவனங்களின் சாதனைகளை விளக்கும் வகையிலும் அமைந்த பொருட்காட்சியும், லெமோரியாக் கண்டத்தைப்பற்றி குமரிக் கண்டம் எறை தலைப்பில் வெளியிடப்பட்ட வண்ணத் திரைப்படமும் குறிப்பிடத்தக்கது. கேரள முதல்வர் திரு நாயனாரும் மைசூர் முதல்வர் திரு குண்டுராவும், மாநாட்டில் கலந்து கொண்டது அவர்களின் மொழிகளுக்கும் தமிழிற்கும் இப்போதும் இருக்கிற தொடர்புகளைப் புலப்படுத்துவதாக இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, பிரதமர் இந்திரா காந்தி, மாநாட்டின் நிறைவு விழாவிற்கு வந்து அரியதோர் சொற்பொழிவாற்றியது மாநாட்டின் அணிகலனாகியது.

## தமிழ் டெலிபிரிண்டர்

மாநாட்டின் நிறைவுநாளிற்கு முந்திய நாளில் அதாவது 9.1.81ல் மூவேந்தர் திடலில் தமிழ் டெலி பிரிண்டர் ஒன்று இயக்கி வைக்கப்பட்டது. இது, தமிழ் விஞ்ஞான வயதிற்கு'' வந்திருக்கும் பருவத்தை காட்டுவதாக இருந்தது. ஹிந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட இந்த முதலாவது தமிழ் டெலி பிரிண்டரை தமிழக முதல்வர் திரு எம்.ஜி. ராமச்சந்திரன் இயக்கி வைத்தார். மத்திய தகவல் துறை அமைச்சர் திரு. ஸ்டீபனுக்கு, முதல்வர் எம். ஜி.ஆர். மதுரைத் திடலிலிருந்து 'தமிழ் வாழ்க' 'வணக்கம்' என்ற ஒரு செய்தி அனுப்ப, பதிலுக்கு, திரு ஸ்டீபன், பாரதப் பிரதமர் பங்கேற்று சிறப்பிக்கும் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது, முதல் முறையாக தமிழ் தொலை எழுதுகுறி (டெலிபிரிண்டர்) உருவாக்கப்படுவது குறித்து மத்திய அரசின் சார்பிலும், தன் சார்பிலும் தமிழக மக்களுக்கும், முதல்வருக்கும் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாகத் தெரிவிக்க செய்தியும் வெறும் செய்தி

களல்ல, வரலாற்றில் தமிழில் விஞ்ஞான அத்தியாயத்தில் நிலைத்து நிற்கும் ஒரு நிகழ்வாகும்.

## பிரதமரின் இலக்கிய நயம்

மாநாட்டின் இறுதி நாளன்று, அலங்கார ஊர்திகளுடன் மதுரை நகரமே ஒரு மனிதனாக எழுந்து நடப்பது போல் தோன்றிய மகத்தான ஊர்வலத்தைப் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பார்வையிட்டார்.

நிறைவு விழாவில் பேசிய பிரதம மந்திரி ,தமிழில் முன்னைப் பழமையையும், அதன் இலக்கிய வளத்தையும் குறிப்பிட்டார். பேச்சு மொழிக் கும், இலக்கியத்திற்கும் இடையே வேற்றுமை இல்லாத ஒரே மொழி தமிழ் என்றும் அவர் சிறப்பித்தார். அரிசி என்ற தமிழ்ச் சொல், ஆங்கிலத்தில் 'ரைஸ்' என்று உருவானதையும் 'மாங்காய்'. 'மாங்கோ' என்று மாறியதையும் அவர் குறிப்பிட்டார். தமிழ் மொழியும், தமிழ்ப் பண்பாடும் புதுக்கருத்துக்களுக்கு எப்போதுமே செவி சாய்த்திருக்கின்றன. என்பதையும், பண்டைய பேரரசு வர்த்தகத் தொடர்பு வைத்திருந்ததையும், ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று கணியன் பூங்குன்றனார் மூலம் தமிழரின் விரிவான கண்ணோட்டம் புலப்பட்டதையும் திருமதி காந்தி பாராட்டினார். தமிழ்இலக்கியங்கள், இதர நாடுகளுக்குச் சென்றதையும், ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை, கம்பூச்சிய நாட்டில் (கம்போடியா), கலாச்சாரத் துறையில் ஆதிக்கம் செலுத்தி வருவதையும், பிரதமர் குறிப்பிட்டார். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், வெளிநாட்டவர் எழுதிய வரலாற்றுக் குறிப்புக் களில், தென்னிந்தியா பெரும்பாலும் இடம்பெறவில்லை என்றும் பிரதமர் வருத்தப்பட்டார். குறுகிய போக்கைக் கை விட்டு, பல புதிய மொழிகளைக் கற்க முன்வருமாறு அவர் மக்களை கேட்டுக் கொண்டார். ஒரு 'தாய்' தன் குழந்தையிடம் ஒரே மொழியில் தான் பேசுவாள். ஆனால் பூமித் தாய்க்கோ, வேறு வேறு மொழிகளைப் பேசும் ஏராளமான குழந்தைகள் இருக்கிறார்கள். ஆகையால் 'எல்லா மொழிகளையும் கௌரவிக்க வேண்டும்' என்று பிரதமர் இலக்கிய நயத்தோடு குறிப்பிட்டார். இதே போல் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கூட்டத்தில் பேசிய திருமதி காந்தி கணியன் பூங்குன்றனின் குரலில் இப்படிப் பேசினார்:

''உலகச் சகோதரத்துவம், பரிவுணர்வு ஆகிய நெறிகள் பாரதத்தின் அடிப்படை லட்சியங்களாகும். உலகின் அமைதிக்கு இவை அவசியம். பல்வேறு நாடுகளில் மக்களிடையே சகோதரத்துவம் பரிவுணர்வும் ஏற்பட, இத்தகைய மாநாடு உதவுகிறது.

## உலகத் தமிழ் மாநாட்டில் உலகளாவிய ஆய்வு

உலக மொழிகளில் கடந்த இரண்டாயிரத்து நூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து மக்களிடையே பேச்சு வழக்கில் இருந்து வருகின்ற மொழிகள் சீனமும், தமிழும். மனிதர் களிடையே கருத்துப் பரிமாற்றத்தின் கருவி மொழி என்ற தகுதிக்கு மீறி தமிழோடு சில வரலாற்று நினைவுகள் பின்னி பிணைந்துள்ளன.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் இந்தியா வின் தமிழ் நாட்டிலும், இலங்கையின் வட பகுதியிலும் தொன்று தொட்டு வாழ்ந்து வருகின்றனர். தொழில் நிமித் தம் குடியமர்ந்த வகையில் மலேசியா, சிங்கப்பூர், பர்மா இந்தோனேஷியா போன்ற கிழக்காசிய நாடுகளிலும், மோரீசியஸ், யூனியன், பிஜி போன்ற திவுகளிலும் தென்னாப் பிரிக்காவிலும் பெருத்த எண்ணிக்கையில் வாழ்ந்து வருகின்ற னர். சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளின் தேசீய ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியா ஒரு தொன்மையான நாடு. அதைனைப் பற்றி அறிவுத் தாகம் மேலை நாடுகளில் பெருகி வருகின்றது. சமஸ்கிருதம் மூலமாக இந்தியயியலை ஆராய்ந்த மேலை நாட்டு அறிஞர்கள், தற்போது தமிழையும் பிற திராவிட மொழிகளையும் அறிந்தாலே முழு உண்மை புரிதும் என்ப பதை அறிந்துள்ளனர். அதனால் உலகங்குமுள்ள பல்கலைக் கழகங்கள் தமிழ் கற்க, ஆராய முன்வந்துள்ளன.

அத்தகைய , முனைப்புள்ள உலக அறிஞர்கள் பலர் முயன்று அமைத்த நிறுவனம் ''உலகத் தமிழாராய்ச்சி சங் கம்'' ஆகும். இலங்கையைச் சேர்ந்த தனிநாயக அடிகள் இவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

உலகத்து அறிஞர்களெல்லாம் கலந்து கொள்ளும்வகை யில் கருத்தரங்கு, மாநாடுகளை நடத்துவதென்று தீர்மானித் தபடி, மலேசியா நாட்டுக் கோலாலம்பூரில், இந்திய நாட் டின் சென்னை, பிரான்ஸ் நாட்டின் பாரீஸ், இலங்கை நாட் டின் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் முதல் நான்கு மாநாடு கள் நடைபெற்றன. ஐந்தாவது மாநாடு 1981 ஜனவரிமாதம் 4-ந் தேதி முதல் 11-ந் தேதிவரை தமிழ் நாட்டின் மதுரை யில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இருபத்திரண்டு நாடுகளிலிருந்து சுமார் 280 ஆய்வுக் கட்டுரைகள் வந்திருந்தன. அவற்றில் சுமார் 180 கட்டுரை

கள் படித்து ஆராயப்பட்டன. தொடக்க விழா நடந்த நான்காம் தேதி தவிரப் பிற நாட்களில் காலை வேளையில் பேராளர்கள் பார்வையாளர்கள் அனைவரின் முன்னிலையிலும் ஒரு நாளில் மூன்று அல்லது நான்கு கட்டுரைகள் வீதம் வாசிக்கப்பட்டன. பொது முக்கியத்துவம் வாய்ந்த கட்டுரைகள் இங்கு இடம் பெற்றன. இங்கேயும் கட்டுரைகள் மீது விவாதங்கள் இருந்தன.

பிற கட்டுரைகள் பொருள்வாரியாகப் 16 பகுதிகளாக பிரிக்கப்பட்டுத் தனித் தனி அறைகளில் படித்து ஆராயப் பட்டன. பொருள்வாரி விவரம் வருமாறு.

1. மொழியும் மொழியியலும்
2. தொல்லியல்
3. கலையும் கட்டிடக் கலையும்(படிமக் கலை, ஓவியம்)
4. இசையும் நாட்டியமும்
5. நாடகம்
6. வரலாறு
7. இலக்கியம்
    அ. தொன்மைக்காலம் (கி.பி. 60 வரை)
    ஆ. இடைக்கால முற்பகுதி (கி.பி. 600 முதல் 1200வரை)
    இ. இடைக்காலப் பிற்பகுதி (கி.பி. 1200 முதல் 1800 வரை)
    ஈ. தற்காலம் (கி.பி. 180க்குப் பின்)
    உ. கல்வி.
8. ஒப்பீட்டு இலக்கியம்
9. குழந்தை இலக்கியம்
10. நாட்டுப் பாடலும் நாட்டுப்புற இயலும்.
11. வெளிநாட்டு இலக்கியம் (இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பிஜி, இழ்ந்தோனேஷியா, மொரீசியஸ், தென்னாப்பிரிக்கா முதலானவை.)
12. மதமும், மெய்ப்பொருளியலும்
13. அறிவியல் தமிழ்
14. சமூகவியல்
15. மொழி பெயர்ப்பும் அகராதிக் கலையும்
16. பிற

பல புதிய அரிய செய்திகளை இக்கட்டுரைகள் தெரிவித்துள்ளன. ஆராய்ச்சியாளர்கள் தத்தம் ஆராய்ச்சிக் கட்டுரைகளை முன்னரே அனுப்பி விட்டனர். ஒரு பொறுக்குக் குழு அவற்றை படித்துப் பகுத்து பொருள்வாரியாகத் தேர்ந்தெடுத்தது.

## பிரதமர் அளித்த கௌரவம்

பல்கலைக் கழக வளாகத்திலிருந்து, கலை நிகழ்ச்சிகள் நடைபெற்ற மதுரை நகரம்வரை போக்குவரத்து வசதிகளுக்காகத் தனிப் பேருந்துகள் ஏற்பாடு செய்திருந்தனர். இறுதி நாளில் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பேராளர்களைத் தனி விழாவில் ஒரு ஓட்டலில் சந்தித்து, பாராட்டுகளைத் தெரிவித்ததை உள்நாட்டு வெளிநாட்டுப் பேராளர்கள் தமக்களிக்கப்பட்ட விசேஷ கவுரவமாக மதித்தனர்.

கருத்தரங்கின் நடுவில் தேக்கடி, பழனி, கொடைக்கானல் ஆகிய ஊர்களுக்கு ஒருநாள் சுற்றுப்பயணம் அழைத்து சென்றனர். கருத்தரங்கு முடிந்தபின், வெளிநாட்டுப் பேராளர்களில் 300 பேரை தமிழ்நாட்டின் முக்கிய இடங்கள் பலவற்றிற்கு முதல் வகுப்புகள் மட்டும் கொண்ட தனி ரயிலில் அழைத்துச் சென்று காட்டி ஐந்து நாட்கள் முடிவில் சென்னையில் விடுத்தனர்.

தமிழகத்திலுள்ள பல்வேறு கல்லூரிகளும், பள்ளிகளும் அவர்கள் செலவில் பார்வையாளர்களை அனுப்பியிருந்தன. அவர்கள் தங்குவதற்கு ஒரு சில பள்ளிகளும், கல்லூரிகளும் திறந்து விடப்பட்டிருந்தன.

## தொல்காப்பிய அரங்கம்

காலை கூட்டரங்கு நடப்பதற்கென ஒரு பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. தொல்காப்பியர்' பெயரில் இந்த அரங்கம் இருந்தது. பார்வை யாளர்கள் பெருத்த அளவில் வந்திருந்ததால் அரங்கம் முழுக்க நிரம்பி வழிந்தது.

மாநாடு வெற்றியா, தோல்வியா என்று கணிக்க, அரங்கேறிய கட்டுரைகளே உரைகல்லாக இருக்க முடியும். அந்த வகையில் பல அரிய கட்டுரைகள் வந்துள்ளன. ஒருசில கட்டுரைகள் தரும் செய்திகளை மட்டும் காணலாம்.

## தமிழும் பிறமொழிகளும்

தமிழ் மொழியோடு உறவுள்ள பிற மொழிகள் பற்றிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை. டோக்கியோ, காகுசூயின் பல்கலைக் கழகத்தின் ஜப்பான் மொழிப் பேராசிரியர் சுசுமு ஓனோ என்பவர் இரண்டு மொழிகளுக்கும் உள்ள உறவினை எடுத்து ரைத்தார். ஜப்பான் மொழியில் வழங்கி வருகின்ற 500 சொற்களைத் திரட்டிப் பட்டியலிட்டுக் காட்டி, அவை தமிழ் மொழியிலிருந்து பெறப்பட்டவை என்று அறிவித்தார். விகம், அகல், அகவு, அங்கலாய், அசடு, அசங்கு, அசை,

அச்சு, ஆடு போன்ற பட்டியல், அவரது கட்டுரையின் தனிச் சிறப்பு. ஜப்பானிய மொழி, தமிழைப் போலவேஒட்டுநிலை விகம், அகல், அகவு, அங்கலாய், அசடு, அசங்கு, அசை, அச்சு, ஆடு போன்ற பட்டியல், அவரது கட்டுரையின் தனிச் அமைப்பைக் கொண்டது. பெயர்ச் சொல்லுக்கு முன்னர் பெயரடைகளும், வினைச் சொற்களுக்கு முன்னர் செயப்படு பொருளும், வருகின்றது; அ, இ, உ என்ற மூவகைச் சுட்டு ஜப்பான் மொழியில் உள்ளது. தொடர்ந்து ஆராய்வதற் கான கருத்துச் செறிவுள்ள கட்டுரையாகும்.

செக்கோஸ்லோவோக்கியாவின் பிராகா பல்கலைக் கழ கத்துப் பேராசிரியர் ஜே. வாசக் தமது ஆய்வுரையில், தமி ழுக்கும் அல்டாய்க் மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மங்கோ லிய மொழிக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளை எடுத்துக் காட்டினார். சுமார் இருநூற்றுக்கும் 'மேலான மங்கோலியச் சொற்கள் தமிழோடு பொருந்தியிருப்பதாக அவர் அறிவித் தார். அப்பா, தீ என்ற சொற்கள் அப்ப என்றும் தீய் என்றும் மங்கோலிய மொழியில் வழங்குவதை எடுத்துக்காட்டினார். இவற்றை வெறும் மொழி உறவுகள் என்று மட்டும், கொள் ளாமல், ஒரு கலாச்சாரப் பின்னணியுள்ளதென்று உணர்ந்து, அதன் பின்புலத்தை ஆராய வேண்டுமென்றார். திரு. சுப் பையா அவர்களின் ''தமிழ்மொழி'' என்ற கட்டுரையும் வாசிக்கப்பட்டது.

## ஆப்பிரிக்காவும்—தென்னிந்தியாவும்

ஆப்பிரிக்காவிற்கும், தென்னகத்திற்கும் உள்ள உறவு களை, செனகல் நாட்டின் டாகர் பல்கலைக் கழகப் பேராசிரி யர் உபாத்தியாயா வெளிப்படுத்தினார். கிரேக்க நாட்டிற் கும் தென்னிந்தியாவிற்கும் உள்ள உறவுகள் பற்றி எல்கி ஜன்னரஸ் என்ற அம்மையாரின் கட்டுரை குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்ததாகும். கி.மு. 283 முதல் கி.பி. 545 வரை ஆன காலகட்டம் அவர் ஆய்வில் இடம் பெற்றது. இக் காலத்திற்கான செய்திகளை நமது இலக்கியங்களில் தவிர வேறு எதிலும், நம் நாட்டில் கிடைக்கவில்லை. அந்தக் குறையை ஈடுகட்டும் வகையில் அவரது கட்டுரை அமைந் திருந்தது.

## சிந்துவெளி மொழி

நேரு உதவி நிதி பெற்று ஆராய்ச்சி செய்தவரான ஐ. மகாதேவன், சிந்துவெளி மொழி பற்றி ஆராய்ந்தார். இன் னும் தெளிவாக அம்மொழியினைப் படிக்க இயலவில்லை. பின்லாந்து, ரஷ்யா போன்ற நாடுகள் இன்னும் முனைந்து கொண்டே இருக்கின்றன. சிந்துவெளி எழுத்துக்கள் வல

மிருந்து இடமாக எழுதப்பட்ட ஓவிய எழுத்துக்கள் ஆகும். அந்த மொழி வழங்கிய காலத்தில் இந்தியாவில் வேறு எந்த மொழியும் வழங்காததால், ஒரு சொல்லாவது, இரண்டு மொழிகளில் காணக்கூடிய வாய்ப்பு இல்லாததால், சிந்து மொழி இன்னும் புதிராகவே உள்ளது. இதில் மகாதேவன் அவர்களின் இப்போதைய கட்டுரை, சேரன், சோழன், பாண்டியன் என்ற சொற்கள் பற்றியதாகும். சேரன் செங்குட்டுவன், சோழன் நலங்கிள்ளி என்ற வாறு பெயருக்கு முன்னால் அடைமொழிச் சொல் வருகிற முறை பிற்காலத்தில் இராசராச சோழன் சுந்தர பாண்டியன் என்று பின்னால் வருகிற முறைக்கு மாறிவிட்டது. இச்சொற்கள் சிந்து மொழியில் இடப் பெயர்களாக இருந்திருக்கக் கூடும் என்று பல பட விளக்கங்களுடன் சொற்பொலிவாற்றினார். எனினும் அவரே கூறியபடி, சிந்து மொழி முழுவதும் படிக்கப்பட்ட பின்னரே இதனை உறுதியானதாகக் கொள்ளலாம்.

''சமயங்கள் வளர்த்த தமிழ்'' என்ற தலைப்பைபில் ம.பொ.சிவஞானம் உரை நிகழ்த்தினார்.

பேராசிரியர் மு.அருணாசலம் அவர்கள், இடைக்காலத் தமிழ் இலக்கிய வரலாறை விரிவாக எடுத்துக் கூறினார். திருமதி. கோமளா வரதன் ''அங்கோர் வாட் நினைவாலயங்கள்'' பற்றி ஒரு கட்டுரை வாசித்தார். புத்தனேரி சுப்பிரமணியம் 'கூத்துத் தமிழ்' பற்றியும், முன்னாள் நீதிபதி மகராசன், கம்பர் கவிநயம் பற்றியும் பேசினர்.

தற்போதைய தமிழ் எழுத்துக்களைப் பற்றிக் கருத்தரங்கில் எட்டுக் கட்டுரைகள் வந்திருந்தன. டாக்டர். சாலினி இளந்திரையன், லண்டன் மின்னி யல் பொறியாளர் திரு. தில்லைநாயகம், இலங்கை க.சச்சிதானந்தன், சி. கனகசபாபதி, வீர இராச கோபாலன் முதலானோர் கட்டுரைகள் மாலை ஆய்வரகங்களில் வாசித்து ஆராயப்பட்டன. பொது நூலக இயக்குனர், வே. தில்லைநாயகம் தனது பரிந்துரைப் பிரதிகளை வழங்கினார். எழுத்துச் சீர்மைக்காக கருத்தரங்கில் முன்னால் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் குழந்தைசாமி, சாந்தலிங்க இராமசாமி அடிகளார் உட்பட பல பேரறிஞர்கள் கலந்து கொண்டது எழுத்துச் சீர்மையின் முக்கியத்துவத்தை உணர்த்தும். அதற்கு ஒரு சோற்றுப்பதமாக பொறியாளர் கொடுமுடி சண்முகனின் கட்டுரைக்கு ஒன்பதாந் தேதி நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற காலைக் கருத்தரங்கில் இடமளிக்கப்பட்டது.

எல்லாக் கட்டுரைகளும், தற்போதைய தமிழ் நெடுங்கணக்கில் நெரிசையில் சீர்மையில்லாமையைச் சுட்டிக் காட்டின. அண்மையில் தமிழக அரசின் ஆணையால், ஆ. அய்,

கோ, நெரிசைகள் சீர்மை பெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டின. ஏற்கெனவே இ.ஈ. நெரிசைகள் சீராக உள்ளன. ஒட்டி உள்ள குறிகளை பக்கத்தில் அமைத்தால் போதும். மிகவும் இடர் படுவது உகர, ஊகார நெரிசைகளாகும். அதனை உடைத்து முதல் எழுத்துடன் பக்கத்தில் ஒரு குறியீடு அமைக்கும் முறையை பொதுவாக எல்லாம் கட்டுரையாளர்களும் பரிந் துரைத்தனர்.

உயிர் வரிசையில் நெடில் எழுதக் குறிலுடன் கால் சேர்த் துக் கொள்ளவும் பரிந்துரைக்கப்பட்டது. கட்டுரையாளர் கள் பல ஆதாரங்களோடும், படங்களோடும் விளக்கிக் காட்டி னர். ஐ. ஔ எழுத்துக்களை எல்லோரும் விலக்கினர். இவ் வகை மாற்றங்களால் படிப்போர் சுமை கூடாது என்பதைச் சுட்டிக் காட்டும் வகையில் கரும் பலகையில் எழுதிக் காட்டி னார் கொடுமுடியார்.

சுருக்கமாகச் சொன்னால் 1. உகரத்தை உடைந்து பக்கக் குறியாகச் சேர்க்கையும். 2. உயிர் நெடில்களைக் காட்டக் குறிலுடன் கால் சேர்க்கவும் செய்தால் போதும். தலைவர் தனது பின்னுரையில் எழுத்துச் சீர்மை பற்றி அரசு மேலும் பரிசீலனை செய்யும் என்று குறிப்பிட்டார்.

## ரிச்சர்ட்டு பிராஸ்காவின் தெருக்கூத்து

இறுதி நாள் காலைக் கருத்தரங்கில் பேசியவர்களில் முன்னாள் மதுரைப் பல்கலைக் கழக துணைவேந்தர் வ.சே. குழந்தைசாமி அவர்கள் அறிவியல் வளர தமிழ்நாடு எடுத்துக் கொள்ள வேண்டிய முயற்சிகள் பற்றி விரிவாகக் கூறினார். பெரிய நாயக்கன்பாளையம் கிராமீயப் பல்கலைக் கழகதுணை வேந்தர் மு. அறம் அவர்களும் பேசினார். இந்நாள் மதுரை பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ.சுப. மாணிக்கம் தமது தலைமையுரையில் தமிழ் ஆராய்ச்சிப் போக்கு பற்றியும் பின்பற்ற வேண்டிய புதிய வழிகாட்டி நெறிகள் பற்றியும் குறிப்பிட்டார்கள். தமிழ்இலக்கியங்கள்அமெரிக்கர் தமிழ்நாட்டின் தெருக்கூத்து பற்றி அபிநயங்களுடன் ஆடிப் படித்தார்.

பிற்பகல் ஆய்வரங்குகளிலும் பல நல்ல கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன. அனைத்தையும் பட்டியலிட்டால் பெருகிவிடும் என்பதால் ஒன்றிரண்டை மட்டும் கூறுவோம்.

பொதுவாக இசைக் கருவிகள் பற்றியும், இசை பற்றி யும் பல கட்டுரைகள் வந்திருந்தன.

நாட்டுப் பாடல்கள் பற்றியும், அவற்றினால் அறியப் பெறும் செய்திகள் பற்றியும் சில கட்டுரைகள் வந்திருந்தன.

மலேசியத் தோட்டத் தொழிலாளர்களின் அவலங்களை நாட்டுப்பாடல்மூலம் அறிவதை ஒரு கட்டுரை தெளிவாக்கிற்று.

பரத நாட்டியம் பற்றி சுதாராணி ரகுபதி காலைக் கருத்தரங்கில் செய்முறை விளக்கங்கலோடு தனது கட்டுரைச் செய்திகளைக் கூறினார்.

## இன்னும் சிலர்

பண்டைய வரலாறு கூறும் தொல்லியல் பகுதியில் இரா. நாகசாமி அவர்களின் பூலாங்குறிச்சிக் கல்வெட்டுச் செய்திகள் இடம் பெற்றன. 45 அடி நீளமும் 6 அடி உயரமும் கொண்ட கி.பி. 270-ஆம் ஆண்டுக் கல்வெட்டு இதுவாகும்.

மருத்துவர் காமேசுவரனின், நோய்களின் மூலமாக மக்களின் இனம் காணும் முறை சுவையானதாக இருந்தது.

அறிவியல் பகுதியில் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தாமோதரனாரும், பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் சிவலிங்கமும், மருத்துவர் லலிதா காமேசுவரன் அவர்களும் குறிப்பிடத் தக்கவர்களாவர். மற்றும் திருஞானசம்பந்தம், இரமணி ஆகியோரும் பங்குபற்றினர்.

திருவள்ளுவரும், திருக்குறளும் பற்றிப் பல ஆய்வுக் கட்டுரைகள் வந்திருந்தன. அதன் மொழி பெயர்ப்புகள் பற்றியும் ஆராய்ந்துள்ளனர்.

குறள் பற்றிய வெளி நாட்டறிஞர்களின் குறிப்புரைகளைத் தொகுத்துத் தந்துள்ளார். க.த. திருநாவுக்கரசு.

இலங்கை, மலேசியா போன்ற பிறநாட்டுடன் தொடர்புபடுத்தி ஏராளமான கட்டுரைகள் வந்திருந்தன. ஆப்பிரிக்கத் தொடர்பை அறவாணன் காட்டினார்.

தமிழோடு தொடர்பு கொண்ட பிற இந்திய மொழிகள் பற்றியும் கட்டுரைகள் வந்தன. வடமொழித் தொடர்பு பற்றியும், மராத்தி மொழித் தொடர்பு பற்றியும் கன்னடம் மலையாளம் பற்றியும் கட்டுரைகள் வந்தன.

மொழி பெயர்ப்புக் கலை பற்றியும், அதன் நுணுக்கங்கள் பற்றியும் பல கட்டுரைகள் படிக்கப்பட்டன. குறிப்பாக சட்டத்துறைச் சொற்கள், ஆட்சிமொழிச் சொற்கள் பற்றியும் ஆராயப்பட்டன.

மொத்தத்தில் ஆராய்ச்சிப் போக்கு ஓரளவு வளர்ந்து வருவதை இக்கருத்தரங்கத்திற்கு வந்த கட்டுரைகள் மூலம் அறியலாம். இவை தொகுத்து நூல் வடிவில் அச்சிடப் பெறும்.

தமிழில் உருவாகும் கலைச் சொற்கள், நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. அவற்றைச் சீர்மை படுத்தும் நடவடிக்கை தேவையென்று பல பன்னாட்டுச் சொற்பொழிவாளர்கள் வலியுறுத்தினர். தமிழின் தாயகம் என்கிற வகையில், தமிழ் நாட்டு அரசிற்கு அதிகப் பொறுப்பு உண்டு. இதற்கெனத் தகுந்த ஏற்பாடு ஒன்று உருவாகுதல் இன்றியமையாதது மட்டுமல்ல, அவசரமானதும்கூட.

பொதுவாகப் பல நல்ல கட்டுரைகள் வந்துள்ளதால், இதனை மிகச் சிறந்த பன்னாட்டுக் கருத்தரங்குகளில் ஒன்றாகவே கருதலாம். உலகமெங்குமுள்ள தமிழர்கள் கூடிக் கலந்து, தத்தம் குறை நிறைகளைக் கலந்துரையாடிக் கொண்டதால் ஏற்பட்ட பண்பாட்டுக் கலாச்சாரப் பரிமாற்றம் மிகச் சிறந்த பயன்பாடாகும். தமிழ் கூறும் நல்லுலகம் இவற்றை நன்கு பயன்படுத்திக்கொள்ளும் என்பது திண்ணம்.

## இதயம் பேசுகிறது 18-1-1981

### தமிழன்னையின் தலைமகனே வாழி!

வரலாற்றுச் சிறப்பு மிக்க 'ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு சங்கம் கண்டு தமிழ் வளர்த்த தமிழ் மூதூராம் 'மதுரை'யில் நிகழ்ந்து நிறைவுற்றிருக்கிறது.

இத்தகு தமிழ் விழாவே, உலக அரங்கில் தனிப்பெருமை பெற்றது. உலகில் வேறெந்த மொழிக்கும் இப்படி விழா நடைபெற்றதாகத் தெரியவில்லை.

அதைத் தொடர்ந்து பல அபூர்வச் சிறப்புப் பயன்களும், சிறப்புப் பெருமைகளும் இவ்விழாவில் இடம் பெறச்செய்து, பேரறிஞர் அண்ணாவிற்குத்தானே தகுதிமிக்க வாரிசு என்பதை நிரூபித்துவிட்டார் தமிழக முதல்வர்.

தமிழ்மொழியின் மேம்பாட்டுப் பணியை உலகப் பொது நோக்குடன் உலகின் பல்வேறு பகுதியிலுள்ள தமிழறிஞர்

களின் கூட்டு முயற்சியாய், ஆய்ந்து செயல்படுத்த உலகத் தமிழ்ச் சங்கம் என்று அவர் நிறுவியிருப்பது வரலாற்றுப் பெருமை மிக்கது.

மதுரை கண்ட மூன்று முத்தமிழ்ச் சங்கங்களுக்குப்பின், புதிய எழுச்சியுடன் உலகளாவிய பெருமையுடன் ஒரு தமிழ்ச் சங்கத்தை தோற்றுவித்த பெருமைக்குரியவராகிறார் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள்.

தமிழுக்குத் தொண்டாற்றிய பல பேராளர்களைத் தக்கவாறு கௌரவித்து, தமிழ் மொழிக்கு எடுக்கப்பட்ட இவ்விழாவில் அண்டை மாநில முதல்வர்களுக்கும் ஈடுபாடு ஏற்படுத்தியது; அனைத்துக்கும் சிகரம்போல் பாரதப் பிர தமர் திருமதி இந்திரா காந்தி அவர்களையும் கலந்து கொள் ளச் செய்து தமிழன்னைக்குப் பெருமை சேர்த்தது - இவை இவருடைய உயர்ந்த பொது நோக்கிற்குச் சான்றுகள்.

இப்பெருவிழாவில் தன் சொந்தக்கட்சி உட்பட எந்த அரசியல் கட்சியின் குறுக்கீடுகளும் இடம் பெறவிடாது தவிர்த்த அவருடைய சாதுரியம், கட்சிகளுக்கு அப்பால் நின்று செயல்படும் ஒரு உயர்ந்த தலைவரின் அந்தஸ்துக்கு அவரை உயர்த்திவிட்டது.

இவ்வாறு பல் சிறப்பும் பெற்று, தொல்புகழ் தமிழ்ப் பண்புக்கு நாயகனாகத் திகழும் மக்கள் திலகம் திரு எம்.ஜி. ஆர். அவர்களை 'என் தலைமகனே நீவாழி! எனத் தமி ழன்னை வாழ்த்திப் பெருமிதத்தில் பூரிக்கின்றாள்.

## இதயம் பேசுகிறது 11-1-1981

### தமிழஞ்சலிக்குத் தயக்கமேன் ?

தமிழகத்தில் தமிழர் திருவிழா, உலகம் புகழக் கோலா கலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த மகத்தான தமிழ் விழாவான ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு, தமிழின் மகிமையையும் தமிழரின் பெருமை யையும், தமிழகத்தின் சிறப்புக்களையும் தமிழ்நாட்டில் மட்டு மல்லாது, பாரத தேசம் முழுவதும் மட்டுமல்லாது, அகில உலகத்திலும் பரப்ப நாம் எடுக்கும் விழா.

விழாவைத் தமிழ் அரசு நடத்தினாலும் இது ஒவ்வொரு தமிழருடைய வீட்டுத் திருவிழாவாகும். அதனால் ஒவ்வொரு தமிழரும் தமிழன்னைக்குத் தம் தமிழ் அஞ்சலியை பூரிப்புடன் செலுத்தி விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

விழாவில் நடைபெறும் தமிழ் இலக்கிய ஆய்வுகள்-பேருரைகள் தமிழ்ப் பண்பாட்டை துலங்கச் செய்யும் கலை விழாக்கள்...இப்படி சங்கம் வளர்த்த மாமதுரை நகரில் தமிழ்சங்க நாதம் முழங்கிக் கொண்டிருக்கிறது. சிங்கத்தமிழரெல்லாம் சிரம் நிமிர்ந்து பெருமிதத்தோடு விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

**மயன்** **ஜனவரி, 21-31, 1981**

பால்கேட்டால்—மதுரைக்குப் போய்விட்டது'
பழம் கேட்டால்—மதுரைக்குப் போய்விட்டது'
மக்களும் போய்க்கொண்டே இருந்தார்கள்...'
வெறும் தமிழ் மாநாடா...? இல்லை,
தமிழ்த்திருநாள்'

பாதியில், பாதையோரத்தில்..நின்று கையசைத்து.... வண்டியை நிறுத்தி மதுரைக்கு வந்தவர்கள், பலர், எங்கு பார்த்தாலும் மக்கள் வெள்ளம்'

இரவு பகலாய் மாறியது'—சங்கீதம்
மகிழ்ச்சி ஆரவாரம்'
இனிதே ஆரம்பித்து, செவ்வனே நிறைவு பெற்றது,
சரித்திரம் கண்டிராத தமிழ்த் திருவிழா—

**மஞ்சரி** **பிப்ரவரி, 1981**

### தமிழன்னை திருவிழா

தமிழகத்தின் தலைநகராகச் சென்னை விளங்கிய போதிலும் என்றைக்கும் தமிழுக்குத் தலைநகராகத் திகழ்வது மதுரை. இத்தகைய மூதூரில் ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடத்தியது பொருத்தமானதே.

மகாநாட்டுக்கு வந்தவர்களையெல்லாம் மாநகரின் ஐம் பெருஞ்சாலைகளில் சேர சோழ, பாண்டியர், நக்கீரர், அங் கயற்கண்ணி ஆகியோரின் பெயரால் புதிதாக அமைத்திருந்த தோரணவாயில்கள் வரவேற்றன. தமிழ் வளர்த்த சான்றோர் தொல்காப்பியர் முதலான பதினான்கு பேர்களுக்குச் சிலை கள் நகரின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

நிறைவு விழாவன்று மகாநாட்டின் உச்சகட்டமாக அலங்கார வண்டிகளின் ஊர்வலக்காட்சி அமைந்தது.

1981 ஜனவரி 4 ஆம் தேதி தொடங்கி ஏழு நாட்கள் நடந்த இந்தப் பெருவிழா உலகின் கண் தமிழின் தமிழகத் தின், தமிரசின் மதிப்பை வெகுவாக உயர்த்திவிட்டது என்று கூறினால் மிகையாகாது.

## கல்கி 1-2-1981

### தேமதுரத் தமிழும் மாமதுரை மாநாடும்

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு சீரோடும் சிறப்போடும் நடந்து முடிந்தது. ஆட்காட்டி விரலை நீட்டி எந்தப் பகை வரும் குற்றம் சொல்ல முடியாதபடி குழப்பமோ விபத்துக் களோ இல்லாமல், இத்தனை லட்சம் மக்கள் மதுரையிலே ஒன்று கூடி இவ்வளவு ஆனந்த நிறைவோடு, நிரம்பி வழிந் தார்கள் என்றால், அது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு பெரிய நிகழ்ச்சிதானே!

உலகத் தமிழ் மாநாட்டின் ஒரு பெரிய சிறப்பு என்ன வென்றால், லட்சக்கணக்கான தமிழ்மக்கள், முக்கியமாகத் தென்பகுதி மக்கள், மதுரை நகரிலே கூடி, ஒரு பெரிய திரு விழாவிலே கலந்து கொண்ட ஆனந்தத்தொடு கூடிப் பிரிந் தார்கள். இத்தனை லட்சம் மக்களும் ஒரே காலத்தில் இப்படி ஓர் ஆனந்தக் களிப்பிலே மூழ்கித் திளைப்பதற்காகவே இப்படி ஒரு திருவிழாவை நடத்தலாம்! இதைவிட வேறு பயனே இந்த ஜனநாயக யுகத்தில் வேண்டியதில்லை என்று பட்டது!

ஆனால் உண்மையில் வேறு பல நிலையான பயன்களும் மதுரை மக்களுக்கும் இந்தத் திருவிழாவினால் ஏற்பட்டுள் ளன.

சாறெல்லாம் வளர்க்கும் வீதி!
தமிழெலாம் வளர்க்கும் மன்றம்!

என்று ஒரு நாட்டின் நல்லாட்சிக்கு இலக்கணம் கூறுகிறது தமிழ் இலக்கியம். ''சாறு'' என்றால் திருவிழா. ''தமிழ் எல்லாம்'' என்றால் மூன்று தமிழும் அதன் விரிவுகளும்! நன்னல நாட்டிலே அழகு வீதிகள் எல்லாம் விழாக்களை வளர்க்கும் வீதிகளாகவும், மன்றங்கள் எல்லாம் தமிழையும் தமிழ் இயல்புகளையும் வளர்க்கும் மனறங்களாகவும் விளங்க வேண்டும். மதுரை நகரம் உலகத் தமிழ் மாநாட்டினால் இந்த வளர்ச்சியைக் கண்டது.

பொதுமக்களின் களிப்புக்கு என்று இந்த மாநாட்டிலே முக்கியமாகத் திகழ்ந்தவை மூன்று வகை என்றேன். முதலாவது பிரிவிலே கலை இலக்கிய நிகழ்ச்சிகளைச் சொல்ல வேண்டும். இரண்டாவது வகையிலே அடங்கும் காட்சி வரிசைகள், மூன்றாவது சொல்ல வேண்டியது, பத்தாந்தேதி நடைபெற்ற ஊர்வலம்! தமிழ் அன்னையின் எழில்மேனியை இலக்கிய அணிகலன்களால் அலங்கரித்த தமிழ்ப்புலவர்களும், சங்கத் தமிழ்க் காட்சிகளும், இலக்கியச் சிற்ப ஓவியங்களும்- எல்லாம் ஊர்தி ஊர்தியாக அணிவகுத்து அசைந்து வந்த காட்சி நேர்த்தியாக இருந்தது. ஊர்திகளுக்கு இடையிடையே தமிழகத்தின் வழிவழி இசையும், கலைகளும், ஆடல்பாடல்களும், மாணவ மாணவியரின் பயிற்சி அணிகளுமாகக் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன! இந்த மூன்று வகையான கலைக்களிப்புக்களும் தவிர, இந்த மாநாட்டை ஒட்டி ஒரு திரைப்படம் எடுத்து அதையும் வெளியிட்டிருக்கிறார்கள். பொதுமக்களுக்கு என்று வெளி வந்தபோதிலும் இந்தத் திரைப்படம் ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்கு விருந்தாக அமைந்திருப்பதால், இதைத் தனியாகவே குறிப்பிட வேண்டும்.

இதெல்லாம் தமிழ் மாநாடு என்ற முறையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகள். ஆனால் வெறும் தமிழ் மாநாடு இல்லையே இது! உலகத் தமிழ் மாநாடு அல்லவா! அதற்கு ஏற்ப அனைத்துலக வண்ணத்தையும் இந்த மாநாட்டுக்குத் தந்தது பல்கலைக் கழக விளாகத்திலே நடந்த ஆய்வுக் கருத்தரங்காகும்.

**கல்கி** **25-1-1981**

ஒரு மாபெரும் தமிழ்த் திருமணம் மாபெரும் முறையிலே கூடல் மாநகரிலே கூடி மங்களமாக நடந்தேறியது என்று பெண் வீட்டாரைப் போலத் தமிழக அரசு மெய்யாகவே மகிழ்ச்சி அடையலாம் அந்த மகிழ்ச்சியோடு,

வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

என்று மனமார வாழ்த்திடலாம்.

## குமுதம் 15-1-1981

திருவிழாக்களுக்குப் பெயர்போன நகரத்தில் மிகப் பெரும் திருவிழா.

நான் மாடக் கூடலில் எட்டுத் திசைகளிலிருந்தும் தமிழ் அறிஞர்கள் வந்து குழுமுகிறார்கள். தமிழ்அறிஞர்களுக்கும், மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் நல்வரவு கூறுவோம். அவர்கள் செலவழிக்கும் நேரம் பயனுள்ளதாக, இனிமை நிறைந்ததாக இருக்கும் என்று எதிர்பார்ப்போம்.

### மற்றொரு சிறப்பு

சென்னை மாநாடு, இந்திய ஜனாதிபதி டாக்டர்ஜாகீர் உசேனால் துவக்கி வைக்கப்பட, மலேசியப் பிரதமர் துங்கு அப்துர் ரஹமான் கோலாலம்பூர் மாநாட்டில் கலந்துகொண்டார். மதுரையில் இந்தியப் பிரதமர் இறுதி நாளன்று பங்கு கொள்கிறார். மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

தமிழில் அக்கறை உள்ளவர்கள் பல்வேறு கண்டங்களிலிருந்து வந்து கலந்து கொள்கிறார்கள் என்ற உற்சாகமே, மாநாட்டுக்கு ஒரு திருவிழாச் சூழலைத் தந்துவிடும். தவிரவும் பொதுமக்களைக் கவரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் அவர்களுக்குக் குதூகலம் அளிக்கும் என்பது உறுதி.

## குமுதம் 8-1-1981

உலகத் தமிழ் மாநாட்டில் மற்ற மாநிலத் தலைவர்களும் அக்கறை காட்டியது ஒரு தனிச் சிறப்பு. கர்நாடகத்தின் சார்பில் முதல்வர் குண்டுராவ் கலந்து கொண்டார். கேரள முதல்வர் நாயனாரும் பங்கு கொண்டார்.

ஆந்திர முதல்வர் அஞ்சையாவும் அங்கம் வகித்தார். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல், இறுதியாகப் பிரதமர் இந்திரா காந்தி வருகை புரிந்தார்.

தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் மிக வலுவான கடந்த காலம் இருப்பதைப் போல மிக உயர்வான எதிர்காலமும் இருக்கிறது என்பதை இவையெல்லாம் சுட்டிக் காட்டுகின்றன என்று கூறுவது தவறாகுமா? ஆகாது.

தமிழ் ஆர்வமும் தமிழ்ப்பற்றும் வேரோடியுள்ள இந்த மண்ணில் குறுகிய நோக்குக்கும் சிறுமையான எண்ணங்களுக்கும் இடம் கிடையாது என்பதற்கு மதுரை ஓர் உதாரணம். விரிந்த மனப்பான்மைக்கு இலக்கணமாகத் தமிழ்நாட்டைப் பிறர் மதிக்கிறார்கள் என்பதற்கும் மதுரை மாநாடு ஓர் எடுத்துக்காட்டு.

**அலிபாபா** **18-1-1981**

## பட்டியல் போட்டால் மிஞ்சுவது சிறப்பே

தேமதுரத் தமிழோசை மாமூதூர் மதுரையில் ஏழுநாட்கள் தொடர்ந்து ஒலித்தது.

எங்கு நோக்கினும் மாந்தர் கூட்டம், திக்கெல்லாம் தமிழ் முழக்கம், இனிவருமோ இந்த விழா என்றோரு ஏக்கத்தை தேக்கிய பின் மக்கள் விழா நிறைவு பெற்றது ஜனவரி 10ம் நாள்.

அன்று ஆண்ட புவியரசர்கள், கவியரசர்கள் முன் தலை வணங்கி நின்றதைப் போலவே இன்று ஆளும் எம்.ஜி.ஆர். நடந்து காட்டினார்.

மக்கள் வரிசையில் அமர்ந்திருந்து, பட்டிமன்ற, கவியரங்க, அறிஞர்களுக்கு உற்சாகம் பெருகிட ஊற்றுக்கண்ணாக தன்னிடமே மாற்றங் கண்டார் தமிழக முதல்வர்.

புலவர்களுக்கு பொன்னாடை போர்த்தி அவர்களையும் அவர்கள் வளர்க்கும் தேன் தமிழையும் பாராட்டி வணங்கினார் மக்களாட்சியின் முதல்வர்.

உலகத் தமிழ்ச்சங்கம் உதித்ததுகாண் இன்று என்றொரு அறிவிப்பை செவிகுளிரச் செய்தார், அமைதிப் புரட்சியில் நாட்டங் கொண்டிருக்கும் நாயகர்.

உலக மாநாடு எதன் பெயரில் நடந்தாலும் அரசியல் வாடை இல்லாது போகாது!

மாநாட்டை முன்னின்று நடத்திய தமிழக முதல்வர் இந்த வாடைக் காற்று சூறாவளியாகாமல் அவ்வப்போது தடுத்தார் என்பதே மாநாட்டிற்கு பெருமை செய்வதாக இருக்கிறது!

ஒட்டு மொத்தமாக பார்க்கும்போது மதுரை தமிழ் விழா மாபெரும் மக்கள் திருவிழாவாகவே இருந்தது!

முன்னின்று இதை நடத்திய முதல்வர் பாராட்டுக் குரியவர்!

அவரது அயராத பணியும், தலைமையும் தமிழ் விழா வின் இடத்தை வரலாற்றில் பொறித்துவிட்டது.

உலகத்தமிழ் நெடிதுயர்ந்து நிற்கிறது.

தமிழகத்திற்கும் மாமதுரைக்கும் இந்த நூற்றாண்டின் மணிமகுடம் இந்த மாநாடு தான்.

## அலிபாபா 11-1-1981

### வைகையிலே தமிழ் வெள்ளம்!
### உவகையிலே துள்ளுதே தமிழ் உள்ளம்!!

''இடிப்படை வானவன் முடித்தலை உடைத்த, தொடித் தோள் தென்னவன்'' ஆட்சி புரிந்த பாண்டியர் கோநகர் இன்று மீண்டும் புதுக்கோலம் பூண்டிருக்கிறது.

''ஆயிரங் கண்ணோன் அருங்கலச் செப்பு வாய் திறந் தன்ன'' மதுரை மாநகர் காட்சியளிக்கிறது என்று அன்று இளங்கோ வடிகள் வர்ணித்தது இன்றும் பொருந்தும் வகை யில் உலகத் தமிழ் மாநாட்டை முன்னிட்டு நகரமே பொற் கோலம் தரித்து தகதகாய்க்கிறது.

மூன்று சங்கம் கண்ட மூதூரின் அங்கயற்கண்ணி மீனாட் சிக் கொலுவிருக்கும் மதுரை நகரில் இந்திய திருநாட்டின் மீனாட்சி இந்திரா பேசுகிறார்.

மதுரை என்றாலே இலக்கியச் செல்வர்களுக்கு நாஇனிக் கும்: செவியில் குடம் தேனை கவிழ்த்தது போலிருக்கும்.

வைகை சலசலத்து ஓடிவரும் ஓசை செவிமடுத்து, பொதிகை தென்றல் ஆடிவந்து மேனிதழுவ பிறை மாடத்

தில் விளக்கேற்றி தலைவன் வரவுக்கு விழி வைத்து காத்திருக்கும் பெண் கொடி படர்ந்திருக்கும் சங்க இலக்கிய காட்சிதனை தந்த திருநகரன்றோ மாமதுரை.

இலக்கிய மணம் கமழும் அத்திருவூரில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்துவது ரசனை மிக்க வரலாற்று சம்பவந் தான்!

உலகத் தமிழ் விற்பன்னர்கள் அனைவரும் ஒன்றுபட்டு கூடும் இந்நாளில் மீண்டும் ஒரு புதுச் சங்கம். நான்காம் தமிழ்ச் சங்கம் அமைக்கின்றார் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். இதுவும் ஒரு வரலாறன்றோ

## ஆனந்தவிகடன் 18-1-1981

### தேமதுரத் தமிழோசை

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் தமிழ்த் திருவிழாவாகக் கருத்தரங்குகள், கண்காட்சிகள், பட்டி மன்றங்கள், பாவலர் அரங்குகள் என்று ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு அமர்க்களப்பட்டது. உலகம் முழுவதிலுமிருந்து தமிழர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆராய்ச்சியாளர்கள் என்றுமாநாட்டைச் சிறப்பிக்க வந்த கூட்டம் கண்டு மதுரை நகரமே திணறி விட்டது.

இளவேனிற் காலத்தில் சித்திரைப் பெருவிழாவின்போது சீரும் சிறப்பும் பெற்றுக் கலகலப்பாகக் காணப்பெறும்மதுரை இப்போது மார்கழியிலேயே மற்றொரு பெருவிழாக் கண்டு விட்டது. மதுரை நகருக்கே ஒரு புதுப்பொலிவும் வளமும் சேர்ந்துவிட்டது.

மதுரை நகரத்துத் தெருக்களில் ஒரு புதுமைமிளிர் கிறது. குடிசைப் பகுதிகளிலும் புதிய சாலைவசதிகள். ஒரு புதிய நகரத்தைப்போல் மின் அலங்காரங்கள், தோர ணங்கள்.

மாநாட்டின் தொடக்கவிழ ஜனவரி 4ம் தேதி மாலை யிலே நடைபெற்றாலும், மதுரை நகருக்குள் நுழைவோரை வரவேற்கும் 'தோரண வாயில்கள்' திறப்பு விழா நிகழ்ச்சி கள் அன்று காலையில் ஐந்து இடங்களில் ஒரே நேரத்தில் நடைபெற்றன.

அன்று மாலை தொடக்க விழா நிகழ்ச்சிகள் நடைபெற்ற ரேஸ் கோர்ஸ் மைதானம் வள்ளுவர் அரங்கம்' எனப் பெயர்

பெற்றது. அந்த அரங்கத்தில் திறந்தவெளி மைதானம் ஒன்றும், 30,000 பேர் அமர்ந்து பட்டிமன்றம், வழக்காடு மன்றம், கவியரங்கம் முதலியவற்றைக் கண்டுகளிக்கும் மூவேந்தர் அரங்கு ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தன. இந்த அரங்கு மதுரைத் திருநகரின் கோபுரங்களைப் பிரதிபலிக்கும் வண்ணம்—அதே நேரத்தில் அரண்மனை நுழைவாயில் போன்ற அமைப்புடன்—தஞ்சைக் கலைஞர்களைக் கொண்டு தென்னங்கீற்றினால் அழகுற அமைக்கப்பட்டிருந்தது.

பந்தயத் திடலை ஒட்டி அமைந்திருந்த உயர்ந்த கட்டடங்களான நீதிமன்றம், தமிழிசைச் சங்கம், மாநகராட்சி அண்ணா மாளிகை எல்லாம் சரவிளக்குகளால் அலங்கரிக்கப் பெற்று ஒளிவிளக்குகளால் மின்னின. மார்கழி மாதம் பனிக் காலம் என்றாலும் இரவு பன்னிரண்டு மணிவரை தொடக்க விழா நிகழ்ச்சிகளைக் காணக் குவிந்திருந்த மக்கள் கூட்டத்தின் ஆர்வம் நினைந்து போற்றுதலுக்குரியது.

தமிழக ஆளுநர் சாதிக் அலி தலைமை தாங்கிட, தொடக்க விழா நடைபெற்றது. ''புதிய கலைகளும், அறிவியலும் இந்நாளில் பெருகி வளர்ந்துவருகின்றன. இவையனைத்தும் காலத்தின் விளைவாகும். புதிய சிந்தனைகளையும் புதிய அறிவுத் துறைகளையும் கற்றுக் கொள்ளும் வண்ணம் புதிய சொற்களுக்கும் புதிய கருத்துக்களும் தன்னிடம் வந்து சேரும் வகையில் தமிழ்மொழி இடம் தரவேண்டும்'' என்று ஆளுநர் தமது உரையில் குறிப்பிட்டார்.

தொடக்க விழாவில் வந்திருந்த அனைவரையும் கவர்ந்தவர் ஸ்காட்லாந்து நாட்டிலிருந்து வந்திருந்த ஆஷர் என்ற ஆங்கிலேயர்தான். 'வணக்கம்' என்று தொடங்கித் தமிழின் சிறப்பையும் பெருமைகளையும் அவர் எடுத்துரைத்தபோது வியக்காதவர்களே இல்லை. ''மாடு கட்டிப் போராடித்தால் மாளாது செந்நெல் என்று—யானை கட்டிப் போரடித்த அழகான தென்மதுரை'' என்று மதுரையின் பெருமையை அவர் சுட்டிக் காட்டியபோதும், ''யாதும் ஊரே யாவரும்கேளிர்'' என்று கூறியபோதும் கூடியிருந்தவர்கள் எழுப்பிய கரவொலி அடங்க வெகுநேரமாயிற்று.

மதுரைத் திருநகரில் உலகத் தமிழ்ச் சங்கம் தமிழக அரசின் சார்பில் விரைவில் அமைக்கப்படும் என்ற தமிழக முதல்வரின் அறிவிப்பு, கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் நெஞ்சங்களில் இன்பத் தேனைப் பாய்ச்சியது.

## கருத்தரங்குகள்

உலகத் தமிழ் மாநாடு அகம் புறம் என இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அகம் சார்ந்த ஆய்வுக் கருத்தரங்குகள் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் தொல்காப்பிய அரங்கில் நடைபெற்றன.

இந்த அரங்கில் தினமும் பேரறிஞர்கள் இருவர் அல்லது மூவர் உரைநிகழ்த்தினார்கள். மதிய உணவுக்குப் பின் 13 அறைகளில் ஒவ்வொன்றிலும் கட்டுரை வாசித்தல் விவாதங் களும் நடைபெற்றன.

'தமிழ் மொழி' என்ற தலைப்பில் முதலாவது கட் டுரையை உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத் தலைவர் ஏ.சுப் பையா ஆங்கிலத்தில் வாசித்தார். தமிழின் தொன்மை இலக்கியமான தொல்காப்பியதத்தின் தனி நிலை சிறப்புக் களை அவர் விளக்கினார்.

டாக்டர் பி.எஸ்.எஸ். சாஸ்திரி என்ற சிறந்த சமஸ் கிருத அறிஞர் தம்முடைய நூலில் தொல்காப்பியத்தின் சிறப்பைக் கூறியிருப்பதையும்; 1925-ல் சர். அசுடோஷ் முகர்ஜீ வெள்ளி விழாமலரில் திராவிட மொழிக் குடும்பத்தில் தமிழ் பெற்றுள்ள சிறப்பை டாக்டர் கில்பர்ட் ஸ்லேடர் விளக்கிக் கூறியிருப்பதையும் எடுத்துக் கூறியது தமிழ் நெஞ் சங்களைப் பெருமைப்படுத்தியது.

தமிழ் எழுத்துக்களின் வரிசை முறையில் உண்டான மாற்றங்களைப் பல உதாரணங்களோடு விளக்கியதோடு, தொல்காப்பியத்தில் வடமொழியாளர்களால் எவ்வாறு மாறு தல் விளைந்தது என்பதைச் சுட்டிக் காட்டிய அவர் 'கங்கைக் காய்களாக' என்ற தொடரில் வருகின்ற ஒவ்வொரு 'க'வும் எப்படி நான்கு வகைகளில் வேறுபட்ட உச்சரிப்பை பெற்று ஒலி மாறுபாடு அடைகிறது என்று அற்புதமான விளக்கம் ஒன்றைத் தந்தார் அவர்.

தமிழ் மொழி வளர்ச்சிக்குத் திட்டமிடுதல் வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், எழுத்துச் சீர்திருத்தம் செய்வதற்கு எளிய முறை ஒன்றையும் குறிப்பிட்டார்.

அடுத்து, 'தமிழ்-ஜப்பானிய மொழிகளின் உறவு' என்ற தலைப்பில் அரிய ஆய்வுக் கட்டுரையினை வழங்கிய ஜப்பா னிய அறிஞர் சுசுமு ஒனொ, அனைவரையும் கவர்ந்திழுத்து விட்டார். இலக்கண அடிப்படையில் தமிழ்-ஜப்பானியமொழி களின் உறவுகளை நூற்றுக்கணக்கான சொற்களைக் கொண்டு விளக்கினார். தமிழில் 'அகம்' என்று சொல்லப்படும்சொல் 'அகா' என்று ஜப்பானிய மொழியில் அதே பொருளில் வருவ தாக அவர் கூறிய வியப்படையாமல் இருக்க முடியவில்லை.

''ஜப்பானிய மொழி தமிழைப் போன்ற ஒட்டுநிலை அமைப்பையே கொண்டது; தமிழைப் போலவே பெயர்ச் சொல்லுக்கு முன்னர் பெயரடைகளும், வினைச் சொற் களுக்கு முன் செயப்படுபொருளும் வருகின்றன.' என்று அவர் விளக்கினார்.

தமிழில் ''இருக்கிறது'' என்ற சொல்லை ''இருக்கிறதா? என்று கேள்வியாக மாற்றுவதுபோல் ஜப்பானிய மொழியில் ''இமாசு'' ''இமாசுகா'' என்று குறிப்பிடுவதையும், இதே போலப் பல உதாரணங்களையும் எடுத்துக்காட்டினார். இவ ரது ஆராய்ச்சிக் கட்டுரையின் சிறப்பு தமிழ்—ஜப்பானிய ஏறத்தாழ 500 சொற்களுக்கிடையேதொடர்பு இருப்பதை எடுத்துக்காட்டியதுதான்!

இந்த அரிய ஒற்றுமையை உணர்ந்து நெஞ்சங்களை நிமிர்த்திக் கொண்டிருந்தபோது, மற்றொரு மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லி, தமிழ் மொழியின தொன்மை குறித்து பூரிப்படையச் செய்தார். இன்னோர் அறிஞர். அதாவது, தமிழுக்கும் அல்டாய்க் மொழிக் குடும்பங்களுக்கும் இடையே கூடத் தொடர்பு இருக்கிறது என்று விளக்கினார் செக்கோஸ் லவோக்கியாவின் பிராகா பல்கலைக்கழகத்து டாக்டர் ஜே. வாசக்.

''ஏறக்குறைய இருநூறுக்கும் மேற்பட்ட சொற்களில் இத்தகைய ஒற்றுமை காணப்படுகிறது'' என்று கூறித் தமி ழிலும் பேசிக் காட்டினார்.

| மங்கோலிய மொழி | தமிழ் |
|---|---|
| அபு (தந்தை) | அப்பன் |
| அங்கா (தங்கை) | தங்கை |
| காரா (கறுப்பு) | கரு அல்லது கறு |

''தமிழிலுள்ள 'தீ' என்ற சொல் 'தீய்' என்ற சொல்லாக மங்கோலிய மொழியில் இடம் பெற்றுள்ளது என்றார் அவர்.

ஆராய்ச்சியாளர்கள் கூடிய இந்தக் கருத்தரங்கில் தென் னாப்பிரிக்கப் பெண்மணி காமாட்சி என்பவர் ஒரு கலகலப் பையுருவாக்கிவிட்டார். ''எங்கள் மூதாதையர் வாழ்ந்தநாட் டில் வந்துபேசும்போது என் நெஞ்சமெல்லாம் இனிக்கிறது. எங்கள் தாய்ப் பண்பாடு மலர்ந்த பூமி என்னும் போது பெரு மையில் பூரிக்கின்றோம். நாங்கள் உங்கள் தூதுவர்களாக அங்கே இருக்கிறோம். எங்களை ஆதரித்து, நாங்கள் அங்கே தமிழ்த் தொண்டு செய்ய உதவுங்கள்'' என்று உருக்கமாக வேண்டினார் அவர்.

கருத்தரங்கிற்கு வருகை தந்த அமைச்சர்கள்—முதலமைச்சரானாலும் சரி—மேடையில் அமராமல் பார்வையாளர்களோடு ஒன்றாகவே அமர்ந்தனர். அந்த எளிமை, அனைவரது பாராட்டையும் பெற்றது.

## முல்லைச்சரம் ஜனவரி, 1981

### வெற்றி மாநாடு!

பெருமைகள் மிகுந்த, வரலாற்றுச் சிறப்புக்கள் இணைந்த மதுரை மாநகரில், வார்த்தைகளால் புகழ முடியாச் சிறப்போடு நடந்து முடிந்தது ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு. உலகே கண்டு வியக்கும் வகையில் நடந்து முடிந்த இம்மாநாட்டின் சிறப்புக்களை, பெருமைகளைப் பார்த்த கண்களும், சுவைத்த மனங்களுமே சாட்சிகளாகும். உலகின் அனைத்து மொழிகளும் தன் முனைப்போடு முன்னேறிச் செல்லவேண்டும் என்ற ஊக்கத்தை இம்மாநாடு உலகிற்கு அளித்தது, உலகம் எங்கிலும் இருந்து வந்த தமிழ் அறிஞர்கள், சுவைஞர்கள் இம்மாநாட்டின் வெற்றிக்குப் பெருமை கூடினர்.

உயர்ந்த வாழ்வியல் கோட்பாடுகளை உடைய தமிழின் பெருமையையும், தமிழர் பெருமையையும் உலகறிய இம்மாநாடு துணை செய்தது. நாம் முன்பே வேண்டுகோள் விடுத்தபடி புலவர்கள் பொன்னாடை போர்த்திப் பெருமை படுத்தப்பட்டனர். முதுபெரும் தமிழ் அறிஞர்கள் பொற்கிழி வழங்கிச் சிறப்பிக்கப்பட்டனர். இத்தகு மாநாட்டின் எத்தகைய குறுகிய வண்ணமும் பூசாமல், வாசனை இல்லாமல், பெருந்தன்மையோடு நடத்தி முடிந்த தமிழக அரசுக்கு மனமார்ந்த நனறியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இம்மாநாட்டினால் கிடைக்கவிருக்கும் நிலைத்த பயன்கள் தொடர்ந்து தமிழ் உலகிற்குக் கிடைக்கவேண்டும் என்று தமிழக அரசினை, கவிதை இலக்கிய உலகின் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம். வாழ்க தமிழ்!

—o—

ஜனவரி, 1982

தமிழரசு அச்சகம்

# பத்திரிகைகளின்
# கண்ணோட்டம்